# சமாதான நோக்கு

மலர் 6 இதழ் 1
2008 ஜனவரி - பெப்ரவரி
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



## போர்நிறுத்த உடன்படிக்கையின் முடிவும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இடைக்கால யோசனையும்






கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து / பேராசிரியர் சுமணசிறி லியனகே / மைத்திரிபால சிறிசேன
திஸ்ஸ அத்தநாயக / சோமவன்ச அமரசிங்க / இரா.சம்பந்தன் / ரவூ:ப் ஹக்கீம் / டக்ளஸ் தேவானந்தா
நல்லையா குமரகுருபரன் / வீ. ஆனந்தசங்கரி / பற்றி வீரக்கோன் / கலாநிதி றொஹான் எதிரிசிங்க
பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண / எரிக் சொல்ஹேய்ம் / பான் கீ மூன் / றொபேட் ஓ பிளேக்
லார்ஸ் ஜே.சொல்பேர்க் / லூயிஸ் ஆர்பர் / ஷெரின் பெர்னாண்டோ / கலாநிதி தயான் ஜயதிலக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டா - செல்வா முதல் ...
# ... சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு வரை



## 1957 ஜூலை: பண்டா–செல்வா உடன்படிக்கை

தமிழையும் அரச கருமமொழியாக்குதல், பிரஜாவுரிமைச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்துதல், வடமாகாணத்திற்கு ஒரு பிராந்திய சபையும், கிழக்கு மாகாணத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிராந்திய சபைகளும் ஏற்படுத்தக்கூடிய சட்ட விதிமுறைகளை தயாரிப்படுத்தல், பிராந்திய சபைப் பிரதேசத்திற்குள் மக்கள் குடியேற்ற முறைகளுக்காக காணிகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

பௌத்த பிக்குகள், ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகியோரின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் கிழித்தெறியப்பட்டது.



## 1965 டட்லி–செல்வா உடன்படிக்கை

வடக்கு, கிழக்கில் அறிக்கையிடல் மொழி தமிழ் மொழியாக இருப்பதற்கு சட்டத்தில் விசேட நடவடிக்கை, மத்திய அரசிற்குட்பட்ட வகையில் மாவட்ட சபைகளை அமைத்தல், காணி அபிவிருத்திச் சட்டமைச் சீர்திருத்தத்தை மேற்கொண்டு வடக்கு, கிழக்கு பிரதேசங்களிற்கு காணி பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பௌத்த பிக்குகளின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது.



## 1985 திம்பு பேச்சுவார்த்தை

தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்தி, அவர்களைத் தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளல், பாரம்பரியத் தாயகத்தை ஏற்றுக்கொள்ளல், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல், பிரஜாவுரிமையை ஏற்றுக்கொள்ளல், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை ஏற்றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் தமிழ்த் தரப்பினால் முன்மொழியப்பட்டன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நோக்கு

ISSN 955-1800-0061

மலர் 6 இதழ் 1 ஜனவரி - பெப்ரவரி 2008

தொலைபேசி : 94 (0)11 2565304/06 தொலைநகல் : 94 (0)11 4714460 மின்னஞ்சல் : cpa@sri lanka.net


## போரும் தீர்வும்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]


[illegible]

[illegible]

[illegible]

[illegible] : EC Ways (Pvt) Ltd. [illegible] - 94 (0) 11 567348[illegible]


[illegible]



## சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இடைக்கால யோசனை...


வரையறையற்ற தளம்பல் நிலையில் சர்வகட்சிப்...
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து 03

தோல்வி காண்பதற்கான மற்றுமொரு சந்தர்ப்பம்?
பேராசிரியர் சுமனசிறி லியனகே 06

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை... 09

கரு சிகனரின் பதிற்குறிகள்... 12

நேர்காணல்:
சட்டவலுவற்ற வெறும் உறுதி மொழிகள்
கலாநிதி மொஹான் எதிரிசிங்க 16

நேர்காணல்:
இறுதியறிக்கை இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை...
பேராசிரியர் திஸ்ஸ விதாரண 20


## போர்நிறுத்த உடன்படிக்கையின் முடிவு...


பயங்கரவாதத்தை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்காமல்...
இலங்கை அரசாங்கம் 26

பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால்...
ஐக்கிய தேசியக் கட்சி 27

உடன்படிக்கையை முழுமையாகக் கடைப்பிடிக்க...
தமிழீழ விடுதலைப் புலிகள் 28

சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயங்கள் 32

நேர்காணல்:
போர்நிறுத்த உடன்படிக்கை ஒரு பைபிள் அல்ல!
ஒஸ்ரின் பெர்னாண்டோ 38

வெற்றிகரமான உடன்படிக்கையின் அம்சங்களை...
கலாநிதி தயான் ஜயதிலக 44






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# வரையறையற்ற தளம்பல் நிலையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு



கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
தமிழில்: கஜேஸ்வரன் பிரசாத்

“ அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் ஒற்றையாட்சி அரசுக் கொள்கையைத் திருப்திப்படுத்தும் தேவை இந்தப் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முழுவதும் காணப்படும் ”

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலப்பகுதியில் எதிர் எதிர் அரசியல் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இடம்பெற்றுவந்தபோதும், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இரு பிரதான கட்சிகளுக்கும் (பொ.ஐ.மு. மற்றும் ஐ.தே.க.) இடையில் தெளிவான ஒரு பொது இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தது. இன முரண்பாட்டுக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பிரேரணைகள் 1995, 1997ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்டு ஓகஸ்ட் 2000 அரசியலமைப்புப் பிரேரணைக்கான முன்வரைபுகள் வெளியானது வரையில் முக்கியமான மைல்கற்களாக அமைந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியும் 1999, 2000, 2001 மற்றும் 2004 ஆம் ஆண்டு தேர்தல் காலப் பகுதிகளிலும், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற சமயத்திலும் இனப்பிரச்சினைத் தீர்வை முக்கியமாக முன்வைத்திருந்தது. தெளிவாக இனங்காணப்பட்ட இந்த இணக்கப்பாட்டின் முக்கிய பகுதிகளாவன:

அ) இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமில்லை

ஆ) விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள்

இ) ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட அதிகாரப்பரவலாக்கலுடனான அரசியல் தீர்வு

ஈ) இணைந்த வடக்கு, கிழக்கு அடிப்படையில் பேச்சுவார்த்தை

2002ஆம் ஆண்டு டிசம்பரில் ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில், வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் வடக்கு, கிழக்கு உள்ளக பகுதிகளுக்குச் சுயநிர்ணய உரிமையை வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட தீர்வு குறித்துப் பரிசீலிக்கவும், சமஷ்டிக் கட்டமைப்பை ஏற்றுக்கொள்ளவும் இரண்டு தரப்பும் இணங்கியிருந்தமை இந்த இணக்கப்பாட்டின் அண்மைய முக்கிய அம்சமாகும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் பொதுவாக இணங்கப்பட்ட இந்த விடயங்களில் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டு அவை பின்வருமாறு மாற்றம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) பயங்கரவாதத்துக்கு எதிரான மோதல்

ஆ) மோதலில் இராணுவ வெற்றி

இ) ஒற்றையாட்சி அரசைப் பாதுகாத்தல்

ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் செய்துகொண்ட தேர்தல் உடன்படிக்கைகளில் முக்கியக் கூறாக ஒற்றையாட்சி அம்சத்தைப் பாதுகாத்தல் என்பது உள்ளடக்கப்பட்டபோது முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான அணுகுமுறையில் குறிப்பிடத் தகுந்த தரமாற்றம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் முக்கியத்துவம் தொடர்பாக உள்நாட்டவர்களாலும், வெளிநாட்டவர்களாலும் வழங்கப்பட்ட அழுத்தங்களைத் தொடர்ந்து, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவையும், அதன் பிரேரணைகளை பரிசீலனை செய்வதற்கு நிபுணர்கள் குழுவொன்றையும் ஜனாதிபதி ஏற்படுத்தியிருந்தார். இதன் வெளிப்பாடாக, இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் 'தென் ஆசிய இணக்கப்பாடு' அவசியமெனவும், அதனை உள்ளடக்கிய இனப் பிரச்சினைத் தீர்வு முன்வைக்கப் படவேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். முன்னைய ஆட்சியாளர்களைப் போலன்றி, இவரது அரசாங்கம், தனது சொந்த யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களுக்குச் செல்லாமல், கலந்துரையாடல்களினூடாக அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு நடைமுறையைக் கடைப்பிடித்தது. அவருடைய அரசாங்கம், தனது சொந்தத் தீர்வை முன்வைப்பதில் பின்நின்றுகொண்டு, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இடம் பெறும் அனைத்துக் கட்சிகளினதும் நோக்கங்களை உள்ளடக்கிய இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கான பொறுப்பை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் ஒப்படைத்தது.

இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது பதினைந்து மாதங்கள் கடந்துள்ள நிலையில், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு குழப்பல் நிலையில் உள்ளது. பெரும்பான்மையினரின் அறிக்கை என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்ற அறிக்கையொன்றை நிபுணர்கள் குழு முன்வைத்தது. இதற்கு எதிராக சிறுபான்மை அறிக்கை என்ற பெயரில் இரண்டு வெவ்வேறு குழுக்களின் அறிக்கைகள் முன்வைக்கப் பட்டன. பேராசிரியர் திஸ்ஸ வித்தாரணவும் ஒரு ஆவணத் தைத் தயாரித்திருக்கிறார். பெரும்பான்மை அறிக்கையும், வித்தாரணவின் ஆவணமும் ராஜபக்ஷவுக்கு முந்தைய ஜனாதிபதி இணக்கப்பாட்டை பிரதிபலிக்கின்றன. இவை சமஷ்டிச் சட்டகத்துக்குள் ஒரு அதிகாரப்பரவலாக்கல் பொறிமுறைக்குள் நிற்கின்றன. அவற்றின் இணைந்த பார்வையில், நிபுணர்கள் குழுவின் பெரும்பான்மை அறிக்கை வேறுபட்ட இன மற்றும் அரசியல் பின்புலங்களிலிருந்து வந்திருந்ததுடன், அர்த்தபுஷ்டியான அதிகாரப்பரவலாக்கலுக்கு ஆதரவாக இருந்தது.

அரசியல் கட்சிகளும் தமது பிரேரணைகளை முன்வைத்திருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த பிரேரணை ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனைக் கோட்பாட்டையும், மாவட்ட ரீதியில் அதிகாரங்களைப் பகிரும் திட்டங்களையும் பிரதிபலித்தது. ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் எதிர்பார்ப்புக்களுக்கு அமைவாக ஒற்றையாட்சி அரசைத் தக்கவைக்கும் முறையொன்றை அது குறிப்பிடுகிறது. குறிப்பாக அரசின் கட்டமைப்பு தொடர்பாகவும், பரவலாக்கப்படும் பிரிவு தொடர்பாகவும் எழுந்துள்ள வகையான்மைக்குக் கவனமாக விருக்கும் எதிரெதிரான, மாறுபட்ட கருத்துக்களிலே பெ ஒரு இணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மேலும் கலந்துரையாடல்களை நடாத்துமாறு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண அறிவுறுத்தப்பட்டிருந் தார். இந்த நடவடிக்கை முடிவுற்று இழுபட்டுக்கொண்டு சென்ற நிலையில், உடனடியான பொது இணக்கப்பாடொன்றுக்கு வரவேண்டுமென்ற சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக, விரைவில் ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டுவிடும் என்ற நிலையை அரசாங்கம் வெளியிட்டது.

மிக அண்மையில், வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சி திடம்கொண்டு நின்றபோது, அதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கு ஜே.வி.பி.யின் ஆதரவு அரசாங்கத்துக்கு மிகவும் முக்கியமாக இருந்ததால், சர்வகட்சிக் குழு ஒரு இணக்கப் பாட்டுக்கு வருவதற்கு அவசரப்படத் தேவையில்லை என்ற கருத்து முன்வைக்கப் பட்டது. பொது இணக்கப்பாடானது ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியது போன்ற ஒற்றையாட்சி முறையை வலியுறுத்துவதாக அமையா விட்டால் அரசாங்கம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டி யிருக்கும் என்பதே இதற்குப் பிரதான காரணமாகும். பாராளுமன்ற ஆசனக் கணக்கு களைப் பொறுத்தும், மற்றும் தேர்தல் தேவைகளுக்கு ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவை நம்பியிருக்கும் நிலையில் இதைவிட வேறு மார்க்கம் கிடையாது.

அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக ஜே.வி.பி.

**"இந்த அரசாங்கம் உண்மையாகவே ஒரு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறதா அல்லது சர்வதேச சமூகத்தை சாந்தப்படுத்துவதற்காக அவ்வாறு பாசாங்கு செய்கிறதா?"**

மற்றும் ஜாதிக ஹெல உறுமய வின் ஒற்றையாட்சி அரசுக் கொள்கையைத் திருப்திப்படுத் தும் தேவை இந்தப் பாராளு மன்றத்தின் ஆயுட்காலம் முழுவதும் காணப்படும். ஆக, இங்குள்ள உண்மையான கேள்வி என்னவென்றால், இந்த அரசாங்கம் உண்மையாகவே ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அர்ப்பணிப் புடன் செயற்படுகிறதா அல்லது சர்வதேச சமூகத்தை சாந்தப் படுத்துவதற்காக அவ்வாறு பாசாங்கு செய்கிறதா என்பதுதான்.

பின்வருவதுதான் உண்மையான நிலை என்பது தெளிவாகத் தெரிகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த பிரேரணை, ஒற்றையாட்சி அரசை தெளிவாகக் குறிப்பிடவேண்டும் என்ற ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் கோரிக்கையைத் திருப்திப் படுத்தும் வகையில் வளைந்து கொடுக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவாகக் காட்டும் வகையில் அமைந்திருந்தது இதன் விளைவாக இந்த அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாடு என்பது ஒற்றை யாட்சியை வலியுறுத்துகின்ற பெரும்பான்மை வாதம்தான் என்பதும், ஜே.வி.பி. அல்லது ஜாதிக ஹெல உறுமயவை இதற்கு ஒரு சாட்டாகக் காட்டுவது பொய்யானது என்பதும் தெளிவாகிறது. 13வது திருத்தச்சட்டத்தையும், மாகாணசபை முறையையும் முன்னிறுத்தும் 'ஒற்றையாட்சி அரசுக்குள் அதிகபட்ச அதிகாரப்பரவலாக்கம்' என்ற வாதத்துக்கு நாம் மீண்டும் வந்திருக்கிறோம். அது இந்தச் சான்பாட்டுக்குள் அடங்கிய படியாலேயே தற்போதைய அரசியல்யாப்பின் எல்லைக்குள் அடக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்துக்கு எதிரான இராணுவ வெற்றிக்கு அழுத்தம் கொடுக்கும் போக்கின் தொடர்ச்சியாக. இராணுவ வெற்றியின் மூலம் பெறப்பட்ட வலுச்சமநிலையை அடிப்படையா கக் கொண்டே இறுதி விளைவு அமையும். இதனால், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு, புதிய அரசியலமைப்புத் தீர்வொன்றுக் கும், சமூக உடன்பாட்டுக்கும் வருவதற்கு தடையாக இருந்து, வரலாற்றில் இருக்கப்போகும் மற்றுமொரு சந்தர்ப்பமாக இது அமைந்துவிடப்போகிறது.

இந்த ஆய்வு சம்பவங்களால் தொடர்விளைவாக எழுந்த ஒன்றா என்றால், ஒரு அர்த்தபுஷ்டியான வழியில் முரண்பாட்டுக்கான தீர்வு எட்டப்படுமா என்ற கேள்வி எழுகிறது. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதன் மூலம் இந்த முரண்பாடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிடும் என்று வாதிடுவோரும் இருக்கவே செய்கிறார்கள். இந்தக் கட்டுரையை எழுதியவர் உட்பட ஏனையோர், விடுதலைப் புலிகள் என்பது இன முரண்பாட்டின் ஒரு தோற்றுவாயே அன்றி, இதற்கான வேர்கள் அரசியல் ரீதியானவை என்றும் அழுத்திக் கூறுகிறோம். ஆட்சியதிகாரப் பகிர்வு மற்றும் வளங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான அமைப்புகள் மற்றும் எதிர்பார்ப்புக் களுமே அவை உள்ளன. ஒற்றையாட்சி அரசின் கீழான அதிகபட்ச அதிகாரப்பகிர்வோ அன்றி மாவட்ட அடிப்படையில் மத்தியில் அதிகாரங்களைப் பகிர்வதோ, தசாப்த காலங்களாக இந்த ஒற்றையாட்சி முறைமை இருந்துவந்த பின்னணியில் இவற்றுக்குப் பரிகாரமாக அமையாது.

அதிகபட்ச அதிகாரப்பகிர்வு என்கின்ற இந்த வார்த்தைப் பிரயோகம் கூட அழுத்தம் ஒற்றையாட்சி அரசமைப்புக் குள்ளேயே பிரிக்கமுடியாதபடி இருக்கிறது. ஒருங்கிணைய பட்டியல் தொடர்ச்சியாகத் தவறான முறையில் பயன்படுத் தப்பட்டு தற்போதிருக்கும் அதிகார மட்டங்கள் தொடர்ந்தும் பேணப்படவே செய்யும். ஒதுக்கப்படுவதான உணர்வால் உந்தப்பட்டு முரண்பாட்டுச் சுழற்சி மீண்டும் உயிர்ப்பிக்கப் படும்.

போரை முன்னெடுத்தல் என்ற நிலைப்பாட்டுக்குள் சிக்குண் டுள்ள ராஜபக்ஷ அரசாங்கம் வெற்றிபெற்றவரின் சமாதானத்தை நிலைநிறுத்த முயல்கிறது. இந்த முரண்பாட்டில் எப்போதுமே சமாதானம் சாத்தியமில்லை. ■

# சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு

## இழப்பதற்கு அல்லது தவறாக வழிநடத்தப்படுவதற்கு அல்லது தோல்விகாண்பதற்கான மற்றுமொரு சந்தர்ப்பம்?

**பேராசிரியர் சுமணசிறி லியனகே**
பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர்

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தொடர்பாகவும் அதற்குத் தலைமை தாங்கிய பேராசிரிய திஸ்ஸ விதாரண தொடர்பாகவும் பலரும் வைத்திருந்த நம்பிக்கைகளை அந்தக் குழுவின் இடைக்கால யோசனை கேள்விக்குட்படுத்தியுள்ளது. இந்த யோசனை முன்வைக்கப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைப் பேராசிரியர் சுமணசிறி லியனகே எழுதியிருந்த இந்த ஆக்கம், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடமிருந்து எதனை எதிர்பார்க்க முடியும் என்பதைத் தெளிவாக எதிர்வுகூறியிருந்ததுடன் சாத்தியமான தீர்வுகள் குறித்தும் பரிந்துரைத்திருந்தது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுவிட்ட போதிலும், பேராசிரியர் எழுப்பியிருக்கும் கேள்விகளும், அவரது பரிந்துரைகளும் இன்னமும் பெறுமதியானவையாகவே இருக்கின்றன. 'கிறவுண்ட் வியூஸ்' இணையத்தில் வெளியான அவரது ஆக்கத்தின் தமிழ் வடிவம் இது.

நிபுணர்கள் குழுவுடன் இணைந்து சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தமது ஆராய்வுகளை ஆரம்பித்தபோது, இவற்றின் மூலம் நல்லதொரு தீர்வு முன்வைக்கப்படுமென நான் உட்பட பலரும் நம்பிக்கை கொண்டிருந்ததுடன், இதனை ஒரு 'நம்பிக்கைக் கீற்று' என்றே பார்த்தோம். எனினும், திஸ்ஸ விதாரணவின் அறிக்கைக்குப் பதிலாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த பிரேரணையுடன் அந்த நம்பிக்கையும் கீற்று மங்கத் தொடங்கியது. இரண்டாவது சபை மற்றும் அதிகாரப் பரவலாக்கலை முன்வைத்த திஸ்ஸ விதாரணவின் அறிக்கை, காலனித்துவத்துக்கு முந்திய இலங்கையை, அதிகாரப்பகிர்வு மற்றும் சுயாட்சி மூலம் மீள்கட்டமைப்புச் செய்வதையே சாராம்சமாகக் கொண்டிருந்தது. இலகு சுருக்கமான முறையில் சொல்வதாயின் திஸ்ஸ விதாரண அறிக்கை – 2000ஆம் ஆண்டு யோசனை + செனட் சபை என்று சொல்லலாம்.

கடும்போக்கு மற்றும் மிதவாத தமிழ்த் தேசியவாதிகளுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கான ஒரு அடிப்படையை இது வழங்குவதாக தனிப்பட்ட முறையில் நான் கருதியிருந்தேன். 1994ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டுவரும் அதிகாரப்பரவலாக்கல் முயற்சிகளை முற்றாக நிராகரிக்கும் வகையிலேயே திஸ்ஸ விதாரணவின் அறிக்கைக்குப் பதிலாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்திருந்த அறிக்கை அமைந்திருந்தது. அமைச்சர் திஸ்ஸ விதாரண சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிலிருந்து விலக வேண்டுமென கடும்போக்குத் தேசியவாதிகள் கோரிய அதேவேளை, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு கலைக்கப்படவேண்டுமென ஜே.வி.பி. கூறியது.

ஆரம்பத்தில் அரசியல் செயற்பாடுகளுக்கு துணையான, இணை வழங்கலாகவே இராஜதந்திர நடவடிக்கைகள் வர்ணிக்கப்பட்டன. ஆனால், பின்னர்

> “ திஸ்ஸ விதாரண அறிக்கை – 2000ஆம் ஆண்டு யோசனை + செனட் சபை ”



தமிழில்: [illegible] பிரசாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> “1987ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தை விடத் தற்பொழுது முன்வைக்கப்படக்கூடிய 13வது திருத்தச்சட்டம் குறைவான ஒன்றாகவே இருக்கும்”

அமைச்சுக்கிடையிலான உறவு, விசேடமாக கடந்த ஆறு மாதங்களாக தலைகீழாக மாறியிருக்கிறது. தற்போது சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகள் இராணுவ நடவடிக்கைகளுக்குத் துணைபோவதாகவும், இணைவாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு மாறுபட்ட சூழ்நிலையில் ஜனவரி 23ஆம் திகதி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு வெளியிட்டுள்ள அறிக்கை இந்த உள்ளடக்கங்களைப் பிரதிபலிப்பதாகவே இருக்கும்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அனைத்து எதிர்ப்புக்களையும் மீறி போதியளவான அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை முன்வைக்குமென மூன்று காரணங்களுக்காக இன்னும் சிலர் நம்பிக்கையுடன் உள்ளனர். அதிகரித்திருக்கும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துமாறும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அதிகாரப் பரவலாக்கல் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமெனவும் சர்வதேச சமூகத்தின் மேற்குலகப் பிரிவு இலங்கைக்குத் தொடர்ந்தும் அழுத்தங்களை வழங்கி வருகின்றமை முதலாவது காரணமாக அமைந்துள்ளது. அமெரிக்கா முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் இதில் முக்கியமானவை. இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கையில் குழப்பங்கள் இருந்தாலும், இலங்கை விடயத்துக்கு இந்தியா வழங்கியிருக்கும் முக்கியத்துவம் இரண்டாவது காரணமாக அமைந்துள்ளது. தமிழ் நாட்டிலிருந்து கொடுக்கப்படும் அழுத்தங்கள் காரணமாக இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கமுடியாத நிலையில் இந்தியா இருக்கிறது. மறுபுறத்தில் இலங்கை, பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் வைத்திருக்கும் தொடர்புகள் குறித்து இந்தியா மகிழ்ச்சியடையவில்லை. எனினும், பல்வேறு காரணங்களுக்காக இலங்கை விடயத்தில் இந்திரா காந்தியின் கொள்கைக்கு இந்தியா மீண்டும் செல்ல முடியாது. எனவே, அதிகாரப்பரவலாக்கல் தீர்வொன்றை முன்வைப்பதன் மூலம் தமிழ்த் தேசியவாதிகளின் கோரிக்கைகளைக் கையாளுமாறு இந்தியா இலங்கையை வலியுறுத்தி வருகிறது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரான அமைச்சர் திஸ்ஸ விதாரண மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை, தீர்வொன்று முன்வைக்கப்படுமென்று அவர்கள் நம்புவதற்கான மூன்றாவது காரணமாக அமைந்துள்ளது.

எனினும், தற்போதைய நிலவரத்தில் இலங்கையின் அரசியல் வித்தியாசமான ஒரு தளத்தில் செயற்பட்டுவருகிறது. தேசியப் பிரச்சினைக்கு அரசியலமைப்பினூடாகத் தீர்வொன்றை முன்வைப்பதைக் குறைக்கும் நிலைமைகள் நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்றன. முதலாவதாக, மிகைப்போக்கைக் கொண்டுள்ள ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய இரண்டு சிங்களத் தேசிய அரசியல் கட்சிகள் தமது வளர்ச்சியைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளத் தொடங்கியுள்ளமை. மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத நிலையில், ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் ஆதரவில் அது தங்கியுள்ளது. இரண்டாவதாக, புதிய அரசியலமைப்புக்கோ அல்லது அரசியலமைப்பு மாற்றத் திட்டத்துக்கோ ஆதரவளிப்பது தமது அதிகார தந்திரோபாயத்தைப் பாதிக்கும் என்பதால் ஐக்கிய தேசியக் கட்சி இவற்றுக்கு ஆதரவளிக்குமெனக் கருதமுடியாது. மூன்றாவதாக, விடுதலைப் புலிகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் தேசியவாதம் தனித் தமிழ்த் தேசம் தவிர்ந்த எந்தவொரு அரசியல் இணக்கப்பாட்டுத் தீர்வையும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளாது. நான்காவதாக, மோதல்களும், சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான பிரசார முன்னெடுப்புக்களும் கனமான மோசடிகளுக்குப் போதியளவு இடத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பேராசை பிடித்த காரணியானது ஆயுத மோதல்கள் தொடர்ந்தும் நீண்டுசெல்லவே வழிசெய்யும். இது, இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு மாத்திரமின்றி ஏனைய பல தரப்பினருக்கும் பொருந்தும்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தனது யோசனைத் திட்டத்தை முன்வைத்தாலும், அது குறித்து சாதகமாக நோக்கக்கூடிய வாய்ப்புக்கள் கிடையாது. சாத்தியமான சில சந்தர்ப்பங்கள் குறித்து இங்கு நோக்கலாம்.

## சந்தர்ப்பம் - 01

13வது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு பரிந்துரைத்து விட்டு, வெளிநாடுகளுக்குச் சென்று சாத்தியமான அதிகாரப்பரவலாக்கல்கள் தொடர்பாக அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகளுக்கு அறிவூட்டக்கூடும். 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்ப்படுத்துவது சாதகமான நடவடிக்கையாயினும், எதிர்மறையான விளைவுகளையும் இது தோற்றுவிக்கும். ஏன்? இரண்டு காரணங்களுக்காக. முதலாவதாக, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்ற உயர்நீதிமன்றத் தீர்ப்புக் காரணமாக, 1987ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட 13வது திருத்தச்சட்டத்தைவிடத் தற்பொழுது முன்வைக்கப்படக் கூடிய 13வது திருத்தச்சட்டம் குறைவான ஒன்றாகவே இருக்கும். இரண்டாவது, மாகாணசபைகளுக்கு முன்னதாக வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் பலவும் ஏற்கனவே மத்திய அரசாங்கத்தால் மீளப் பெறப்பட்டுவிட்டன. தற்பொழுது மாகாணசபைகள் மிகவும் குறைந்தளவு பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களையே கொண்டுள்ளன.

## சந்தர்ப்பம் - 02

திஸ்ஸ விதாரணவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட, ஆனால் அதைவிடச் சற்று செறிவூட்டிய தீர்வு யோசனைகளை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகித்த பெரும்பான்மையானவர்கள் முன்வைக்கலாம். அந்த நேரத்தில் தந்திரோபாய காரணங்களுக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது நிலைப்பாட்டை வெளியிடா விட்டாலும், ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணியும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும். அவ்வாறானதொரு நிலையில், ஒரு பொது இணக்கப்பாடு ஏற்படவில்லை என்ற சாட்டைக் கூறி அந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று என ஜனாதிபதி கூறக்கூடும்.

## சந்தர்ப்பம் - 03

13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது டன், அரசியலமைப்பு மாற்றமொன்றை ஏற்படுத்துவதன் மூலம், உள்ளூராட்சி அமைப்பை அரசாங்கக் கட்டமைப்புக்குள் கொண்டுவந்து அரச கட்டமைப்பை மூன்று அடுக்குகள் கொண்டதாக ஆக்குதல். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் மற்றும் அங்கம் வகிக்காத சிங்களத் தேசியக் கட்சிகளால் இது ஏற்றுக்கொள்ளப்படலாம். எனினும், இந்தச் சாத்தியமானது, முதலாவது சந்தர்ப்பத்தைப் போலவே அனைத்துப் பாதக அம்சங்களையும் கொண்டிருக்கிறது.

13வது திருத்தச்சட்டத்தில் ஆரம்பித்து ஒரு படிப்படியான நிலைமாற்ற முறையாக அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற பரிந்துரையை நியாயப்படுத்த வேண்டுமாயின், 13வது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் பின்வரும் மூன்று முக்கிய மாற்றங்களுடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படவேண்டும்.

முதலாவதாக, அத்தியாயம் 76(1) இல் பாராளுமன்றத்துக்குக் காணப்படும் சட்டவாக்க அதிகாரங்கள் ஒதுக்கீட்டுப் பட்டியலுக்கு மாத்திரமானதாக வரையறுக்கப்படவேண்டும். இரண்டாவதாக, 2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பு பரிந்துரையில் அத்தியாயம் 101(2) மற்றும் (3) என்பன அரசியலமைப்பின் XII ஆவது அத்தியாயத்துடன் இணைக்கப் படவேண்டும். மூன்றாவதாக, மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டாவது சபை அமைக்கப்படவேண்டும். இந்த மாற்றங்களுடன், அமைச்சுக்களால் பொறுப்பேற்கப்பட்ட, 1987ஆம் ஆண்டு மாகாணசபைச் சட்டமூலத்துக்கு அமைவான அனைத்து அதிகாரங்கள் மற்றும் அரச நிறுவனங்களும் மாகாண சபைகளிடம் கையளிக்கப்படலாம்.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் ஒருபோதும் உறுதியான ஓர் அரசியலமைப்பு மாற்றம் ஏற்பட்டதில்லை. அமரர் சார்ள்ஸ் அபயசேகர அரசியலமைப்பு மாற்றமொன்றுக்கான இயக்கத்தை ஆரம்பித்தபோதும், சடுதியான அவரது மறைவால் அது வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையில், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவானது இழப்பதற்கு அல்லது பிழையாக வழிநடத்தப்படுவதற்கு அல்லது தோல்வி காண்பதற்கான மற்றுமொரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.


மேற்குறிப்பிட்ட மூன்று சந்தர்ப்பங்களில் ஏதாவது ஒன்றுடன் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு வெளிவரும்பின் அவர்களிடம் இரண்டு கோரிக்கைகளை நான் முன்வைக்க விரும்புகின்றேன். முதலாவது, அமைச்சர் திஸ்ஸ விதாரண, அமைச்சர் டியூ.குணசேகர மற்றும் அமைச்சர் பேரியல் அஷ்ரஃப் ஆகியோர் உடனடியாக அரசாங்கத்திலிருந்து இராஜினாமாச் செய்யவேண்டும் எனக் கோருகிறேன். இரண்டாவதாக, நல்லாட்சியை அமைப்பதற்கான திட்டங்களை முன்வைத்து இந்த மூன்று அமைச்சர்களும் ஏனைய முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து சுயாதீனமான, கட்சிசார்பற்ற வேட்பாளர் ஒருவரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தவேண்டுமெனக் கோருகிறேன்.

இவ்வாறான தீவிரமான சத்திரசிகிச்சையைச் செய்தாலே ஜனநாயகம், சமாதானம் மற்றும் மனிதநேயம் நிறைந்த இலங்கையை எம்மால் நினைத்துப்பார்க்க முடியும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ள யோசனைகள்



**சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக தற்போதைய அரசியலமைப்பில் உள்ள சம்பந்தப்பட்ட பிரிவுகளை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்.**

## 01. அறிமுகம்

1.1. தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படையாக அமையக்கூடிய ஒரு தொகுதி யோசனைகளை தயாரிக்குமாறு ஜனாதிபதியினால் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு ஆணை வழங்கப்பட்டது. இக்குழு ஒன்றரை வருட காலமாக 63 அமர்வுகளை நடத்திய பிறகு ஒரு இணக்கப்பாட்டு ஆவணம் இறுதிப்படுத்தப்பட்டு வருவதுடன், அண்மைய எதிர்காலத்தில் அது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் சாத்தியம் உள்ளது. அதன் பெறுபேறு பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அடிப்படையானதாக அமையும். அதை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதைய அரசியலமைப்பில் சில திருத்தங்களைக் கொண்டுவரவேண்டி இருக்கும் என்பதுடன், சில அத்தியாயங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி ஒரு சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டி இருக்கும். இவற்றைச் செய்வதற்கான உகந்த சூழ்நிலை உருவாக்கப்படுவதற்கு கணிசமான காலம் தேவைப்படும்.

1.2 இத்தகையதொரு சூழ்நிலையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அதன் முன்மொழிவுகளை கருத்தில் கொண்டு, குறுகியகால இடைவெளியில் மாகாணங்களுக்கு அதிகபட்சமானதும், பயனுறுதிமிக்கதுமான அதிகாரப்பரவலாக்கலை செய்வதற்கான செயற்திட்டமொன்றை இனங்கண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதற்கே கூடுதல் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு வரையறைக்குள் இது மேற்கொள்ளப்படும். சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருப்பதுடன், வடக்கிலும், கிழக்கிலும் ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்படும் மாகாணசபைகள் அமைக்கப்படும் வரை இடைக்கால ஏற்பாடொன்றையும் அது விதந்துரைக்கிறது.

1.3. 1987 ஜூலையில் இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு 13வது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அத்திருத்தத்தின் விளைவாக இலங்கை முழுவதும் மாகாண சபைகள் அமைக்கப்பட்டு, ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டது. பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் மாகாணங்களுக்கான பட்டியல், பொதுப்பட்டியல் ஆகியவற்றின் கீழ் வருகின்றன. ஏனைய சகல அதிகாரங்களும் ஒதுக்கீட்டுப் பட்டியலின் ஊடாக மத்திய அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டன. இந்த மூன்று பட்டியல்களிலும் உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயதானமும் அல்லது சொற்றொடர் ஒதுக்கீட்டுப் பட்டியலின் கீழ் வருவனவாகவே கருதப்படும்.

1.4. பொதுப்பட்டியலின் (ஒருங்கியை நிரல்) ஊடாக மாகாணங்களுக்குப் பரவலாக்கம் செய்யப்பட்ட விடயதானங்களும், சொற்றொடர்களும் ஒதுக்கீட்டுப் பட்டியலுக்கும் (ஒதுக்கிய நிரல்) சொந்தமானவையாக இருந்தமையால் அவற்றை மத்திய அரசாங்கமே தனது கைகளில் வைத்திருந்தது.

## 2. அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு அதிகபட்ச அதிகாரப்பரவலாக்கலை அனுமதிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

2.1. சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரங்களைப் பொறுத்தவரை தற்பொழுது இருக்கக்கூடிய குறைபாடுகளை இல்லாமல்செய்து அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும்.

2.2. மாகாணசபைகள் பயனுறுதியுடன் செயற்படுவதற்கு வசதியாக போதுமான நிதி அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும்.

2.2.1. மத்திய அரசாங்கத்தினால் மாகாணங்களில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள், மாகாணங்களின் நோக்கெல்லைக்குள் வருகின்ற விடயதானங்களாக இருப்பின் அவற்றுக்கான எல்லா நிதியும் அந்தந்த மாகாண நிர்வாகங்களின் ஊடாகவே மத்திய அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டும்.

## 3. அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அதிகபட்ச அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்படுவதை அனுமதிப்பதற்குத் தேவையான விசேட ஏற்பாடுகள்.

3.1. கிழக்கு மாகாணத்தில் மாகாணசபைக்கான தேர்தலை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை இருப்பதாகவும், அந்தத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டுமென்றும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழு கருதுகிறது.

3.2. வடமாகாணத்தின் நிலைமை அமைதியிலிருந்து வேறு தொலைவில் இருக்கிறது. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை அண்மைய எதிர்காலத்தில் அங்கு நடத்துவது சாத்தியமில்லை. ஆதலால், அதிகாரப்பரவலாக்கத்தின் பயன்களை வடமாகாணத்தின் மக்களும் அனுபவிப்பதற்கு வகைசெய்ய மாற்று ஏற்பாடொன்று அவசியமாகிறது.

3.3. வடக்கில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்பதால் அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் வடமாகாணத்தில் இடைக்கால சபையொன்றை நிறுவுவதற்கான பொருத்தமான உத்தரவை ஜனாதிபதி பிறப்பிக்க முடியும்.

3.4. ஆளுநர் அவருக்குரிய நிறைவேற்று அதிகாரங்களைச் செயற்படுத்தும் விடயத்தில் மாகாண இடைக்காலசபை அவருக்கு உதவியும் ஆலோசனையும் வழங்குவதுடன், மாகாணசபைக்கான தேர்தல் நடத்தப்படும்வரை அது செயற்படும்.

3.4.1. இடைக்காலசபை அந்த மாகாணத்தின் இனத்துவ குணாம்சத்தை பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும்.

3.4.2. அரசியல் அனுபவமும் மாகாணத்தினதும் அதன் மக்களினதும் அபிவிருத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய அக்கறை கொண்ட உடன்பாடும் உள்ள, மாகாண மக்களினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நபர்களை உள்ளடக்கியதாக இடைக்காலசபை இருக்க வேண்டுமென்று முன்மொழியப்படுகிறது. இடைக்கால சபையில் நியமிக்கப்படுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு ஒருவர் அந்த மாகாணம் குறித்த பூரண அறிவைக் கொண்டிருக்கவேண்டும்.

### 4. அரசியலமைப்பின் அரசகரும மொழிகள் ஏற்பாடுகளின் அமுலாக்கம்.

4.1. மொழிகள் தொடர்பிலான அரசியலமைப்பின் நான்காவது அத்தியாயத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான சட்டங்களைப் பாராளுமன்றம் நிறைவேற்றுவதை உறுதிசெய்யும் உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

4.2. சட்டவாக்கக் குணாம்சத்திலும் பார்க்க நிர்வாக ரீதியான சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் இருக்கின்றன.

## பின்வரும் நடவடிக்கைகளை அரசாங்கம் அக்கறையுடன் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும்


அ) வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமன்றி, நாடு முழுவதும் தமிழ் பேசும் மக்கள் பொலிஸ் நிலையங்களில் தங்கள் சொந்த மொழிகளில் தொடர்பாடல்களைச் செய்து அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதியாக போதுமான எண்ணிக்கையில் தமிழ் பொலிஸ் அதிகாரிகளை ஆட்திரட்டல் செய்யவேண்டும்.

ஆ) பொதுமக்கள் தமது சொந்த மொழிகளில் அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் அலுவல்களைச் செய்துகொள்வதற்கு வசதியாக ஊழியர்களை நியமித்தல் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் உட்பட சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.

இ) மக்களைத் தேடிச்சென்று அதே இடத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வசதியாக தமிழ் மொழியில் தாராள பரிச்சயம் உள்ள அதிகாரிகளைக் கொண்ட நடமாடும் அலுவலகங்களை கிரமமாக நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.


ஈ) நீதி பரிபாலன விடயங்களில் அனைத்து நிர்வாக அலுவல்களிலும் மாகாண சிறுபான்மை சமூகங்களின் தேவைகளை நிறைவுசெய்யக்கூடிய வகையில் மொழிபெயர்ப்பாளர்கள், வியாக்கியானிப்பாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வசதிகளை அனைத்து சட்ட நீதிமன்றங்களிலும் ஏற்படுத்துதல்.

உ) மேற்கூறப்பட்டவாறு தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்குகின்றவற்றையொத்த பிரச்சினைகளை வடக்கிலும், கிழக்கிலும் வாழும் சிங்களச் சிறுபான்மையினர் எதிர்நோக்குகிறார்கள். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்சிகளின் பதிற்குறிகள்...

## இது ஒரு தற்காலிக யோசனை...

மைத்திரிபால சிறிசேன
அமைச்சர், பொதுச்செயலாளர்
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையின் ஊடாக வடக்கு மாகாணத்திற்கென சிபாரிசு செய்யப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை தற்காலிகமானதாகவே ஸ்தாபிக்கப்படும். இந்த நிர்வாகசபைக்கு வடக்குப் பிரதேசத்தில் இருந்து பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர். கிழக்கு மாகாணத்தைப் போன்று வடக்கு மாகாணத்தையும் விடுவிக்கும் வரை இந்த நிர்வாகசபை அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

61 தடவைகள் சந்தித்த பின்னர் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினால், அதில் அங்கம் வகித்த அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபையினால் முன்வைக்கப்படும் யோசனைகள் காலத்தை அடிப்படையாக வைத்து நடைமுறைப்படுத்தப்படும். தற்போதைய அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமையால் அரசியலமைப்பு திருத்தத்திற்குச் செல்ல முடியாதுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்திருக்க முடியும். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன செய்ததைத் தவிர, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு புதிதாக ஒன்றும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மறுக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தின்போது மாகாணசபை முறை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. ■

## 87 இலேயே ஏற்றுக்கொண்டிருக்கலாமே?

திஸ்ஸ அத்தநாயக்க
பாராளுமன்ற உறுப்பினர், கட்சிச் செயலாளர்
ஐக்கிய தேசியக் கட்சி

1987ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச் சட்டமூலத்துக்கு அன்று எதிர்க்கட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். அப்பொழுது எதிர்ப்புத் தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ, அந்த சட்டமூலத்தைத் இப்போது நடைமுறைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

இந்தச் சட்டமூலத்தை 20 வருடங்களுக்கு முன்னரே ஏற்றுக்கொண்டிருந்தால் நாட்டில் பாரிய அழிவுகள் ஏற்பட்டிருக்காது. அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் 13வது திருத்தச் சட்டமூலத்தை ஏற்றுக்கொண்டிருப்பார். தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் அந்தச் சட்டத்தை அவர் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. 20 வருடங்களாக நாட்டில் பல அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த அழிவுகளுக்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குவதுடன், நாட்டு மக்களிடம் அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி 20 வருடங்களுக்கு முன்னர் கொண்டுவந்த சட்டமூலம் 20 வருடங்களின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே, ஐ.தே.க. ஏற்படுத்திய மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையும் 20 வருடங்களின் பின்னர் சரியென ஏற்றுக்கொள்ளப்படும். எந்தத் தீர்வுத் திட்டங்களை அரசாங்கம் முன்வைத்தாலும் பிரிக்கப்படாத இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வின் மூலமே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக்கட்சி உறுதியாக உள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா வகுத்துக்கொடுத்த தீர்வை திணிக்கும் முயற்சி...

சோமவன்ச அமரசிங்க, தலைவர், மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வி.பி.)

இந்தியா வகுத்துக்கொடுத்த தீர்வை மக்கள் மீது திணிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சிக்கிறார். இலங்கை-இந்திய உடன்படிக்கையின் போது இந்தியா வகுத்துக் கொடுத்த தீர்வையே தற்பொழுது ஜனாதிபதி திணிக்கப் பார்க்கிறார். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைத்திருக்கும் எந்தவொரு யோசனையும் நடைமுறைச் சாத்தியமானதற்கு அரசுக்கு இடமளிக்கப்போவதில்லை. அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஜனாதிபதியிடம் கையளித்திருப்பது சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனை அல்ல. அது அரசாங்கக் கட்சியின் யோசனைகளே.

13வது திருத்தச்சட்டம் சட்டரீதியானது அல்ல. திஸ்ஸ விதாரணவால் முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளுக்கு ஒருபோதும் நாம் ஆதரவளிக்கப் போவதில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையும், மாகாணசபையையும் ஒழித்துக்கட்டுவதற்கு இணக்கம் தெரிவித்திருந்த ஜனாதிபதி இப்போது அவற்றைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர் அங்கு பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகங்கள் ஜனநாயக ரீதியில் அமைக்கப்படவேண்டும். மோதல்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நியாயமானவை நட்டஈடு வழங்கப்படவேண்டும். இவற்றின் மூலம் தனிநாட்டுக் கோரிக்கை மற்றும் இனரீதியான பாகுபாட்டை நீக்கமுடியும். 60 வீதமான தமிழ் மக்கள் நாட்டின் ஏனைய இடங்களில் வசித்து வந்தாலும், வடக்கு, கிழக்குவாழ் தமிழ் மக்களுக்குத் தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

கொழும்பு நகரின் வெள்ளவத்தைப் பகுதியில் பெருமளவான தமிழ் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். அங்கு பாரிய கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் புதிய அதிகாரப்பரவலாக்கத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டாலும், தமிழ் மக்கள் மீண்டும் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று வாழ்வதற்குத் தயாராகவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் தலைவரான ஜனாதிபதியும் இந்தியாவின் தேவையையும், எதிர்பார்ப்பையும் நிறைவேற்றும் கைக்கூலியாகவே செயல்படுவதில் முனைப்புக்காட்டி வருகின்றனர். பிரிவினைவாதமில்லாத நாட்டில் இனவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கிராம மட்டத்திலிருந்து அதிகாரங்கள் பரவலாக்கப்படக்கூடிய தீர்வையே ஜே.வி.பி. எதிர்பார்க்கிறது. ■

## இணைந்த வடக்குக் கிழக்கே தீர்வுக்கு அடிப்படை

இரா.சம்பந்தன், பாராளுமன்றக்குழுத் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் திட்டமொன்றை முன்வைக்கவேண்டுமென்ற சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு உள்ளாகியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்திருக்கும் தீர்வுத்திட்ட யோசனையே 13வது திருத்தச் சட்டமூலம் எனினும், சர்வதேசத்தின் வலியுறுத்தலுக்கு அமைய தீர்வுத்திட்டமொன்றை உடனடியாக அவரால் முன்வைக்க இயலாது. ஏனெனில், பெரும்பான்மை இனத்தவர்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் அவர் செயற்படவில்லை. தேசப்பற்றுள்ள கட்சிகளாலேயே அவர் பாதுகாக்கப்பட்டு வருகிறார்.

13வது திருத்தச்சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கான காலம் கடந்துவிட்டது. தற்பொழுது உள்ள சூழ்நிலையில் அதனை நடைமுறைப்படுத்துவது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்தியாவுக்கு 13வது திருத்தச்சட்டமூலம் தொடர்பாக நன்கு தெரியும். எனினும், 13வது திருத்தச்சட்டமூலத்தின் வரலாறு பற்றிப் பலருக்குத் தெரியாது. 1986ஆம் ஆண்டு நட்வர் சிங் இலங்கைக்கு வந்தபோது அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான பல்வேறு பிரேரணைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. அவை குறித்து நேர்மையான முறையில் பரிசீலிக்கப்பட வேண்டுமென தமிழ் விடுதலைக் கூட்டணி அந்த நேரம் கோரிக்கை விடுத்தது. எனினும், அதனைக் கணக்கில் கொள்ளாது அப்பொழுது ஆட்சியிலிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன முற்றிலும் மாறுபட்ட திட்டமொன்றை முன்வைத்தார். இதற்கு இந்தியாவின் ஆதரவு இருக்கவில்லை. எனினும், இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13வது திருத்தச் சட்டமூலத்தின் ஆரம்பகட்டப் பணிகளில் பங்கெடுத்திருக்கவில்லை.

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே 13வது திருத்தச் சட்டமூலம் அமுல்படுத்தப்படவேண்டும். அதுபற்றிக் கவனம் எடுக்காத நிலையில் இது எவ்வாறு சாத்தியமாகும்? கடந்த 18 வருடங்களாக எந்தவொரு ஜனாதிபதியாலும், தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்தபோதும் ஏற்றுக்கொள்ளப்படாத சட்டமூலம் தற்பொழுது மாத்திரம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படப்போகிறது? வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் 13வது திருத்தச்சட்டமூலத்தை அமுல்படுத்துவது சட்டவிரோதமானது. ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்-முஸ்லிம் மக்களைத் திருப்திப்படுத்தாது...

ரவூப் ஹக்கீம்
பாராளுமன்ற உறுப்பினர், தலைவர்
முஸ்லிம் காங்கிரஸ்

சர்வகட்சி மாநாடு மக்களுக்குரிய அதிகாரங்களை விரிவுபடுத்துவதற்காகவே கூட்டப்பட்டது. 13ஆவது திருத்தம் என்பது ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள விடயமாதலால் இதை அமுல்படுத்துவதற்கு சர்வகட்சிக் குழு தேவையில்லை. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு 63 தடவைகள் கூடியிருக்கிறது. இக் கூட்டங்களில் எவ்வித பலனும் கிடையாது. 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தப் போகிறோம் என்று பெரிதாக ஒரு விடயத்தை கண்டுபிடித்துவிட்டது போல ஜனாதிபதி இன்று பேசுகிறார். இதே ஜனாதிபதி அன்று இதற்கு எதிராக சத்தியாக்கிரகம் செய்தார். பேரணி நடத்தினார். ஆர்ப்பாட்டம் செய்தார் என்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

ஏதாவது ஒன்றை சர்வதேச சமூகத்துக்குக் காட்டி யுத்தம் செய்து அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கே, அன்று எதிர்த்ததை இன்று அமுல்நடத்த முற்படும் காலம் கடந்த ஞானம் வந்திருக்கிறது. அமைச்சர் திஸ்ஸ வித்தாரண முன்வைக்கும் யோசனையான 13 ஆவது திருத்த அமுலாக்கம் தமிழ் மக்களையோ, வடக்கு, கிழக்கில் வசிக்கும் முஸ்லிம் மக்களையோ திருப்திப்படுத்த முடியுமா என்பது சந்தேகமே.

மாகாணசபைகளுக்கு பெற்றுக்கொடுக்கும் பொலிஸ், காணி முதலியவற்றுக்கான அதிகாரங்கள் சரிவரக் கொடுக்கப்படவேண்டும். அதனைப் பெற்றுக்கொடுக்காமல் இப்போது 13 ஆவது திருத்தம் பற்றி பேசுகிறார்கள். இவை யாவும் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் நடவடிக்கைகளே.

பயங்கரவாதத்தினை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் எல்லோருக்கும் விருப்பம் இருக்கிறது. ஆனால், அரச பயங்கரவாதத்தினையும் இல்லாமல் செய்ய வேண்டும். அரச பயங்கரவாதமும் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது.

அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதாக இருந்தால் அது அப்பகுதி மக்கள் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வாக அமையவேண்டும். அதேபோன்று அப்பிரதேசங்களில் தேர்தல் நடத்துவதாக இருந்தால், அரச பயங்கரவாதம் குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். இவை குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும். ■

## இப்பொழுதுதான் காலம் கனிந்திருக்கிறது...

டக்ளஸ் தேவானந்தா
அமைச்சர், செயலாளர் நாயகம்,
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

13வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய காலம் தற்பொழுது தான் கனிந்து வந்திருக்கிறது. இது நம்முடைய குழந்தை எனச் சொல்லலாம். கடந்த 15 வருடங்களாக இதற்கான முயற்சிகளை எடுத்து வந்துள்ளோம். பிரேமதாஸா, சந்திரிகா, ரணில் விக்ரமசிங்க, அதன் பிறகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் இந்த முயற்சியை எடுத்திருக்கிறோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரச்சினையை சரியாகப் புரிந்துகொண்டுள்ளார். அதனால் சர்வகட்சிக்குழு முன்வைத்துள்ள இந்த 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற முடிவுக்கு அவர் வந்திருக்கிறார்.

அதனை நடைமுறைப்படுத்துவது ஜனாதிபதியின் முதல் கட்டம் ஆகும். இந்த நல்ல தொடக்கமே இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டத்தில் அரைவாசி முடிந்ததற்கு சமமானது என்று கருதுகிறேன்.

ஓர் அரசியல் தீர்வு முயற்சி முன்னோக்கி நகர முடியாமல் முடங்கிப்போயுள்ளது. அதனை முன்நோக்கி நகர்த்த வேண்டும். இதில் பிரபாகரனை எடுத்துக் கொண்டால் அவர் எந்த ஒரு இணக்கப்பாட்டிற்கும் வரப்போவதில்லை. இது வரலாற்று அனுபவமும் கூட.

அதனைப்போல ஆளும் கட்சி ஒரு தீர்வை முன்வைத்தால் எதிர்க்கட்சி எதிர்ப்பதும் பின்னர் அது மாறுபட்டு நடப்பதும் தென்னிலங்கை அரசியலில் சாதாரணமானது. இந்த நடைமுறையே தொடர்ந்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டுதான் நாம் செயற்பட வேண்டும்.

தீர்வுத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அது இப்பொழுது சாத்தியமில்லை. அதனால் நடைமுறைச் சாத்தியமாக முன்னோக்கி நகரவேண்டுமென்பதே முதற்கட்டம். எங்களுடைய எதிர்பார்ப்பின்படி இது நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் ஐம்பது வீதமான பிரச்சினைகளுக்கு இது தீர்வாக அமையும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13வது திருத்தச்சட்டம் ஒரு 'அரை அவியல்'...

நல்லையா குமரகுருபரன்
பொதுச்செயலாளர், மேலக மக்கள் முன்னணி

ஏற்கனவே அமுலில் இருக்கும் சட்டத்தை சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு இடைக்காலத் தீர்வுத்திட்டமாக முன்வைத்திருப்பதை சர்வதேச ரீதியிலோ அல்லது தேசிய ரீதியிலோ ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்ற எதிர்பார்ப்பை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவும், அதன் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரணவும் ஏற்படுத்திவிட்டு, தற்பொழுது, ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டத்தை இடைக்காலத் தீர்வுத்திட்டமாக முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இடைக்கால அறிக்கையில் மேலக மக்கள் முன்னணியும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அங்கத்துவக் கட்சியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருக்கும் இடைக்கால அறிக்கையில் எமது கட்சி கைச்சாத்திடவில்லை.

இனப்பிரச்சினை மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு புதிய தீர்வொன்றைத் தயாரிக்கும் நோக்கிலேயே சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு நியமிக்கப்பட்டது. இனப்பிரச்சினைத் தீர்வு பற்றியே கூட்டங்களிலும் ஆராயப்பட்டது. கூட்டங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்றுவந்தபோதே அரசாங்கம் பதில் குழுவொன்றை நியமித்தது. பதினெட்டு மாதங்கள் கூடி ஆராய்ந்து விட்டு ஏற்கனவே உள்ள சட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

13வது திருத்தச்சட்டம் வடக்கு, கிழக்கிற்குப் பொருந்தவில்லை. இதனை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டது. எனினும், தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இது ஒரு 'அரை அவியல்' திட்டமாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நெருங்கக்கூட இந்தச் சட்டமூலத்தால் இயலாது. ■

## தமிழ் மக்கள் ஒருபோதும் இதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்...

பந்தி வீரக்கோன்
தலைவர், லங்கா சமசமாஜக் கட்சி

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைத்திருக்கும் இடைக்காலத் தீர்வுத்திட்டம் வெறும் கண்துடைப்பு. இதனைத் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக யோசனைத் திட்டத்தில் என்ன உள்ளடக்கப்பட்டுள்ளது? இடைக்கால நிர்வாக சபைக்கு டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதிகளே மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர். இடைக்கால நிர்வாகசபையின் தலைவரும் மத்திய அரசாங்கத்தாலேயே நியமிக்கப்படுவார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபையை மீண்டும் தற்போதைய அரசாங்கம் இடைக்கால நிர்வாகசபையென்ற பெயரில் முன்வைத்துள்ளது. இதனை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ■

## நல்ல தீர்வைக் காண்பார்கள் என்று நம்புகிறோம்...

வீ. ஆனந்தசங்கரி
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பணி தொடருமெனவும், 13வது திருத்தச்சட்டம் ஒரு தற்காலிக ஏற்பாடு எனவும் மேதகு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். தமிழ் மக்களுடைய அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் குழு அதே உற்சாகத்தோடு செயற்பட்டு நல்ல தீர்வைக் காண்பார்கள் என நம்புகிறோம். சமாதானத்தையும் அமைதியையும் காண ஜனாதிபதி எடுக்கும் முயற்சிக்கு எமது பூரண ஆதரவு உண்டு.

சிலருக்கு சமஷ்டி என்ற வார்த்தை கசப்பாக இருப்பதால் சமஷ்டிக்கு மாற்றாக இந்திய முறையிலான தீர்வை வற்புறுத்தி வந்திருக்கிறோம். இந்த விடயத்திலும், வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்திலும் எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. வன்முறையை வெறுத்து ஒதுக்கி தள்ளுகின்ற நாம் சாத்வீக முறையிலும், ஜனநாயக முறையிலும் ஒற்றை யாட்சியின் கீழ் நிரந்தர தீர்வை காணமுடியாது என்ற கருத்தை எமது நாட்டு மக்களை ஏற்க வைப்போம்.

நாடு பிரியும் என்று அச்சப்படுவோருக்கு அவர்களின் அச்சத்தைப் போக்குவோம். நாட்டுப் பிரிவினை எண்ணத்தை எமது மக்கள் சிந்தனையில் இருந்து நீக்கி ஐக்கிய இலங்கை கொள்கையை வலுவாக ஆதரிக்க வைப்போம். இதை நாம் அடைய நாட்டின் ஒரு பகுதியினர் பெரியவர்கள் என்றோ சிறியவர்கள் என்றோ முன்னிலைப்படுத்தாது அரசும் சகலரும் அத்தகைய எண்ணத்தை வளரவிடாது தடுத்தல் வேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

❖ இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு 2008 ஜனவரி 23இல் ஜனாதிபதியிடம் ஒரு ஆவணத்தைக் கையளித்துள்ளது. இந்த ஆவணம் குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? அதன் உள்ளடக்கம் பற்றியும், அதனுடைய சட்ட வலு பற்றியும் விளக்குவீர்களா?

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினரால் ஜனவரி பிற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள இரண்டு பக்க ஆவணம் உண்மையில் மிகவும் ஏமாற்றத்தைத் தருகின்ற ஒன்று. சர்வகட்சி யோசனைகள் உண்மையில் எதைப்பற்றியது என்பதைப்பற்றி பல அபிப்பிராயங்கள் உள்ளன. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு திஸ்ஸ விதாரணவின் தலைமையின் கீழ் நீண்டகாலமாகக் கூடி ஆராய்ந்திருக்கிறது. 2000ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு வழங்கப்பட்ட பிரேரணையையொத்த யோசனைகளை அது முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கத்திலுள்ள பல பிரிவினருக்கு இது நடைபெறுகிறது என்று தெரிந்து அதுவுமிந்து அவர்கள் மிகவும் பதற்றமடைந்திருந்தார்கள். அவர்கள் ஒரு தீவிரம் குறைந்த, கற்பனை செய்யப்பட்டதைப் பார்க்கிலும் குறைவான ஒரு யோசனையே முன்வைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தனர். அதனால், ஏன் நாம் 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடாது என்ற யோசனையுடன் வந்துள்ளனர்.

## ஜனவரி 17 முதல் 23 வரை

ஜனவரி 17ஆம் திகதியும், அதற்கு சிறிது காலம் முன்பிருந்தும் 13வது திருத்தச்சட்டத்தை ஒட்டியதாக வும், அதைவிடவும் சற்று அதிகமானதுமான பல யோசனைகள் வெளிப்பட்டு கலந்துரையாடப்பட்டுள்ளன. 13ஆம் திருத்தச்சட்டத்தைவிட சற்று அதிகமானது என்று ஏன் நான் சொல்கிறேனென்றால், 13வது திருத்தச் சட்டத்தில் மத்திய அரசாங்கத்தினால் கையாளப்படக்கூடியதாக இருந்த ஒதுக்கீட்டுப் பட்டியலிலுள்ள விடயங்களை அரசாங்கம் கையாளாமல் விடுவதன் மூலம் மாகாணசபைகள் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டிருக்கக்கூடியதான ஏற்பாடுகள் குறித்தும் பரிசீலிக்கப்பட்டிருந்தது.

கடந்த 20 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்துவரும் 13வது திருத்தச்சட்டத்தின்படி மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டிய பொலிஸ் அதிகாரங்களை முதற்தடவையாக மாகாணங்களுக்கு வழங்கவேண்டும் என்பதும் 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஜனவரி 17ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொடுக்கப்பட்ட பல அழுத்தங்களின் காரணமாக 10 அல்லது 13 பக்கங்களைக் கொண்டிருந்த ஆவணம் இரண்டு பக்க ஆவணமாக வெட்டிச் சுருக்கப்பட்டது. மத்திய அரசாங்கமும், பாராளுமன்றமும் மாகாணசபை அதிகாரங்களில் தலையிடாமல், பொலிஸ் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்களை முழுமையாக மாகாணங்களுக்கே வழங்குவது என்ற உறுதிமொழிகள் எல்லாம் முற்றாக நீக்கப்பட்டன.

இதன் விளைவாக, இறுதியில் வெறுமனே ஒரு இரண்டு பக்க ஆவணமே, 13வது திருத்தச்சட்டத்தை விடக் குறைந்தளவு அம்சத்துடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இது ஒரு அரசியலமைப்பு ஆவணம் அல்ல. தெளிவற்ற உறுதிமொழிகள் நிறைந்த ஒன்றாகவே அது இருக்கிறது.

உதாரணமாக, இந்த இரண்டு பக்க ஆவணத்தின் ஒரு பகுதி, 'அரசாங்கம் மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க முயற்சிக்கவேண்டும்' என்றும், 'கூடுதல் பணத்தை வழங்க முயற்சிக்கவேண்டும்' என்றும் கூறுகிறது. இது சட்டரீதியாக அரசாங்கத்துக்கு எந்தக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தவில்லை. வெறுமனே தெளிவற்ற உறுதிமொழிகளாகவே அவை உள்ளன.

மிகவும் சுவாரஸ்யமான ஒரு விடயமும் இதிலுள்ளது. 'மொழிகள் தொடர்பான அரசியலமைப்பின் நான்காவது அத்தியாயத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான சட்டங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்' என்று அது சொல்கிறது. அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள விடயங்களை

# சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு யோசனை:
# சட்ட வலுவற்ற வெறும் உறுதி மொழிகள்

நேர்கண்டவர்கள்: கோ.ருஷாங்கன், மஞ்சுள கஜநாயக்க



கலாநிதி ஜெஹான் பெரேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்துவதற்கு சட்டம் இயற்றத் தேவையில்லை. "


அமுல்படுத்துவதற்கு சட்டம் இயற்றத் தேவையில்லை. இது நடைமுறைப்படுத்துதல், அரசியல் விருப்பம் மற்றும் அந்தச் சட்டத்தை மீறுவோருக்கு தண்டனை வழங்குதல் என்பதுடன் சம்பந்தப்பட்டது. ஏனெனில், தற்போது நடைமுறையிலுள்ள மொழி தொடர்பான சட்டம் தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத் துடன் தமிழ் மொழியில் தொடர்பாடல்களை மேற்கொள்ளும் உரித்துடையவர்கள் என்று சொல்கிறது. ஆனால், செயல் முறையில் இது நடைபெறவில்லை.

17ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதிக்குள் எவ்வாறு இந்த மாற்றங்கள் இடம்பெற்றன என்பதை இதன் தலைப்பு தெளிவாக விளக்குகிறது. 17ஆம் திகதியளவில் தயாரிக்கப்பட்டிருந்த ஆவணத்தைப் பார்த்தீர்களானால், '13வது திருத்தச்சட்டத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி மேற் கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்' என்று குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் இந்த இரண்டு பக்க ஆவணம், 'அரசியலமைப்பின் சம்பந்தப்பட்ட' பிரிவுகளை அமுல் படுத்துவதற்கு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்' என்று குறிப்பிட்டுள்ளது. 13வது திருத்தச்சட்டத்தின் எல்லாப் பகுதிக ளுமோ, அல்லது அரசியலமைப்பின் எல்லாப் பகுதிக ளுமோ அல்ல.

நான் நினைக்கிறேன், இதற்கு முன்னர் முன்வைக் கப்பட்ட பிரேரணைகள் பற்றியோ, அல்லது அவை தொடர்பாக ஊடகங்களில் வெளியாகியிருந்த விடயங்கள் பற்றியோ அல்லாமல், மக்கள் இந்த இரண்டு பக்க ஆவணத்தையே கவனமாகப் பார்க்க வேண்டும்.

### இடைக்காலசபை சாத்தியமானதா?

இந்த இரண்டு பக்க ஆவணத்திலுள்ள இரண்டா வது முக்கிய விடயமென்னவென்றால், அது வடக்குக்கு



ஒரு இடைக்கால சபையை ஏற்படுத்துவது பற்றிக் கூறுகிறது. இது தொடர்பில் மிகவும் பாரதூரமான அரசியலமைப்புச் சிக்கல்கள் இருப்பதாக நான் நினைக்கிறேன்.

முதலாவதாக, கிழக்கில் ஒரு சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை இருப்பதால் அங்கு ஒரு இடைக்கால சபையை அமைக்கவேண்டிய தேவை இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். கிழக்கில் தற்போது நிலவும் சூழ்நிலை யைக் கருத்திற்கொள்ளும்போது, சர்வகட்சிப் பிரதி நிதிகள் குழுவினால் எவ்வாறு இப்படிச் சொல்ல முடிகிறது என்பது ஆச்சரியமானது. சில வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமது பெயர்களைக் கொடுக்குமாறு வற்புறுத்தப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. அவர்கள் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர். மேலும், வழமையான சட்ட ஒழுங்குகள் அங்கு குழம் பிப்போய், துணை இராணுவக் குழுக்கள் மிகவும் பலமாக இருக்கின்றன. இப்படியான நிலையில், கிழக் கில் தேர்தல் நடத்த உகந்த சூழல் இருப்பதாக திஸ்ஸ வித்தாரண போன்ற மூத்த அரசியல்வாதிகளைக் கொண்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு சொல்லியிருப் பது அதிக அக்கறைக்குரியது.

உண்மையாகவே இவர்கள் இடைக்காலசபை யொன்றை அமைப்பது குறித்து சிந்திக்கிறார்களாக இருந்தால், அரசியலமைப்பின் எந்தப் பிரிவின்படி அது அமைக்கப்படப்போகிறது என்பதுபற்றி இந்த ஆவணம் சொல்லியிருக்கவேண்டும்.

வடக்கைப்பற்றிப் பார்த்தால், எவ்வாறு இந்த இடைக் காலசபை அமைக்கப்படப்போகின்றது என்பதைப்பற்றி இந்த ஆவணம் எதையுமே சொல்லவில்லை. 13வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தில் இடைக்காலசபை தொடர்பாக எதுவுமே சொல்லப்படவில்லை. இது ஒரு சுவாரஸ்யமான விடயம். இந்த ஆவணத்தில் சொல்லப் பட்டிருப்பதுபோல உண்மையாகவே இவர்கள் இடைக் காலசபையொன்றை அமைப்பது குறித்து சிந்திக்கிறார் களாக இருந்தால், என்ன வழியில் அதை அமைக்கப் போகிறார்கள், அரசியலமைப்பின் எந்தப் பிரிவின்படி அது அமைக்கப்படப்போகிறது என்பதுபற்றி இந்த ஆவணம் சொல்லியிருக்கவேண்டும். இப்போது எம்மால் அனுமானங்களை மாத்திரமே செய்ய முடியும்.

அரசியலமைப்பின் 154 (ரி) பிரிவின்படி இடைக்கால சபையொன்றை அமைக்கலாம் என்று ஜனாதிபதிக்குக் கையளித்துள்ள யோசனைகளில் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் திருக்கிறார். ஆனால், அரசியலமைப்பின் 154 (ரி) பிரிவைப் பார்த்தீர்களானால் அது நிலைமாற்றுப் பயமுறைகள் பற்றியே கூறுகிறது. 13வது திருத்தச்சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட (புதிய) மாகாணசபை முறையை அமுல்படுத்துவதில் ஏதாவது நடைமுறைச் சிக்கல்கள் இருந்தால் ஜனாதிபதி பல்வேறு பணிப்புரை களையும், வழிகாட்டல்களையும் வழங்கலாம் என்று

1 - அறுதியான ஆதிக்கமிலாமல் கொடுக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வாசகம் கூறுகிறது. அது தெளிவாக 'நிலைமாற்றுப் படிமுறைகள்' என்றே குறிப்பிட்டிருக்கிறது. 13வது திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் 20 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்தக் குறிப்பிட்ட வாசகத்தைப் பயன்படுத்தி இடைக்கால சபையை அமைக்க முடியும் என்ற வாதம் பொருத்தமானதாக இருக்கும் என்று நான் கருதவில்லை.

திஸ்ஸ வித்தாரண பூரண சரணாகதி அடைந்து, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவையும், தன்னையும் இந்த இரண்டு பக்க ஆவணத்துடன் தொடர்புபடுத்தியதன் மூலம் அனைத்தையும் வீணடித்துவிட்டார்.

ஆனாலும், அரசியலமைப்பின் அத்தியாயம் 154 (எல்), மற்றும் அத்தியாயம் 154 (எம்) ஆகியவற்றின்கீழ் இடைக்காலசபையொன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கவே செய்கின்றன. இந்த இரண்டு பிரிவுகளும் - கடும் விமர்சனத்துக்குள்ளான - மாகாணசபையின் அதிகாரங்களை ஜனாதிபதி மீளப்பெறுவதை அனுமதிக்கும் ஏற்பாடுகளுடன் சம்பந்தப்படுகிறது. ஆனால், இந்த இரண்டு பிரிவுகளையும் ஒரு இடைக்காலசபையை அமைப்பதற்குப் பயன்படுத்த முடியும்.

அது இவ்வாறுதான் அமைகிறது. ஏதாவது ஒரு மாகாணத்தில் நிர்வாகப் பணிகளை முன்னெடுப்பதில் தோல்வி காணப்படுமிடத்து - வடக்கில் அந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று ஒருவர் வாதிட முடியும் - அந்த மாகாணசபையின் சட்டவாக்க அதிகாரங்களை பாராளுமன்றம் பொறுப்பேற்க முடியும். இது முதலாவது படி.

இரண்டாவது படியாக, பாராளுமன்றம் தான் பொறுப்பேற்ற சட்டவாக்க அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்க முடியும். மூன்றாவதாக, அதாவது, மாகாணசபையிடமிருந்து பாராளுமன்றத்துக்கு, பின் பாராளுமன்றத்திலிருந்து ஜனாதிபதிக்கு வரும் இந்த சட்டவாக்க அதிகாரங்களை ஏதேனுமொரு அமைப்பிடம் ஜனாதிபதியால் ஒப்படைக்கப்பட முடியும். இந்தச் சொற்பிரயோகம் மிகவும் அகன்றதாக இருக்கிறது. இதன்படி ஏதேனுமொரு உள்ளூர் இளைஞர் அமைப்பிடம்கூட இந்த அதிகாரங்களை அவர் வழங்க முடியும்.

இடைக்காலசபையொன்றை அமைப்பதாயின் இதுதான் ஒரே வழி. டக்ளஸ் தேவானந்தாவுடனோ அன்றி அவர் இல்லாமலோ இந்த வழிமுறையில் ஜனாதிபதி இடைக்காலசபையை அமைக்க முடியும். தற்போது வடக்கில் மாகாணசபை செயலிழந்திருப்பதாலும், அரசியலமைப்பின்படி பாராளுமன்றமும், ஜனாதிபதியும் இதற்கான அதிகாரங்களைக் கொண்டிருப்பதாலும் இதனைச் செய்வதில் சிரமமேதும் இருக்காது. ஆனால், டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த யோசனையில் தெரிவிக்கப்பட்டிருப்பதுபோல, அரசியலமைப்பின் அத்தியாயம் 154 (ரீ) பிரிவின்படி இதனை அமைப்பது சாத்தியமில்லாத ஒரு விடயம்.

ஆக, இந்த இரண்டு பக்க ஆவணம் இடைக்கால சபையை அமைக்கக்கூடிய சட்ட வழிமுறைகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கவேண்டும். இதனாலேயே, இந்த இரண்டு பக்க ஆவணம் ஒரு சட்ட ஆவணமல்ல என்று நான் வாதிடுகிறேன். இதை ஒரு அரசியலமைப்பு யோசனை என்று கூடக் கூறமுடியாது.

## மொழி தொடர்பான பிரிவு

இதிலுள்ள மொழி தொடர்பான பிரிவு மிகவும் பலவீனமானதாக உள்ளது. இன்றுகூட சிங்களமும், தமிழும் எமது அரசியலமைப்பில் சம இடத்தைப் பெறவில்லை. சிங்களம் சிறிதளவு மேல் நிலையிலேயே உள்ளது. ஆக, இந்த மொழி தொடர்பான யோசனைகளை அமுல்படுத்துவதானால் அரசியலமைப்பை மாற்றவேண்டும். அல்லது, சட்டத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த ஒக்டோபரில் நான் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவித்தல் பலகையில் ஒட்டப்பட்டிருந்த எந்தவொரு அறிவுறுத்தலும் சிங்கள மொழியிலேயே இருந்தது. இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், 'சிங்களவர்களல்லாத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம்' என்று தலைப்பிட்டு ஒட்டப்பட்டிருந்த பிரசுரம் கூட சிங்களத்தில்தான் இருந்தது. ஆக, இங்கு சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துகின்ற அரசியல் விருப்பமே முக்கியமானது.

ஆக மொத்தத்தில் இந்த இரண்டு பக்க ஆவணம் எதிர்பார்க்கப்பட்டதைவிட ஒரு வீழ்ச்சி என்றே கூற வேண்டும். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பேராசிரியர் திஸ்ஸ விதாரணவில் மக்கள் அதிக மதிப்பை வைத்திருந்தனர். அவர் மிகக் கடுமையாக முயற்சிப்பதாக அவர்கள் நம்பியிருந்தனர். கடந்த வாரம் திஸ்ஸ வித்தாரண பூரண சரணாகதி அடைந்து, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவையும், தன்னையும் இந்த இரண்டு பக்க ஆவணத்துடன் தொடர்புபடுத்தியதன் மூலம் அனைத்தையும் வீணடித்துவிட்டார்.

ஆங்காங்கே துண்டு துண்டாக வெட்டி ஒட்டப்பட்ட ஒரு ஆவணமாக, எந்தவொரு அர்த்தத்தையும் வழங்காத ஒன்றாகவே இது காணப்படுகிறது.

இந்த இரண்டு பக்க ஆவணம் மிகவும் மோசமான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பெருமளவிலான பகுதி வெட்டப்பட்டு, ஒன்றுக்கொன்று தர்க்கத் தொடர்பில்லாத வகையில் அதில் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. திடீரென சில பகுதிகள் ஜீ.எல்.பீரிஸ் போன்றவர்களுடையவை போன்று தோன்றுகின்றன. முழுமையாகப் பார்த்தால் ஆங்காங்கே துண்டு

**"'சிங்களவர்களல்லாத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம்' என்று தலைப்பிட்டு ஒட்டப்பட்டிருந்த பிரசுரம் கூட சிங்களத்தில்தான் இருந்தது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டாக வெட்டி ஒட்டப்பட்ட ஒரு ஆவணமாக, எந்தவொரு அர்த்தத்தையும் வழங்காத தொன்றாகவே காணப்படுகிறது.

**❁ ஆனால், இது ஒரு இடைக்கால யோசனை மட்டுமே என்றும், இறுதி யோசனை இனிமேல்தான் வெளியிடப்படும் என்றும் அரசாங்கம் வாதிடுகிறதே. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

ஆம், இருக்கலாம். அது நடக்கலாம். ஆனால், திஸ்ஸ வித்தாரணவும், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவும் கையாளப்பட்டிருக்கும் முறைதான் இங்குள்ள சந்தேகம். என்ன நடந்தது என்பதைப் பாருங்கள்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியைச் சந்திக்கிறது. ஜனாதிபதி அவர்களிடம் ஒரு யோசனை வடிவைக் கொடுத்து அதனை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனையாகத் தம்மிடம் மீண்டும் சமர்ப்பிக்கவேண்டும் என்று கோரியிருக்கிறார். இது மிகவும் மூத்த அரசியல் பிரமுகர்களைக் கொண்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஒட்டுமொத்த மதிப்பின் அளவைக் காட்டுகிறது.

## ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும்

அடுத்த விடயம் என்னவென்றால், ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும் கொண்டிருக்கும் அதிகாரங்கள். இவர்களுக்கு ஜனாதிபதியுடன் மிகவும் நெருக்கம் இருப்பதுடன், அமுல்படுத்தப்பட வேண்டும் என்று தாங்கள் விரும்புகின்ற அனைத்தையும் அவர்கள் ஜனாதிபதியின் மூலம் செய்விக்கிறார்கள்.

அரசியலமைப்பின் கோணத்தில் பாருங்கள். திஸ்ஸ வித்தாரண, டியூ. குணசேகர மற்றும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர்கள் பலரும் அமைச்சரவை உறுப்பினர்கள். இவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களும்கூட. ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும், அமைச்சரவையின் ஒரு அங்கமாக இல்லாத நிலையிலும் - இவர்களில் அனேகமானோரும் மேற்பட்டோர் எதிரணியில் இருக்கின்றபோதிலும் - இவர்கள் அமைச்சரவை அமைச்சர்களைவிட சக்திமிக்கவர்களாக உள்ளனர். இவர்களுடைய குரலுக்கு ஜனாதிபதியிடம் அதிக மதிப்புண்டு. ஜனாதிபதி செயலகத்தின் மீதான கட்டுப்பாட்டை இவர்கள் கொண்டிருப்பதுடன், அமைச்சர்களைவிட, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பாரம்பரியமாக அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களைவிட அவருடன் மிகவும் நெருக்கமானவர்களாகத் தெரிகின்றனர்.

இந்த மிகவும் சுவாரஸ்யமான விடயங்கள் நடந்தேறுகின்றன. ஜனாதிபதி ஆட்சிமுறையின் சிக்கல்கள் இங்கு தெளிவாகத் தெரிகின்றன. அமைச்சரவையோ, பாராளுமன்றமோ சக்திமிக்கதாக இருப்பதைவிட, ஜே.வி.பி.யினாலும், ஜாதிக ஹெல உறுமயவினாலும் கிட்டத்தட்ட முழுமையாகப் பொறுப்பேற்கப்பட்டுவிட்ட ஜனாதிபதி செயலகமே கூடுதல் அதிகாரம் கொண்டதாக விளங்குகிறது.



**" அமைச்சரவையையோ, பாராளுமன்றத்தையோவிட ஜே.வி.பி.யினாலும், ஜாதிக ஹெல உறுமயவினாலும் கிட்டத்தட்ட முழுமையாகப் பொறுப்பேற்கப்பட்டு விட்ட ஜனாதிபதி செயலகமே கூடுதல் அதிகாரம் கொண்டதாக விளங்குகிறது "**

எல்லோரும் மகிந்த சிந்தனை பற்றிப் பேசுகிறார்கள். ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை இந்த ஜனாதிபதியின் முதலாவது ஆட்சித் தவணையின் முடிவில் இல்லாதொழிப்பதாக மகிந்த சிந்தனையின் வாக்குறுதியளிக்கப்பட்டிருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

என்னைப் பொறுத்தவரையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தனது இறுதி யோசனையை முன்வைக்க இயலாதவர்கள் என்று நான் கருதவில்லை. ஆனாலும், 63 தடவைகள், சுமார் ஐந்நூறுக்கும் அதிகமான மணித்தியாலங்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்ட திஸ்ஸ வித்தாரண மக்களுக்குப் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளார். அவர் ஒரு சுய கௌரவமான முதுகெலும்பைக் காட்டி, 'இதுதான் எமது யோசனைகள். ஜனாதிபதியும், அரசாங்கமும் இதனை விரும்புவதாகத் தெரியவில்லை. ஆனால், இதுதான் எமது யோசனை' என்று வெளிப்படையாக அறிவிக்கவேண்டும். இல்லாவிட்டால், அவரது நம்பகத்தன்மை மிகவும் பாதிக்கப்படும்.

## இந்தியாவின் நிலைப்பாடு

சர்வதேச நாடுகள் சில இந்தக் குறைபாடுள்ள யோசனை குறித்து மிகவும் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது குறித்து நான் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆச்சரியப்படுகிறேன். முக்கியமாக இந்தியா, இந்தியர்கள் இந்திய - இலங்கை உடன்படிக்கையை ஆதரித்திருந்தனர். இலங்கையின் பல் கலாசார, பல்லின பண்பு தொடர்பான பெரிய பகுதியொன்றை இந்த உடன்படிக்கை கொண்டுள்ளது. இது எந்த அரசியலமைப்பிலோ, 13வது திருத்தச்சட்டத்திலோ அல்லது மாகாணசபைகள் சட்டத்திலோ இல்லாத ஒன்று. இது வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதையும் உள்ளடக்கியுள்ளது. 13வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தில் இது இல்லாவிட்டாலும், அதனுடன் இணைந்ததான மாகாணசபைகள் சட்டத்தில் இது உள்ளது.

வடக்கு, கிழக்கு இணைப்பை சட்டவிரோதம் என்று அறிவித்த பிரபலமான உயர்நீதிமன்றத் தீர்ப்பினூடாக 13வது திருத்தச்சட்டமும், மாகாணசபைகள் சட்டமும் சேர்த்தே நோக்கப்பட்டன. ஏனெனில், மாகாணசபைகள் சட்டம் வெறுமனே வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பாக மட்டுமன்றி, மாகாணசபை முறைமையின் மிக முக்கியமான பகுதிகளான மாகாண நிதி மற்றும் மாகாண பொதுச்சேவைகள் பற்றியும் பேசுகிறது.

நான் நினைக்கிறேன் இந்தியர்கள் இதனைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். இது ஒரு படி பின்னோக்கியபடிதே தவிர, முன்னேற்றப் படி அல்ல.

எனவே, இந்திய இலங்கை உடன்படிக்கையை ஒத்த ஒரு தீர்வை இந்தியா விரும்புவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஏனெனில், அது வடக்கு, கிழக்கு இணைப்பு, பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் என எல்லாவற்றையும் உள்ளடக்கியுள்ளது. ஆனால், இந்த இரண்டு பக்க ஆவணத்தை வரவேற்று, இது ஒரு முன்னேற்றப்படி என்று அவர்கள் கூறுவது வேடிக்கையாக உள்ளது. நான் நினைக்கிறேன் இந்தியர்கள் இதனைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். இது ஒரு படி பின்னோக்கியபடிதே தவிர, முன்னேற்றப்படி அல்ல.

**◉ குழு 'ஏ' இன் அறிக்கை அல்லது பெரும்பான்மை அறிக்கை என்று சொல்லப்பட்ட அறிக்கையுடன் இதனை நீங்கள் எவ்வாறு ஒப்பிடுவீர்கள்?**

இது அதைவிட மிகமிகக் குறைவானதொன்று. இந்தப் பெரும்பான்மை அறிக்கை 2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பு யோசனைகளை விட சற்று அதிகமாகவே செல்கிறது. மிகவும் அகன்ற அதிகாரப்பரவலாக்கலை முன்வைக்கிறது.

இதிலுள்ள சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், கலாநிதி.சில்வா, கோமின் தயாசிறி, ஜெரி பீரிஸ் மற்றும் மனோகரன் டி சில்வா ஆகியோரின் சிறுபான்மையினரின் அறிக்கை என்று அழைக்கப்பட்ட குழு 'பீ'யின் அறிக்கைகூட மிகவும் நேர்த்தியாக வரையப்பட்டிருந்தது. இது சமஷ்டி தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்தியிருந்ததுடன், மிகவும் செயல்திறன் மிக்க வழிமுறைகளையும் முன்வைத்திருந்தது. ஆனாலும், இதுகூட மாகாணங்களே அதிகாரப்பரவலாக்கலின் அடிப்படை என்று கூறியிருந்தது. ஆனால், இந்த இரண்டு பக்க ஆவணம், குழு 'பீ' யின் இந்த அறிக்கையைவிட குறைந்த ஒன்று என்றுதான் நான் சொல்வேன்.

எல்லாவற்றுக்கும் அப்பால் திஸ்ஸ விதாரண தனது சொந்த யோசனையை வெளியிடவேண்டும் என்றுதான் யாரும் எதிர்பார்க்க முடியும். நான் நினைக்கிறேன் அதுதான் நடக்கும். அதை ஏற்றுக்கொள்வதும், விடுவதும் அரசாங்கத்தைப் பொறுத்தது. எல்லாவற்றுக்கும் அப்பால் இது ஒரு சர்வகட்சிக் குழு மட்டுமே. அதன் யோசனை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்ற எந்த உத்தரவாதமும் கிடையாது.

இந்த இரண்டு பக்க ஆவணம், குழு 'பீ' யின் அறிக்கையைவிட குறைந்த ஒன்று.

## தமிழ் மக்களுக்கான செய்தி

**◉ பண்டா-செல்வா உடன்படிக்கை முதல் இலங்கை அரசாங்கங்களுடன் தமிழர் தரப்பு செய்துகொண்ட அனைத்து உடன்படிக்கைகளும் கைவிடப்பட்டன. இப்போது முன்வைக்கப்பட்டிருக்கும் இந்த இரண்டு பக்க யோசனையில் உருப்படியான எந்த அம்சமும் இல்லை என்று கூறுகிறீர்கள். அப்படியானால், இதன்மூலம் தமிழ் மக்களுக்குச் சொல்லப்படும் செய்தி என்ன?**

இது சுவாரஸ்யமான கேள்வி. இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் முழு நோக்கமும் தென்பகுதி இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதுதான். அதாவது, சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை முன்வைப்பது பற்றியது. ஆனால், தமிழ் மக்களுடனும், தமிழ் தலைவர்களுடனுமான பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய ஒரு அரசியலமைப்பு மாற்ற யோசனைபற்றியே நாம் பேசுகிறோம். ஏனெனில், தாம் பல ஆண்டுகளாக ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக அவர்கள் வாதிடக்கூடும். அவர்களிடம் சில அபிலாசைகள், கோரிக்கைகள் உண்டு.

இலங்கை அரசாங்கமும், தற்போதைய அரசாங்கத்திலிருக்கும் கட்சிகளும் தமிழ் மக்கள்பால் அக்கறையோ, அல்லது அவர்களுடைய போராட்டத்தின் புரிதலை எளர்ச்சி மற்றும் வரலாறு தொடர்பான புரிதலையோ கொண்டிருக்கவில்லை என்பதுதான் தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> "அதிகாரப்பரவலாக்கலுக்குப் பதிலாக, மத்தியில் மீண்டும் அதிகாரங்களைக் குவிக்கும் ஒரு நடைமுறையாகவே இது அமையப்போகிறது"

ஆனால், தமிழ் மக்களின் சில அபிலாசைகள், கோரிக்கைகளுக்கு முகம் கொடுக்கும் முரண்பாட்டு தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைக்கு அடிப்படையான ஒரு யோசனைபற்றி நாம் பேசுகிறோமானால், இந்த இரண்டு பக்க யோசனை சுமார் 20 வருடங்கள் பின்நோக்கிச் செல்கிறது என்றுதான் சொல்வேன். இதன்மூலம் தமிழர்களுக்கு சொல்லப்படுகின்ற செய்தி என்னவென்று கேட்டால், இலங்கை அரசாங்கமும், தற்போதைய அரசாங்கத்திலிருக்கும் கட்சிகளும் தமிழ் மக்கள்பால் அக்கறையோ, அல்லது அவர்களுடைய போராட்டத்தில் பரிமாண வளர்ச்சி மற்றும் வரலாறு தொடர்பான புரிதலையோ கொண்டிருக்கவில்லை என்பதுதான். இது சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் ஏற்கனவே பிளவுண்டிருக்கும் உறவை மேலும் மோசமாக்கும் என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே, ஒரே நாட்டுக்குள்ளோ, அல்லது ஐக்கிய இலங்கைக்குள்ளோ எந்தவொரு தீர்வும் சாத்தியமில்லை என்ற முடிவுக்கே தமிழ் மக்கள் வரவேண்டியிருக்கும். அமைதிப் பேச்சுவார்த்தைக்குள் செல்வதற்குக் கூட அக்கறை குறைந்த ஒரு நிலைதான் இங்கே காணப்படுகிறது. இந்த நிலைமையும், இதனோடு சேர்த்து முன்னெடுக்கப்படும் பல நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்போகும் ஆபத்து என்னவென்றால், எல்லா முயற்சிகளுமே தோல்வியில் முடியப்போகிறது என்பதுதான். விடுதலைப் புலிகளிடமிருந்து விலகிச் செல்லும் தமிழ் மக்கள்கூட, விடுதலைப் புலிகள் மட்டுமே தமது பாதுகாவலர்கள், கௌரவத்தையும் உத்தரவாதப்படுத்தக்கூடிய ஒரே சக்தி என்ற முடிவுக்கு வருவர். இது, நீடித்து நிலைக்கக்கூடிய எந்தவொரு தீர்வு முயற்சியையும் சாத்தியமில்லாததாக்கிவிடும்.

மற்றுமொரு முக்கிய விடயம் என்னவென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் கிழக்கு மாகாணத் தேர்தல் சுதந்திரமாகவோ, நீதியாகவோ நடைபெறப்போவதில்லை என்பது நிச்சயம். ஆக, இந்தத் தேர்தல் மூலம் உருவாக்கப்படப் போகும் நிர்வாகம் அரசியல் கட்சிகளின் நிர்வாகமாக அன்றி, மத்திய அரசாங்கத்தின் நிர்வாகமாகவே இருக்கும். இதேபோல், வடக்கில் உருவாக்கப்படப் போகும் இடைக்காலசபையும் மத்திய அரசினாலேயே உருவாக்கப்படப்போகும் ஒன்று என்ற வகையில், அது மத்தியினதும், ஜனாதிபதியினதும் ஒரு நீட்சியாகவே அமையுமே தவிர, அதிகாரங்களைப் பகிரும் ஒன்றாக இருக்காது. எனவே, அதிகாரப்பரவலாக்கலுக்குப் பதிலாக, மத்தியில் மீண்டும் அதிகாரங்களைக் குவிக்கும் ஒரு நடைமுறையாகவே இது அமையப்போகிறது. இதன்மூலம் உருவாக்கப்படும் அமைப்புக்கள் இருக்கும் வரையில் எந்தவொரு தீர்வு முயற்சியும் சாத்தியமில்லாமலே போகும்.

## போர்நிறுத்த உடன்படிக்கை

**ஓரளவுக்கேனும் மக்களுக்கு நம்பிக்கையைத் தந்த ஒன்றாக இருந்த போர்நிறுத்த உடன்படிக்கை இப்போது இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. தீர்வுக்கான முயற்சிகளும் வெற்றிபெறப்போவதில்லை என்று கூறுகிறீர்கள். அப்படியானால், நாம் எங்கு போய்க் கொண்டிருக்கிறோம்? இந்த நிலைமைகளிலிருந்து மீள என்ன வழிதான் இருக்கிறது?**

ஆம். போர்நிறுத்த உடன்படிக்கை செயலிழக்கச் செய்யப்பட்டது துரதிர்ஷ்டமே என்றாலும், அது செயலிழந்து போவதற்கான பலவீனங்களை அதுவே தன்னகத்தில்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது என்பதுதான் உண்மை. ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளும் குறைபாடுகளைக் கொண்டிருந்தது. மனித உரிமைகள் விடயங்களில் விக்கிரம சிங்கா வலுவான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவில்லை என்பது இதில் குறிப்பிடத்தக்க ஒன்று.

இதனால், அவர் தேவைக்கு அதிகமாக விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்துகிறார் என்ற ஒரு பார்வை சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. தமது அரசியல் எதிரிகளைப் பலவீனப்படுத்துவதற்கு புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்துகிறார்கள் என்று அவர்கள் கருதினர்.

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்த குறைபாடுகளே, சமாதான முயற்சிகளை எதிர்த்தவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உதவியிருக்கிறது.

இந்த உடன்படிக்கையை ஆதரித்த எம்மைப் போன்றவர்களும்கூட அதிலுள்ள சில குறைபாடுகளை இப்போது ஏற்றுக்கொள்ளவே செய்கிறோம். இந்தக் குறைபாடுகளே, சமாதான முயற்சிகளை எதிர்த்தவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உதவியிருக்கின்றன.

இதற்கு அப்பாலும், போர்நிறுத்த உடன்படிக்கை பல சாதக அம்சங்களைக் கொண்டிருந்தது. கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. மக்களுக்கிடையிலான தொடர்பாடல்கள் அதிகரித்தன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வடக்குக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாட முடிந்தது. பல விடயங்களில் எமது பார்வைகளுக்கு அங்கு சவால் விடுக்கப்பட்டது. அதன்மூலம் நாமும் நிறையக் கற்றுக் கொண்டோம்.

இந்தக் கண்ணோட்டத்தில் போர்நிறுத்த உடன்படிக்கை செயலிழக்கச் செய்யப்பட்டது துரதிர்ஷ்டமானது. மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆவணப்படுத்தல்களைச் செய்துவந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும் சேர்த்து நோக்கும்போது, தற்போது இருக்கும் இந்த அரசாங்கம், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் ஒரே வழி இராணுவ வழிமுறைதான் என்ற முடிவுக்கு வருகிறது. இந்தத் தந்திரோபாயம் சிங்கள மக்களின் ஒரு பகுதியினரிடமிருந்து செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. சமாதான முயற்சிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுபோல, இந்த வழிமுறைக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படத்தான் வேண்டும்.

**“போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்த குறைபாடுகளே, சமாதான முயற்சிகளை எதிர்த்தவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உதவியிருக்கிறது”**

**“ஏதோவொரு புள்ளியில், இந்த இராணுவ வழிமுறையின் எல்லைகள் உணரப்படும் என்று நான் நம்புகிறேன்”**

இந்த வழிமுறை வெற்றிபெறப்போவதில்லை என்பதே எனது கருத்து. இந்தப் பரீட்சார்த்த வழிமுறைக்கான விலையை இவர்கள், குறிப்பாக சாதாரண பொதுமக்கள் செலுத்தப்போகிறார்கள். ஏதோவொரு புள்ளியில், இந்த இராணுவ வழிமுறையின் எல்லைகள் உணரப்படும் என்று நான் நம்புகிறேன். அந்தப் புள்ளியில் காத்திரமான பேச்சுவார்த்தைகளுக்கும், அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான முயற்சிகளுக்கும் இடம் ஏற்படும். ஆனால், அந்தப் புள்ளி எப்போதாவது எட்டப்படுமானால், இந்த இரண்டு பக்க சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனை ஒருபோதும் அதற்குப் பிரயோசனப்படாது. இது சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு யோசனை என்பதைவிட, ராஜபக்ஷ 'ஜாதிக ஹெல உறுமய' யோசனை என்றுதான் கூறவேண்டும்.

2000ஆம் ஆண்டு அரசியலமைப்பு மாற்ற பிரேரணை, குழு 'ஏ' யின் அறிக்கை, குழு 'பி' யின் அறிக்கை எல்லாவற்றையும் அந்த நேரத்தில் நாம் மிகவும் சீரியஸாகக் கருத்தில் எடுத்து ஆராய வேண்டியிருக்கும். இவற்றுள், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வை ஏற்றுக்கொள்ளும் ஒஸ்லோ பிரகடனமும் மிகவும் பிரயோசனமான ஒன்றாக இருக்கும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதி அறிக்கை இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை

பேராசிரியர் திஸ்ஸ விதாரண

நேர்கண்டவர்: விஸ்வா ஞானதாசன்
தமிழில்: மகேஸ்வரன் பிரசாத்

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட யோசனை மற்றும் அது தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்கி, அந்தக் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண 'த நேஷன்' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் சில பகுதிகள்.

கேள்வி: சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு நாட்டில் சர்ச்சைக்குரிய விடயமாகத் தோற்றம் பெற்றுள்ளது. கடந்த வாரம் யோசனைத் திட்டமொன்றை நீங்கள் ஜனாதிபதியிடம் கையளித்திருந்தீர்கள். எனினும், அது இறுதி யோசனைத் திட்டம் இல்லையெனக் கூறப்படுகிறது. அவ்வாறெனில் இறுதி ஆவணம் எங்கே? அது எப்பொழுது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்?

பதில்: ஆம், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கை இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை. இறுதியாக முன்வைக்க எதிர்பார்த்திருக்கும் இறுதி ஆவணத்தைத் தயாரிப்பது தொடர்பாக ஆராயும் எதிர்காலக் கூட்டங்களுக்கான அட்டவணையைத் தயாரிக்கும் நோக்கில் கடந்த திங்கட்கிழமை (ஜனவரி 28) கூடியிருந்தோம். தற்பொழுது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் யோசனைத் திட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் எந்தவிதமான மாற்றங்களும் செய்யாமல் குறுகிய காலத்துக்கு அமுல்படுத்தக்கூடிய திட்டங்களே. ஜனாதிபதியும், அரசாங்கமும் 13வது திருத்தச்சட்டத்தை விரைவில் முழுமையாக அமுல்படுத்துவார்கள் என நாங்கள் நம்புகின்றோம்.

**கேள்வி: இறுதியாக ஜனாதிபதியிடம் இரண்டு தொகுதி ஆவணங்கள் கையளிக்கப்பட்டிருப்பதாக நாங்கள் அறிகின்றோம். ஒன்று சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் தயாரிக்கப்பட்டது. மற்றையதும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவாலேயே தயாரிக்கப்பட்டதாக இருந்தாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வற்புறுத்தலுக்கமையத் தயாரிக்கப்பட்டது. ஏன் இவ்வாறு நிகழ்ந்தது?**

பதில்: தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வை முன்வைக்கக்கூடிய புதிய அரசியலமைப்புக்கு எது அடிப்படையாக அமையக் கூடியது என்பதைக் கண்டுபிடிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதே சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் குறிக்கோள் என்பதையே எல்லோரும் கூற முடியும். எமது கலந்துரையாடல்களின்போது, 13வது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துவது, கிழக்கில் தேர்தலை நடத்துவது மற்றும் வடக்கில் தேர்தல்கள் நடத்தப்படும் வரை இடைக்கால நிர்வாகசபையொன்றை அமைப்பது போன்ற யோசனைகள் அடங்கிய ஆவணமொன்றை ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்தார். முன்வைக்கப்பட்ட ஆவணத்தின் இயலுமை தொடர்பாக ஆராயும் விருப்பத்தை வெளிப்படுத்திய அதேவேளை, அதனை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனையாக ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தது. இதன் பின்னர் ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை ஒத்த யோசனைகளை உள்ளடக்கிய ஆவணமொன்று முன்வைக்கப்பட்டது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு கூடி தனது பிரதான அறிக்கையை இறுதிப்படுத்துவதற்கு மேலும் காலம் தேவைப்படலாம் என்பதால், உடனடியாக அமுல்படுத்தப்படுவதற்கு ஒரு தொகுதி யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவில்லாமல் தற்போதைய அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி அதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் பெறமுடியாது எனவும், அதனால், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தற்போது முன்னெடுக்கும் முயற்சிகள் ஊடாக ஒரு தீர்வை முன்வைப்பதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்பதுடன், அதுகூட, 'இலகுவில் கிடைக்க முடியாத ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவில்' தங்கியிருக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். எனவே, தற்போதைய அரசியலமைப்புக்கு அமைய 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதனூடாக அமுல்படுத்தப்படக்கூடிய விடயங்களை இனங்காணும் யோசனையொன்று சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஊடாக முன்வைக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரினார். இதற்கமையத் தயாரிக்கப்பட்ட ஆவணமே ஜனவரி 23ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

**கேள்வி: 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் ஜனாதிபதியின் இறுதிநேர யோசனையை இணைத்துக் கொள்ளுமாறு நீங்கள் பலவந்தப்படுத்தப்பட்டதாக பரவலாக நம்பப்படுகிறது. இது சரியா?**

பதில்: சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைத் திட்டங்கள் தொடர்பான அண்மைய முன்னேற்றங்கள் குறித்து நான் கூறிய விடயங்களை நாட்டு மக்கள் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகித்த 14 கட்சிகளில் (மலையக மக்கள் முன்னணி தவிர்ந்த) ஏனைய 13 கட்சிகள் இந்த ஆவணத்தில் கையெழுத்திட்டிருப்பதன் மூலம் அதனை அவை ஏற்றுக்கொண்டுள்ளன. அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத, எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட இந்த யோசனைத் திட்டம் சரியானது என்று எடுத்துக்காட்டியுள்ளது.

**கேள்வி: நீங்கள் தயாரித்த 13 பக்க அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த பின்னர் வெறும் இரண்டு பக்கங்களாகக் குறைக்கப்பட்டதாகக் கூறப்படுவது சரியானதா?**

பதில்: இதுவும் சரியானது அல்ல. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகித்த கட்சிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் நான் முன்வைத்த 13 பக்க அறிக்கையின் முக்கிய பகுதிகளுக்கு சில அங்கத்துவக் கட்சிப் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்புக் காட்டியிருந்தனர். அத்தகைய எதிர்ப்பு இருந்திருக்காவிட்டால், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அங்கத்தவர்கள் அனைவரும் எனது அறிக்கையை முழுமையாக ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்ட பின்னர் அதனை நான் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருப்பேன். எனது அறிக்கைக்கு எதிர்ப்புக்கள் தோன்றியதாலேயே, இந்த முட்டுக்கட்டையை நீக்கும் வகையில் ஜனாதிபதி இதில் தலையிட்டு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து ஒரு இறுதி இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டியேற்பட்டது. 13வது திருத்தச்சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாமல் போனமைக்குக் காரணங்களாக இருந்த சில முக்கிய விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்படுவது சாத்தியமில்லை என்று இனங்காணப்பட்ட போது, ஒரு இறுதி இணக்கப்பாட்டை எட்டுவதற்காக அவை கிட்டத்தட்ட முழுமையாகவே கைவிடப்பட்டன. எனவே, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குள் ஏற்பட்ட முட்டுக்கட்டையைப் போக்கி ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே பிரதானமாக ஜனாதிபதி இதில் தலையிட்டார் என்பது நிரூபணமாகிறது.

**"சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குள் ஏற்பட்ட முட்டுக்கட்டையைப் போக்கி ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே பிரதானமாக ஜனாதிபதி இதில் தலையிட்டார்"**

**கேள்வி: உங்கள் தலைமைத்துவத்தின் கீழ் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்படாத விடயமொன்றை முன்வைக்குமாறு ஜனாதிபதி பலவந்தப்படுத்தினால் உங்களுடைய நற்பெயருக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: எமது பிரதான அறிக்கை இறுதிப்படுத்தப்படும்வரை 13வது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தும் யோசனை முன்வைக்கப்பட்டிருக்கக் கூடாது என்பதையே நான் விரும்பியிருப்பேன். எனினும், இது எதிர்பாராத விதமாக நிகழ்ந்த ஒன்றாகும். சர்வகட்சிக் குழு மற்றும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஆகியவற்றை ஏற்படுத்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி உடனடியாகத் தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமெனக் கூறும்போது தலைவர் என்ற ரீதியில் ஏனைய சர்வகட்சிப் பிரதிநிதிகளுடன் இணைந்து அதனை நிறைவேற்றுவதைத் தவிர வேறு மார்க்கம் எமக்கு இருக்கவில்லை. எனது கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் உறுப்பினர் என்ற வகையில், அல்லது அதையொத்த ஏனைய அரசியல் கட்சிகளோடு இணைந்து இந்த முழுச் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டிருந்தால் நான் வேறு விதமாக நடந்துகொண்டிருப்பேன். எனினும், இந்த நாட்டின் எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்ட இலங்கையிலுள்ள மக்களும், வெளிநாடுகளில் உள்ளவர்களும், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தற்போது எடுத்த முடிவை எடுக்கவேண்டியேற்பட்ட சூழ்நிலையைப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**கேள்வி: சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு 63 தடவைகள் கூடி 20 வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 13வது திருத்தச்சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்தும் யோசனைகளை உள்ளடக்கிய இரண்டு பக்க அறிக்கைகளையே முன்வைத்துள்ளது. இந்த முழுச் செயற்பாடுமே வீணான ஒன்று என்று நீங்கள் கருதவில்லையா?**

பதில்: அது இரண்டு பக்க ஆவணம் அல்ல. எட்டுப் பக்கங்களைக் கொண்டிருந்தது. எனினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் என்று நான் எதிர்பார்த்ததனி அது சிறிய ஆவணம் என்பது உண்மையே. ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைய குறுகிய காலத்தில் முன்வைக்கப்பட்ட ஒரு யோசனையே அது என்பதையும், எந்த வகையிலும் அது எமது இறுதி யோசனை அல்ல என்பதையும் நான் இங்கு அழுத்திக் கூற விரும்புகிறேன். புதிய அரசியலமைப்புக்கான அடிப்படையாக அமைவதுடன், தேசியப் பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வை வழங்குவதுமான ஆவணம் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கலந்துரையாடல்களின் இறுதிக்கட்டத்தில் உள்ளது.

திட்டமிட்டபடி ஜனவரி 28ஆம் திகதி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு சந்தித்திருந்ததுடன், அந்தக் கூட்டம் பற்றிய விரிவான அறிக்கையை ஊடகங்கள் உட்பட அனைவருக்கும் நான் வழங்கியிருந்தேன். இதில், நாம் எமது முயற்சிகளைக் கைவிடவில்லை என்பதையும், கடந்த ஒன்றரை வருட காலமாக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளை விரைவில் நிறைவு செய்து, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படையாக இருக்கக்கூடிய யோசனைகளை இந்த நாட்டுக்கும், மக்களுக்கும் முன்வைப்போம் என்பதையும் விளக்கியிருந்தோம். எமது இணக்கப்பாட்டு யோசனை தயாரானதும், மீண்டும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுடன் இணைந்து கொள்ளுமாறு அவர்களது பங்களிப்பையும் வழங்கி இந்த இணக்கப்பாட்டை விரிவாக்க உதவுமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுப்பதே எமது நோக்கம். இதன்மூலம் இந்த நாட்டில் அரசாங்கங்களை அமைத்துள்ள இரண்டு கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த இணக்கப் பாட்டின் அங்கங்களாகிவிடும்.

**கேள்வி: 13வது திருத்தச்சட்டத்தை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அறிக்கையில் உள்ளடக்கவிட்டு அதனை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனை என்று பிரகடனப்படுத்துமாறு எப்போதாவது ஜனாதிபதி உங்களுக்கு அழுத்தம் கொடுத்தாரா?**

பதில்: இல்லை. தமிழ் மக்களின் சில பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் அரசாங்கத்தினால் உடனடியாக அமுல்படுத்தப் படக்கூடிய குறுகியகாலத் தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்குமாறே ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். அரசாங்கம் தேவையான நடவடிக்கை களை முன்னெடுப்பதற்காக இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டமையானது, புதிய அரசியலமைப்புக்கான பிரதான யோசனைகளை முழுமையாக்கும் எமது முயற்சிகளைத் தடுத்து நிறுத்தாது.

**கேள்வி: அனைத்துச் செயற்பாடுகளையும் தாமதப்படுத்துமாறு ஜனாதிபதி கோரியதை நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள்?**

பதில்: கடந்த ஒன்றரை வருடங்களாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் தயாரித்த யோசனைத் திட்டங்களைத் தன்னிடம் கையளிப்பதற்கு ஜனவரியில் ஒரு குறிப்பிட்ட காலவரையறையை ஜனாதிபதி வழங்கியிருந்தார். எனினும், தமிழ்பேசும் மக்களை வென்றெடுக்கவும், அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான தமது அர்ப்பணிப்புக் குறித்து சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தவும் 13வது திருத்தச்சட்டம் இப்போதைக்குத் தனக்குப் போதுமானது என்றும், இதன்மூலம் எமது பிரதான யோசனையைத் தயாரித்து அவரிடம் கையளிப்பதற்கு நாம் போதிய காலத்தை எடுத்துக் கொள்ளலாம் என்றும் அவர் எம்மிடம் குறிப்பிட்டார்.

**கேள்வி: மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைத் திட்டத்தில் இணைக்கவேண்டாமென ஜனாதிபதி உங்களிடம் கூறியது உங்களை அதிர்ச்சிக்குள்ளாக் கியிருந்ததாகக் கேள்விப்படுகிறோம். இது உண்மையா?**

பதில்: நான் ஏற்கனவே கூறியதைப்போல 13வது திருத்தச்சட்டம் தொடர்பான எனது யோசனைத் திட்டங்களில் சில பகுதிகளை நீக்குவது தொடர்பான சிக்கல் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குள்ளேயே எழுந்தது என்பதுடன், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் முழு நடவடிக்கைகளுக்கும் அவசியமானது என்று நான் கருதிய பொது இணக்கப்பாட்டைப் பேணும் நோக்கத்துடனேயே அவை அவ்வாறு நீக்கப்பட்டன. நான் முன்வைத்த யோசனை எந்த எதிர்ப்புகளும் இன்றி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு உறுப்பினர்க ளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமாயிருந்தால், இந்த ஆவணம் மேலும் முழுமையானதாகவும், செயற்றிறன் வாய்ந்ததாகவும் இருந்திருக்கும். எனினும், நானோ, அல்லது சர்வகட்சிப்பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர்களோ அவற்றை நடைமுறைப் படுத்தும் இயந்திரங்களைக் கொண்டவர்கள் அல்ல. அது ஜனாதிபதியும், அரசாங்கமும் மாத்திரமே. எனவே, நான் எதிர்வுகூறியிருந்த யோசனைகளுடன் நாம் வந்திருந்தாலும் ஜனாதிபதியும், அரசாங்கமும் அதனை முழுமையாகவோ பகுதியாகவோ நடைமுறைப்படுத்தியிருக்கவேண்டும். அல்லது எதையுமே அமுல்படுத்தாமல் விட்டிருக்க வேண்டும். எனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஒரு நிலைமை தொடர்பில் என்னைக் குற்றஞ் சாட்டுவது நீதியானதல்ல என்று நான் கருதுகிறேன்.

நான் முன்வைத்த யோசனை எந்த எதிர்ப்புக்க ளும் இன்றி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கு மாயிருந்தால், இந்த ஆவணம் மேலும் முழுமை யானதாகவும், செயற்றிறன் வாய்ந்ததாகவும் இருந்திருக்கும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயங்கரவாதத்தை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்காமல் அரசியல் தீர்வொன்றைக் காண்பது சாத்தியமில்லை...

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொள்வது தொடர்பாக உத்தியோகபூர்வமாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் நோர்வே அரசாங்கத்திற்கு அறிவித்த போதனைகளை வெளியிட்ட அறிக்கை.

**2002** பெப்ரவரி 22ம் திகதி இலங்கை ஜனநாயகக் குடியரசு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசாங்கம் விலகிக் கொள்வதாக நேற்று நோர்வே அரசாங்கத்திற்கு இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இவ் ஒப்பந்தத்திலுள்ள 4 ஆவது சரத்தின் 4 வது உபபிரிவின் பிரகாரமே இவ் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஜனவரி 16 ஆம் திகதியுடன் உடன்படிக்கை முடிவுக்கு வருகிறது.

இலங்கை ஜனநாயகக் குடியரசு அரசாங்கத்திற்கும் நோர்வே அரசாங்கத்திற்கும் இடையில் 2002 மார்ச் 18 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை உருவாக்குவதற்கும் முகாமைத்துவம் செய்வதற்குமான பணிக்குழு ஒப்பந்தமும் 2008 ஜனவரி 16ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது.

உரிய காரணங்களை மிகக் கவனமாக ஆராய்ந்த பின்னரே அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதற்கு முடிவெடுத்தது.

முதலாவதாக, ஆரம்பத்திலிருந்தே விடுதலைப் புலிகளுடனான இந்த உடன்படிக்கை பல குறைபாடுகளைக் கொண்டிருந்தது என்பது சுட்டிக் காட்டத்தக்கது. அந்தச் சமயத்தில் இருந்த அரசாங்கத்துடன் உரிய முறையில் கலந்துரையாடாமலேயே இந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது என்பதுடன், இதன் உள்ளடக்கம் தொடர்பாக அமைச்சரவை அமைச்சர்கள் கூட அறிந்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. படையினரின் நியாயபூர்வமான அக்கறைகள்கூட கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தமிழ் ஜனநாயக அரசியல் சக்திகளைப் புறந்தள்ளி முற்று முழுதாக விடுதலைப் புலிகள் மீதே இதன் கவனம் குவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைபாடுகள் குறித்துக் கவனம் செலுத்தாமல், நிரந்தர சமாதானம் ஏற்படப்போகும் என்ற நம்பிக்கையுடன் இது முன்னெடுக்கப்பட்டபோதிலும், 2002 செப்டம்பர் முதல் 2003 மார்ச் வரையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் எந்தவொரு கட்டத்திலும் அரசியல் தீர்வை நோக்கிய முன்நகர்வை இலக்காகக் கொண்ட எந்தவொரு உருப்படியான அரசியல் கலந்துரையாடல்களையும் விடுதலைப் புலிகள் முன்னெடுக்கவில்லை.

நாட்டில் போர்நிறுத்த உடன்படிக்கை அமுலிலிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் திட்டமிட்ட வகையில் தமக்கு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டனர். தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு, குறிப்பாக சம்பூர் போன்ற பகுதிகளுக்கு உயிராபத்து விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள், வெடிமருந்துகள், இராணுவத் தளபாடங்கள் என்பவற்றை சட்டவிரோதமாகக் கடத்திச் சென்றனர். இங்கு குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டிய மற்றுமொரு விடயம், விடுதலைப் புலிகள் குறித்த காலப்பகுதியில் மோசமான கொலைகளில் ஈடுபட்டமையாகும். வெளிவிவகார அமைச்சராகவிருந்த, மூத்த மதிப்புமிக்க தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் 2005 ஓகஸ்ட் 12 இல் படுகொலை செய்யப்பட்டார். அத்துடன் கிரித்தெல, தெஹிவளை, பம்பலப்பிட்டி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் சில முக்கிய புலனாய்வு அதிகாரிகள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

(செல்க 30 ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் தோற்கடிக்க முடியாது...

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையிலிருந்து அரசாங்கம் விலகிக் கொண்டமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட அறிக்கை.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை இரத்துச்செய்வதாக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார்.

ஒப்பந்தத்தின் அனுகூலங்களை உணர்ந்து கொண்டதன் விளைவாக 2006 பெப்ரவரியில் ஜெனிவாவில் நடந்த விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின்போது அரசியல் தீர்வொன்றுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அவர் எழுத்து மூலம் உறுதியளித்திருந்தார். அதேநேரம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை உயர்நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டிருந்தது.

இதனையடுத்து, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கமைவாக அரசியல் ரீதியான தீர்வொன்றைக் காணும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 2006 ஒக்டோபரில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டது. இருந்த போதிலும், மூன்று வருடங்களின் பின்னர் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கம் விலகிக் கொள்வதாக திடீரென நோர்வே அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறது. ஆனால், அரசாங்கத்தின் இம்முடிவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமை கவலைக்குரியது.

பாராளுமன்றத்தில் தம்மைப் பாதுகாத்து அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள உதவிய ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் வேண்டுகோள்களுக்கு இணங்கவே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறது என்பது இன்று தெளிவாகிறது. நாட்டைப் பாதுகாப்பதை புறந்தள்ளி தனது இலாபத்துக்கு முன்னுரிமை வழங்கியிருப்பது இதன்மூலம் வெளிப்பட்டிருக்கிறது.

நாடு இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகவும் அபாயகரமான நிலையில் இருந்தபோதே 2002இல் ஐக்கிய தேசியக் கட்சி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இலங்கைப் படையினரின் பிரதான போர் முகாம்கள் பல விடுதலைப் புலிகளின் வசமாகியிருந்தன. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தது. அதேபோல, புலிகளின் தாக்குதல்களால் கொழும்புத் துறைமுகம் உள்ளிட்ட பொருளாதார கேந்திர நிலையங்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. நாட்டின் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சி கண்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை பெற்றுக்கொள்வதும், நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதுமே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு அடிப்படை நோக்கமாக இருந்தது.

வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை ஏற்படுத்தும் இந்த ஒப்பந்தத்தை நாட்டில் வாழும் சகல சமூகங்களும் வரவேற்றன. இந்த ஒப்பந்தத்தை 67 நாடுகளும் சர்வதேச சமூகமும் வரவேற்றதோடு இதனை அமுல்படுத்த தம்மால் ஆன உதவிகளையும் வழங்க முன்வந்தன.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டது. வாழ்க்கைச் செலவு கட்டுப்படுத்தப்பட்டது. முதலீடுகள் அதிகரிக்கப்பட்டதன் விளைவாக வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தன.

அமெரிக்காவின் 'மிலேனியம் சவால்' நிதியம், மற்றும் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டினூடாக பல்வேறு உதவிகள் நாட்டுக்குக் கிடைத்தன.

பக்கம் 31 ஐப் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடன்படிக்கையை நூறு வீதம் கடைப்பிடிக்க இப்போதும் தயாராகவுள்ளோம்

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசாங்கம் விலகிக் கொண்டமை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கை.

2002 ஆம் ஆண்டு நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையினை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக முறித்துக் கொண்டமையிட்டு நாம் மிகவும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைகின்றோம்.

விடுதலைப் புலிகள் பாரிய இராணுவ வெற்றிகளைக் குவித்து படைவலுச் சமநிலையில் மேலோங்கியிருந்த நிலையில் 2002 ஆம் ஆண்டு அரசாங்கமானது போரில் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளமுடியாதென்பதை உணர்ந்து போர்நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள முன்வந்தது.

அரசினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய படை நடவடிக்கைகள் காரணமாக அழிவுக்குள்ளாகியிருந்த தாயகத்தில் அமைதியை ஏற்படுத்தி இயல்பு வாழ்க்கையினை எமது மக்கள் அனுபவிப்பதற்கு வழிகோலும் நோக்கிலேயே நாம் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம்.

தமிழர் தாயகப் பகுதியில் இலங்கைப் படையினரால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த இராணுவ வலயங்கள் அகற்றப்பட்டும், அங்கு தமிழ் மக்கள் மீளக்குடியமர்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டும், தமிழர் தாயகப் பகுதிகளில் படையினரால் மூடப்பட்டிருந்த மக்கள் போக்குவரத்துப் பிரதான பாதைகளான ஏ9, யாழ்-கண்டி, செங்கலடி-பதுளை வீதிகள் திறக்கப்பட்டும், பாடசாலைகள் வழிபாட்டுத்தலங்கள் மக்கள் குடியிருப்புக்கள் ஆகியவைகளிலிருந்து படையினர் வெளியேறி மற்றும் மீன்பிடித் தடைகளை முழுமையாக நீக்கி இயல்பு வாழ்க்கையை மீண்டும் தமிழர் பிரதேசத்தில் நிலைநாட்டுவதற்கான ஏற்பாடுகள் இந்த ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த ஒப்பந்தம் நூறு வீதம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசையிலும், சர்வதேச பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களின்போதும் மற்றும் தமது பல்வேறு அறிக்கைகளிலும் தொடர்ச்சியாக தெரிவித்து வந்ததுடன், இதனை நடைமுறைப் படுத்துவதற்குத் தம்மால் இயன்றவரை ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அரசோ அல்லது படையினரோ போர்நிறுத்த உடன்படிக்கையினை முழுமையாக செயற்படுத்தி இயல்பு வாழ்க்கையை தமிழர் தாயகத்தில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்த கால வரையறைகளுக்கு அமைய மேற்கொள்ளாது போர்நிறுத்த மீறல் நடவடிக்கைகளைத் தொடர்ந்த வண்ணமிருந்தன. அவ்வாறிருந்தும் விடுதலைப் புலிகள் அரசுடன் 2002 செப்டம்பர் முதல் 2003 மார்ச் வரை ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இதயசுத்தியுடன் கலந்துகொண்டு அரசாங்கமும் அதனது படைகளும் போர்நிறுத்த உடன்படிக்கையில் நடைமுறைப்படுத்த வேண்டிய சரத்துக்களை தொடர்ச்சியாக மீறிவருவது தொடர்பாக அனுசரணையாளர்கள், கண்காணிப்புக் குழுவினர், மற்றும் சர்வதேச சமூகத்தினர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

அரசானது போர்நிறுத்த உடன்படிக்கையின் சரத்துக்களை மீறியது மட்டுமன்றி, பேச்சுவார்த்தை மேசைகளில் இணக்கம் காணப்பட்ட உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கான உபகுழு, பகைமைத் தணிப்பு மற்றும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான உபகுழு போன்ற குழுக்கள் செயற்பட முடியாதவாறு பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட்டு அமைதி முயற்சிகளைப் பலவீனப்படுத்தியது. போர்நிறுத்த உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாமை, போர்நிறுத்த உடன்படிக்கை மற்றும் சமாதான முயற்சிகளின் ஒரு தரப்பாகிய விடுதலைப் புலிகளை சமதரப்பாக நடத்துவதற்குத் தவறியமை ஆகிய காரணங்களால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இருந்தபோதிலும், விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்தோ அல்லது சமாதான முயற்சிகளிலிருந்தோ முற்றிலுமாக வெளியேறாது தொடர்ந்தும் நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதான வழிகளிலேயே ஓர் நிரந்தரமான அமைதித் தீர்வை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த வகையில் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு மீண்டும் புத்துயிரளிப்பதற்காகவும், தமிழர் தாயகப்பகுதியில் இடைக்கால நிர்வாகத்தை கொண்டிருந்து போரினால் பேரழிவுக்குட்பட்டிருந்த தமிழர் தாயகப்பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு இயல்பு வாழ்க்கையினை ஏற்படுத்துவதற்காகவும் அரசாங்கம் ஒரு முன்மொழிவினை முன்வைக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரினர்.

அரசு முன்வைத்த இடைக்கால நிர்வாகத்திற்கான முன்மொழிவுகள் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைக்கூடத் தீர்ப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. இதனால், விடுதலைப் புலிகள் நோர்வே அனுசரணையுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையினை முன்வைத்தனர். அரசானது பேச்சுவார்த்தைக்கான ஓர் அடிப்படையாகக்கூட இதனை ஏற்க மறுத்தது. இதன் காரணமாக பேச்சுவார்த்தைக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு எதுவாக விடுதலைப் புலிகள் எடுத்த முயற்சிகள் எந்தவிதப் பலனையும் தந்துவிடவில்லை.

இதேபோலவே, ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் தமிழர் தாயகப் பகுதிகளில் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கென வகுக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பினையும் அரசானது வழமைபோலவே குப்பைக்கூடைக்குள் வீசியது. போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் எள்ளளவும் கருத்தில் எடுக்காது ஸ்ரீலங்கா அரசானது தமிழர் தாயகப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கைகளைத் தொடராக மேற்கொண்டு மனித அவலத்தினை ஏற்படுத்தி நின்ற வேளையில் மீண்டும் நோர்வே அனுசரணையாளர்களும் சர்வதேச சமூகமும் போர்நிறுத்தத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக் கொண்டதற்கமைய விடுதலைப் புலிகள் 2006ஆம் ஆண்டு இரு தடவைகள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டார்கள்.

இந்த இரண்டு பேச்சுவார்த்தைகளின்போதும் விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையினை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்கள். அத்துடன், விடுதலைப் புலிகள் தாம் போர்நிறுத்த உடன்படிக்கையினை நூறு வீதம் நடைமுறைப் படுத்தத் தயாராகவுள்ள அதேவேளை, போர்நிறுத்த உடன்படிக்கையின் ஒரு சரத்தான ஏ-9 வீதியினைத் திறந்து, யாழ் குடாநாட்டில் போக்குவரத்துப் பாதைகள் அனைத்தும் மூடப்பட்டதால் அல்லலுறும் நான்கு இலட்சத்திற்கும் அதிகமான மக்களின் அவலங்களை நீக்குவதற்கு முன்வரவேண்டும் என மனிதாபிமான ரீதியில் வேண்டுகோள் விடுத்தபோதிலும் அரசாங்கமானது இக்கோரிக்கையினை நிராகரித்தது. இதன் காரணமாக பேச்சுவார்த்தை முயற்சிகள் மீண்டும் தொடர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவராகவும் அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் விளங்கிய சு.ப.தமிழ்ச்செல்வனை அரசாங்கம் படுகொலை செய்தபோதிலும் கூட விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதற்கான முடிவெதனையும் எடுக்கவில்லை.

அரசானது தற்போது போர்நிறுத்த உடன்படிக் கையிலிருந்து எதுவிதமான நியாயங்களுமின்றி ஒருதலைப்பட்சமாக விலகிவிட்டது. இந்நிலையிலும், விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கை யினை வரிக்கு வரி அமுல்படுத்தி அதனை நூறு வீதம் கடைப்பிடிப்பதற்குத் தயாராகவே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் சமாதான முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியினை நோர்வே அனுசரணையாளர்களே தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கையை ஆளுகின்ற அரசுகள் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் நிரந்தர அமைதிக்காக மேற்கொள்ளப் பட்டு வந்த ஒப்பந்தங்கள் அனைத்தையுமே நடைமுறைப்படுத்தாது உதாசீனப்படுத்தியதே வரலாறாகும். தமிழ் மக்கள் நிரந்தரமான அமைதியுடன் தமது தாயக பூமியிலே சுதந்திரமாக, கௌரவமாக வாழ்வதற்கு ஆட்சியாளர்கள் ஒருபோதுமே இடமளிக்கமாட்டார்கள் என்பதை போர்நிறுத்த உடன்படிக்கையினை முறித்தமை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

எனவே, சர்வதேச சமூகம் இதனைப் புரிந்துகொண்டு விடுதலைப் புலிகள் மீது விதித்திருக்கும் தடைகளை உடனடியாக நீக்கி தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை ஏற்று அவர்களின் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்தை இராணுவ ரீதியாக ...

(கலாநிதி பாலித கொஹண)

இரண்டாவதாக, நவம்பர் 2005 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் விடுதலைப் புலிகளுடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயார் என அறிவித்த 11 நாட்களுக்குள் புலிகள் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டதோடு, 2006 ஏப்ரல் தொடக்கம் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்தும் ஒருதலைப்பட்சமாக வெளியேறினர்.

இதில் ஜெனீவா மற்றும் ஒஸ்லோவில் நடைபெற்ற இரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும், ஒஸ்லோவில் இடம்பெறவிருந்த நடைமுறை விடயங்கள் சார்ந்த பேச்சுவார்த்தையும் உள்ளடங்கும். ஒஸ்லோவுக்கு வந்திருந்த விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளத் தயாரில்லை என்று அறிவித்தன் மூலம் சமாதான முயற்சிகளின்பாலான தமது அர்ப்பணிப்பின்மையை வெளிக்காட்டினர்.

விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியான தீர்வொன்றுக்கு வருவதற்கான விடயங்களை ஆராய்வதற்கான சாத்தியங்கள் அனைத்தையும் நிராகரித்ததோடு, இரட்டை முகத்துடன் நடத்து கொண்டு வன்முறைகளையும் அதிகரித்தனர்.

இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரைக் குறிவைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டதோடு, இராணுவத்தின் மூன்றாம் நிலைத் தளபதியான மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவையும், ஓகஸ்ட் 2006 இல் அரசாங்க சமாதான செயலகத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் கேதீஸ்வரன் லோகநாதனையும் படுகொலை செய்தனர். மேலும் பொதுமக்களை இலக்குவைத்து குண்டுத் தாக்குதல்களையும் புலிகள் மேற்கொண்டனர்.

இருப்பினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின், விடுதலைப் புலிகளுடன் சமாதானத் தீர்வொன்றுக்குச் செல்லவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டின் காரணமாக, பாராளுமன்றத்தினூடாக ஓர் அரசியல் தீர்வினைக் காணும் பொருட்டு சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினை தோற்றுவித்தார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் கிழக்கில் நீர் விநியோகத்தினை மேற்கொள்ளும் மாவிலாறு அணைக்கட்டினை மூடியதன் காரணமாக, பொதுமக்களைப் பாதுகாக்கவும், திருகோணமலைத் துறைமுகம் உள்ளிட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளைப் பாதுகாக்கவும் அரசாங்கம் அப்பிரதேசத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றும் பொருட்டு இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மூன்றாவதாக, இங்கு குறிப்பிட்டுக்காட்டப்பட வேண்டியது, போர்நிறுத்த உடன்படிக்கை காலப் பகுதியில், போர்நிறுத்த உடன்படிக்கை எனும் போர்வையில் விடுதலைப் புலிகள் தமது விஸ்தரிப்பினை விருத்திசெய்தமை மற்றும் சிறுவர்களைப் படையில் சேர்த்தமை உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளிலும் அதிகமான வன்முறைகளிலும் ஈடுபட்டு 2007 ஏப்ரல் 30 வரை 1743 தடவைகள் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறியமையாகும். இதனையடுத்தே இலங்கை அரசாங்கம் நோர்வே அரசாங்கத்திற்கும் குறிப்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் தனது அதிருப்தியைத் தெரிவித்தது.

இதற்கு மேலதிகமாக, விடுதலைப் புலிகள் கண்மூடித்தனமாக பொதுமக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர். சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட பலர் அண்மையில் நடைபெற்ற நுகேகொடை, கெப்பிற்றிகொல்லாவ, கொம்பனி வீதி குண்டுவெடிப்புகளில் கொல்லப்பட்டனர். குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் புலிகளால் திட்டமிட்டு சுட்டுக்கொல்லப்பட்டார். கடந்த மாதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்குவைத்து பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தாக்குதலை மேற்கொண்டார். அத்துடன், தெற்கில் அமைதியின்மையைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளிலும் படையினருக்கு சவால்விடும் நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில், போர்நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவருதல் என்பது, பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளைப் பாதிக்காது என்பதையும் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். உண்மையில், முற்று முழுதாக அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலானதாகச் செய்துகொள்ளப்பட்டிருந்த போர்நிறுத்த உடன்படிக்கை காரணமாக ஒதுக்கப்பட்டிருந்த இலங்கையின் அனைத்து அரசியல் பிரிவுகளையும் உள்ளடக்கி அந்த இலக்கை எய்துவதற்கான ஒரு அகன்ற வெளியை இது மெய்யாக ஏற்படுத்தித் தருகிறது.

2007 டிசம்பர் 26இல் மாத்தறையில் மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருப்பதாக அறிவித்தார்.

1985 திம்புப் பேச்சுவார்த்தை, 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம், 1990 இல் ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை, 1994 இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காலத்தில் புலிகளுடனான பேச்சுக்கள் என்பனவற்றையெல்லாம் ஒரு போர்நிறுத்த

உடன்படிக்கையின் பிரசன்னத்துடன் இடம்பெற்றுவருகின்றன என்பதையும் இந்த இடத்தில் மீள நினைத்துப்பார்க்கவேண்டும்.

இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை இராணுவ ரீதியில் தோற்கடிக்காமல் எந்தவொரு அரசியல் ரீதியான தீர்வையும் நடைமுறைப்படுத்த முடியாது என நம்புகிறது. அந்தவகையில் அரசாங்கம் 1987 இல் செய்துகொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்திலுள்ளவாறு 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த விரும்புகிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக நோர்வே அரசாங்கத்துக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், இணைத்தலைமை நாடுகளுக்கும் இலங்கை அரசாங்கம் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது. சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன், சகல சிறுபான்மை குழுக்களையும் உள்ளடக்கிய வகையிலான அரசியல் ரீதியான தீர்வு ஒன்றினை எட்டுவதன் மூலம் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக உழைப்பதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கிறது என்பதையும் இங்கு குறிப்பிட்டுக் காட்டுகிறோம். ■

## பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் ...

...பக்கம் 27இன் தொடர்ச்சி

பல ஆண்டுகளாக அமுலில் இருந்த ஆயுத உதவித் தடைகளை நீக்கி அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா போன்ற நாடுகள் எமக்கு இராணுவப் பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் ஆயுத உதவிகளையும் வழங்க இணக்கம் தெரிவித்தன. பயங்கரவாத நடவடிக்கைகளை முடக்கவும் சர்வதேச புலனாய்வுத்தகவல்கள் எமக்குக் கிடைத்தன.

நாடு இவ்வாறு பலம் பெறும் அதேநேரம், நாம் அரசியல் தீர்வொன்றுக்கான பேச்சுக்களையும் முன்னெடுத்துச் சென்றோம். ஒஸ்லோப் பேச்சுக்களின்போது தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக மாற்று வழிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கு புலிகளை இணங்கச்செய்யவும் எமக்கு முடிந்திருந்தது.

இந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தினால் நாட்டை ஐக்கியப்படுத்தக்கூடிய சூழலொன்றும் ஏற்பட்டது. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு தங்கு தடையின்றி வடக்கிற்கும் தெற்கிற்கும் சென்று வர முடிந்தது. அனைவர் மத்தியிலும் இலங்கையர் என்ற ஐக்கியம் ஏற்பட்டது.

இதேநேரம், 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் புலிகள் பேச்சு மேசையிலிருந்து விலக முடிவு செய்தாலும் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொள்ள அவர்கள் இணங்கினர்.

சர்வதேச சமூகங்கள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்காகவே முன்னின்றன. இதனாலேயே, இந்த உடன்படிக்கையால் தாங்கள் சர்வதேச பாதுகாப்பு வலைக்குள் சிக்கவைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் பல சந்தர்ப்பங்களிலும் தெரிவித்து வந்திருக்கிறார்கள். அத்துடன், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகினால், தங்களுக்குச் சமாதானமான தீர்வொன்று அவசியமில்லையென்று தெரியவந்து சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு உள்ளாக வேண்டி வரும் என்பதை உணர்ந்தே விடுதலைப் புலிகள் ஏனைய அரசாங்கங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களிலிருந்து விலகியது போல இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகமுற்படவில்லை.

ஆனால், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகிய பொறுப்பை அரசாங்கம் தற்போது தனது தோளில் சுமந்து கொண்டிருக்கிறது. இதனால், இலங்கைக்குக் கிடைத்திருப்பது சர்வதேச அதிருப்திகள் மட்டுமே. அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நட்புறவு நாடுகளும், ஐக்கிய நாடுகள் அமைப்பும் அரசின் இந்தத் தீர்மானம் குறித்து கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளன. பல சர்வதேச நாடுகள் இதனைக் கண்டித்திருக்கின்றன. பல்வேறு உதவி வழங்கும் நாடுகளின் நிலைப்பாடும் இதுவாகவே இருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் பல தடவைகளும் அதிகாரப்பகிர்வு தீர்வொன்றை முன்வைப்பதாகக் கூறிவிட்டு இப்படியானதொரு தீர்மானத்தை எடுத்திருப்பதே அந்த அதிருப்திகளை மென்மேலும் அதிகரித்திருக்கிறது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தின் மூலம் வெளிநாடுகளுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் இலங்கை மீதிருந்த இறுதி நம்பிக்கையும் சிதறடிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிபலனாக இலங்கைக்கான சர்வதேச உதவிகள் கிடைக்காமல் போகப்போகின்றன. மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகியதன் மூலம் சிவில் யுத்தம் நடக்கும் ஆபத்தான நாடாக சர்வதேசம் இலங்கையை மீண்டும் பட்டியலிடும்.


அதுமட்டுமல்லாது எமக்குக் கிடைக்கும் உதவிகள் குறைவடைந்து முதலீட்டாளர்கள் நாட்டுக்குள் வருவது தடைப்படும். வந்த முதலீட்டாளர்களும் நாட்டை விட்டுச் செல்வார்கள். ஆயுத, போர் உதவிகள் நின்று போகும். இதன் மொத்தப் பிரதிபலனாக சர்வதேச ரீதியாக இலங்கை பலவீனமடைந்து அந்த வீழ்ச்சியின் மூலம் புலிகள் சர்வதேச ரீதியில் பாரியளவில் பலம்பெறுவதே நடக்கப்போகிறது.

பயங்கரவாதத்தினால் ஒருபோதும் பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாது. நாட்டின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக மாத்திரமே தீர்வு காண முடியும் என்பதை எல்லா சமூகங்களுமே இன்று ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






போர்நிறுத்த உடன்படிக்கை முடிவுக்கு வந்தமை குறித்த

# சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயங்கள்...

## பொதுமக்களின் பாதுகாப்புக்குச் சவால்...



எரிக் சொல்ஹெய்ம்
நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான அமைச்சர்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் 2002ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் குறித்து நோர்வே தனது கவலைகளைத் தெரிவிக்கிறது.


ஒரு தரப்பு மாத்திரம் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதானால், அது தொடர்பாக நோர்வே அரசாங்கத்திற்கு 14 நாட்களுக்கு முன்னர் அறிவிக்க வேண்டும்.

இரு தரப்பினரும் தற்போது வன்முறைச் சம்பவங்களை அதிகரித்துவரும் நிலையில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை நிலைமையை மேலும் உக்கிரமடையவே செய்யும்.

போர்நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் காரணமாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரை இலங்கையிலிருந்து மீள அழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பலத்த சவாலை எதிர்நோக்க நேரிடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். ■

## பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புவதைக் கடினமாக்கியுள்ள முடிவு...



நோர்டிக் நாடுகள்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை அமைப்பதற்குப் பங்களிப்புச் செலுத்தியிருந்த நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய 5 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கை.

16 ஜனவரி 2008 உடன் போர்நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவருவதான தனது தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக நோர்வேக்கு அறிவித்திருக்கிறது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆணை பெற்றுச் செயற்பட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தனது நடவடிக்கைகளை இதே திகதியிலிருந்து நிறுத்திக்கொள்ள வேண்டுமென இலங்கை எதிர்பார்க்கின்றது.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் போர்ச் சூழ்நிலையில் அதிகளவிலான மோதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதிகளவிலான பொதுமக்கள் இடம்பெயர்ந்தும் மனித உரிமை மீறல்கள் திரும்பத் திரும்ப இடம்பெற்றுக்கொண்டும் இருக்கும் நிலையில் இந்த முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது. இலங்கையில் மோசமடைந்துவரும் நிலைமை குறித்து நோர்டிக் நாடுகள் தீவிர கவலையடைந்துள்ளன. இந்த நிலைமையானது ஒரு தரப்பு உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவரும் கட்டத்தை அடைந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கை 2002 பெப்ரவரி முதல் 6 ஆண்டுகளுக்கு நீடித்ததுடன், சமாதான நடவடிக்கைகள் மற்றும் இலங்கையின் நீண்டகால மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உதவியளிக்கும் சர்வதேச முயற்சிகளுக்கும் அடிப்படை அம்சமாக இது விளங்கியது. சம்பந்தப்பட்ட தரப்பினரின் கோரிக்கையின் பேரிலேயே போர்நிறுத்தத்தை கண்காணிக்க நோர்டிக் நாடுகள் குழுவொன்றை அமைத்தன.

போர்நிறுத்த உடன்படிக்கை பல சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. முதல் மூன்று வருடங்களிலும் மோதலுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் பூஜ்யமாகவே இருந்தன. 10 ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்கள் காப்பாற்றப்பட்டன என்பதே இதன் அர்த்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர் யாவருமே சுதந்திரமாக இடத்துக்கிடம் செல்வதற்கு இந்த உடன்படிக்கை வழி வகுத்தது. அத்துடன், மனித உரிமைகள் விவகாரங்களில் முன்னேற்றம், பொதுமக்களின் பாதுகாப்பு என்பனவற்றையும் இது ஏற்படுத்திக் கொடுத்தது. மேலும், பொருளாதார வளர்ச்சிக்கும் வழி வகுத்துக் கொடுத்தது. ஆயினும், கடந்த இரு வருடங்களில் போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் கணிசமான அளவுக்கு மோசமாக அதிகரித்தன. வன்முறைகளும் மனித உரிமை மீறல்களும் மோசமாக அதிகரித்துள்ள இப்போது நோர்டிக் நாடுகள் கவலை கொண்டுள்ளன.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு விடை பெற்றுள்ளமையானது பொதுமக்களின் பாதுகாப்புக்கான மிக முக்கியமான பொறிமுறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்றே பொருள்படும்.

அரசியல் தீர்வு மட்டுமே இலங்கையிலுள்ள இனக்குழுக்களின் முரண்பாடுகளை நிவர்த்தி செய்யுமெனவும், நீடித்த சமாதானத்தை ஏற்படுத்தும் எனவும் நோர்டிக் நாடுகள் நம்புகின்றன. ஆனால், போர்நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவந்தமை பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புவதை கடினமாக்கியுள்ளது. ■

## ஐ.நா. பாதுகாப்புப் படையினரை அனுப்பவேண்டி வரும்...



**பான் கி மூன்**
செயலாளர் நாயகம்,
ஐக்கிய நாடுகள் சபை

வடக்கு கிழக்கில் மோதல்களும் தலைநகர் கொழும்பு உட்பட நாடளாவிய ரீதியில் வன்முறைகளும் அதிகரித்துவரும் நிலையில் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்தும் அரசாங்கம் விலகிக்கொள்வதையிட்டு ஐக்கிய நாடுகள் சபை ஆழ்ந்த கவலையடைகிறது.

கடந்த பல வருடங்களாக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் தொடரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அரசியல் தீர்வொன்றே அவசியத் தேவை என்பதை வலியுறுத்துகிறோம்.

அதேநேரம், சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள்விடுகின்றோம். சகல தரப்புக்களும் மனித உரிமை மீறல்களையும் இராணுவ மோதல்களையும் நிறுத்தத் தவறுமிடத்து ஐ.நா. பாதுகாப்புப் படையினரை இலங்கைக்கு அனுப்பவேண்டிவரும் என்பதையும் ஞாபகமூட்டுகின்றோம் ■

## ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தேவையை அதிகரித்துள்ளது...



**ரொபேட் ஓ பிளேக்**
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்

இலங்கை அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருப்பதைத் தொடர்ந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் உடனடியாக வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மனித உரிமை மீறல்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அவசியம் இன்று உணரப்படுகிறது.

இலங்கை தனது அறுபதாவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ள நிலையில் இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்காக அமெரிக்கா சகல வழிகளிலுமான உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும் உதவிகளும் கிடைப்பதைத் தடுப்பதற்கான இலங்கை அரசின் முயற்சிகளுக்கு அமெரிக்கா உறுதியான உதவிகளை வழங்கியுள்ளது. எனினும், இராணுவ நடவடிக்கைகள் மூலம் கிளர்ச்சிகளைத் தோற்கடிக்க முடியாது என்பதை வரலாறு புலப்படுத்துகின்றது. இதன் காரணமாகவே, சமாந்தரமான அரசியல் தந்திரோபாயம் இல்லாமல் வெறுமனே இராணுவ தந்திரோபாயத்தை மாத்திரம் முன்னெடுப்பது மனித உரிமை மீறல்களை அதிகரிக்கும் என நாம் கருதுகின்றோம்.

மனித உரிமைகளைப் பேணுவதில் காணப்படும் முன்னேற்றமின்மையே 2008 இல் அமெரிக்க மிலேனியம் உதவித் திட்டத்திற்கு இலங்கை சேர்த்துக் கொள்ளப்படாமைக்கு பிரதான காரணம். மேலும், எமது அமெரிக்க ஜனாதிபதி இராணுவ உதவிகளை இடைநிறுத்தும் ஆவணத்தில் கைச்சாத்திட்டார்.

இந்த நடவடிக்கைகள் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்த எமது கவலையை வெளிப்படுத்துகின்றன. இலங்கையின் மனித உரிமைக் கண்காணிப்புக் குழு இங்கு இடம்பெறும் உரிமை மீறல்களுக்கு உரிய தீர்வு காணும் விடயத்தில் திறனற்றதாகவே காணப்படுகிறது. இதன்காரணமாகவே, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கண்காணிப்பகத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு வெளிப்படையாக நாம் ஆதரவு வழங்குகிறோம். இலங்கையில் 2008 இல் மனித உரிமை மீறல்கள் குறைவடையும் என எதிர்பார்க்கின்றோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தீர்வு ஒருபோதும் சாத்தியமில்லை...



மேஜர் ஜெனரல்
லார்ஸ் ஜே.சொல்பேர்க்
தலைவர்,
போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு

இன்றைய தினம் (ஜனவரி 16 2008), ஏறக்குறைய கடந்த ஆறு வருடங்களாக அமுலிலிருந்த போர்நிறுத்த உடன்படிக்கையின் இறுதித் தினமாகும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் 2002 பெப்ருவரியில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக, உடன்படிக்கையிலுள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கும் பொருட்டே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உருவாக்கப்பட்டது.

போர்நிறுத்த உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்டமையடுத்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளும் முடிவுக்கு வருகின்றன. அதன்படி, நோர்டிக் கண்காணிப்பாளர்கள் இன்று நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். சிலர் மாத்திரம் கண்காணிப்புக்குழுவின் இறுதிநேர நிர்வாக நடவடிக்கைகளின் நிமித்தம் நாளை காலை வெளியேறுகின்றனர்.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட முதல் ஆண்டு காலப்பகுதியில், இரு தரப்புகளும் புரிந்துணர்வுடன் அதற்கு ஒத்துழைத்தன. வன்முறைகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றன. பின்னர் சில சர்ச்சைக்குரிய பிரச்சினைகளால், இரு தரப்புகளுக்குமிடையிலும் ஏற்பட்ட அவநம்பிக்கைகளின் காரணமாக சமாதான செயற்பாடுகள் பின்னடைவு கண்டன. அதிகரித்த முரண்பாடுகளின் காரணமாக இராணுவ மோதல்கள் வெடித்தன. வன்முறைகளால் அதிக பொதுமக்கள் பாதிக்கப்பட்டதோடு பாதுகாப்பின்மைக்கும் இடப்பெயர்வுக்கும் முகங்கொடுத்தனர்.

இன்றுள்ள நிலைமைகளில் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து இரு தரப்புகளும் ஆரவிலகி நிற்பது தெளிவாகத் தெரிகிறது.

சமாதான செயற்பாடுகளுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் நோக்கிலேயே இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உருவாக்கப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது அதன் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுக்குள் நின்று, பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தனது பணிகளை மேற்கொண்டது. முரண்பாடுகள் அதிகரித்தமையைத் தொடர்ந்து அவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு எமது வேலைகளைச் செய்வது என்பது பற்றி மீளாய்வு செய்யவேண்டி ஏற்பட்டது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடந்த ஆறு வருட காலப்பகுதியில் வரவேற்பையும் எதிர்ப்பையும் அன்பையும் வெறுப்பையும் சந்தித்திருக்கிறது.

எமக்கு ஆதரவாளர்கள் "கண்காணிப்புக் குழு இல்லாவிடின் நாம் பயங்கரத்தை எதிர்கொள்ள நேரிடும்" என்றும், "கண்காணிப்புக் குழு இல்லாவிடின் அதிகமான உயிர்களை இழக்கவேண்டி ஏற்பட்டிருக்கும்" என்றும், "போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு நாட்டை விட்டு வெளியேறினால் இங்கு என்ன நடக்குமோ என நாம் அச்சப்படுகிறோம்" என்றும் கூறுகின்றனர். அதேநேரம், இன்னுமொரு சாரார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரமற்றது, தகுதியற்றது என்று முழுமையாகவே வெறுக்கின்றனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இலங்கையின் வடக்கு, கிழக்கிலும் தலைநகரிலும் கடந்த ஆறு வருடங்களில் நிலைகொண்டு பணிபுரிந்து வந்திருக்கிறது. இதனூடாக இந்த நாட்டின் இனமுரண்பாடு குறித்து நிறைய விடயங்களை அறிந்திருக்கிறது.

இந்த அறிவின் அடிப்படையில், இலங்கையின் இன முரண்பாட்டிற்கு இராணுவ வழிகளில் ஒருபோதும் தீர்வு காணமுடியாது என கண்காணிப்புக் குழு உறுதியாக நம்புகிறது.

தமது செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட வேண்டி ஏற்பட்டது என்பதைத் தொடர்ந்து தமது பணிகள் முழுமையடைந்ததாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கருதினார். மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையிலுள்ள தரப்பினர் அல்லது ஏனைய தரப்பினர் சுமுகமான தீர்வொன்றைக் காணவேண்டும். அது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் குறிக்கோள் அல்ல. சம்பந்தப்பட்ட தரப்பினரிடமும், இலங்கை மக்களிடமும் இந்தக் குறிக்கோள் விடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமக்கிடையிலான முரண்பாடுகளுக்கு சமாதான வழிமுறையில் தீர்வினைக் காணும் பொருட்டு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினை உதவிக்கு அழைத்தமைக்காக கண்காணிப்புக்குழு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த நேரத்தில், அழகானதும் வளங்கள் நிறைந்ததுமான நாட்டிலிருந்து நாம் வெளியேறிச் செல்வது எமக்குக் கவலையளிக்கிறது. இலங்கைத் தீவெங்கும் வாழும் மக்கள் எவ்வாறு அன்பு செலுத்துகின்றனர் என நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்களிடமிருந்து அறிந்துகொண்டோம். அவர்களை விட்டுச்செல்வது கடினமானது. தற்பொழுதுள்ள சூழ்நிலையை

மாற்றுவதற்குப் பங்களிப்புச் செலுத்தும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளோம்.

இலங்கையில் உள்ளவர்களும், இலங்கைக்கு வெளியே உள்ளவர்களும் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கண்டுபிடித்து அதனை முன்வைப்பதற்கான காலம் ஏற்பட்டுள்ளது. தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் உடையவர்கள் சரியான முறையில் செயற்படுவார்கள் என நம்புகின்றோம்.

இலங்கையில் தற்போழுது காணப்படும் மோசமான சூழ்நிலையை எதிர்கால சந்ததியினர் அறிந்துகொண்டு அதனை மேலும் பாதிப்படையச் செய்யாமல் மனிதர்களுக்கு மேலும் அச்சத்தையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தாமல் செயற்பட வேண்டும். ■

## சமாதானத்தை ஏற்படுத்த இராணுவத்தீர்வு சாத்தியமானதல்ல...



பிரணாப் முகர்ஜி
இந்திய வெளிவிவகார அமைச்சர்

இந்தியாவைப் பொறுத்தவரை வன்முறைகளையும் பொதுமக்களின் துயரங்களையும் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் வரவேற்பிற்குரியதாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் மோதலும் வன்முறையும் மீறலும் அண்மைக்காலமாக அதிகரித்திருப்பதை காணமுடிகிறது.

அதேவேளை, ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்துச் சமூகங்களுக்கும் ஏற்புடைய அரசியல், அரசியலமைப்பு விவகாரங்களை உள்ளடக்கிய இணக்கப்பாட்டையே இந்தியா விரும்புகிறது. இலங்கையின் இனநெருக்கடிக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண முடியாது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இராணுவத்தீர்வு சாத்தியமானதல்ல என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

இலங்கை விவகாரங்கள் தொடர்பாக நாங்கள் அதிக விலை செலுத்தியுள்ளோம். இந்த நாட்டின் முக்கியமான தலைவர் பயங்கரவாதத்திற்குப் பலியாகியுள்ளார். இதன் பின்னணியில் யார் இருந்தனர் என்பது பற்றி தெளிவாக நிரூபிக்கப் பட்டுள்ளது. சகல விதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் இந்தியா கண்டிக்கின்றது. பயங்கரவாதம் தொடர்பாக சகிப்புத்தன்மை காட்டப்படமாட்டாது. அதேவேளை, இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகள் இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டு வரையறைக்குள் பூர்த்திசெய்யப்படவேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. ■

## அரசாங்கத்தின் முழுவு வன்செயல்களை அதிகரிக்கச் செய்யும்...




மசாகிகோ கொமுரா
ஜப்பான் வெளிவிவகார அமைச்சர்

போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து இலங்கை அரசாங்கம் வெளியேறியமை குறித்து ஜப்பான் பெரிதும் கவலையடைகிறது. அரசாங்கத்தின் இந்த முடிவு வன்செயல்களை அதிகரிக்கவே வழிவகுக்கும்.

இலங்கை அரசின் முடிவு மோதல்களை உக்கிரமடையச் செய்வதுடன் அதிக வன்முறைகளுக்கும் வழிவகுக்கும். இதனால் பொதுமக்கள் பேரழிவுகளை எதிர்நோக்குவதுடன் அமைதி முயற்சிகளும் பாதிக்கப்படும். இனப்பிரச்சினையை இராணுவ வழிகளில் தீர்க்க முடியாது. இனப்பிரச்சினைக்கு வன்முறைகளூடாக ஒரு தீர்வை அடைவதை விடுத்து எல்லாத் தரப்பினரும் பேச்சுக்களின் மூலமான அரசியல் தீர்வைக் காண முன்வரவேண்டுமென ஜப்பான் கேட்டுக்கொள்கிறது.

சமாதான முயற்சிகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்படும் என நாம் வலுவாக நம்புகிறோம். அதிகாரப்பகிர்வு தீர்வுத் திட்டம் விரைவாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமாதான முயற்சிகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்குவதுடன், இணைத்தலைமை நாடுகளுக்கும் எமது ஆதரவை வழங்குவோம். ■

## விளைவுகளை அரசாங்கம் விரைவில் எதிர்கொள்ளும்...



ராமா யாடே
வெளிவிவகார பிரதியமைச்சர்
பிரான்ஸ்

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து இலங்கை அரசாங்கம் விலகியமை கவலைக்குரியது. போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து இலங்கை அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக வெளியேறியதன் விளைவுகளை அரசாங்கம் விரைவில் எதிர்நோக்க நேரிடும்.


பேச்சு மூலம் அரசியல் தீர்வைக் காண்பதே உகந்த வழி. ஆறு வருடங்களை நடைமுறையிலிருந்த போர்நிறுத்தத்தை முறித்துக் கொண்டமை நாட்டுக்கு பாதகமான விளைவுகளையே கொண்டுவந்து சேர்க்கும். ■

போர்நிறுத்த உடன்படிக்கையின் முறிவு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோதல்கள் அதிகரிக்கவே வழிசெய்யும்...



ஐரோப்பிய ஒன்றியம்


நாட்டில் வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் இலங்கை அரசாங்கமானது போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருப்பதானது மேலும் மோதல்கள் அதிகரிக்கவே வழிவகுக்கும். இது குறித்து நாம் மிகவும் கவலையடைகிறோம்.

அரசாங்கம் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையாக உண்மையான அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதுவே முரண்பாடுகளைக் களைவதற்கான சிறந்த வழிமுறையாகும். இரு தரப்புகளும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவதோடு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

இராணுவ மோதல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகளினால் நாடு ஏற்கனவே மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில் அரசாங்கம் 2002 இல் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளமை கவலைக்குரியதாகும்.

போர்நிறுத்த உடன்படிக்கை இல்லாத நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான எதிர்பார்ப்புகளும் இல்லாமலாகின்றன. இந்நிலையில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் முடிவுக்கு வருவதையிட்டும் ஐரோப்பிய ஒன்றியம் கவலை அடைகிறது. ■

## இருதரப்பும் இதயசுத்தியுடன் செயற்படவில்லை...



டேவிட் மில்லிபாண்ட்? [illegible]
வெளிவிவகார பிரதியமைச்சர்
பிரித்தானியா

சமாதான நடவடிக்கையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இதயசுத்தியுடனான பற்றுறுதியை வெளிப்படுத்தவில்லை. சமாதானத்தில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் உண்மையான அர்ப்பணிப்பைக் காட்டாததையிட்டு குறித்து நான் கவலையடைகிறேன்.

அதேசமயம், நோர்வே அனுசரணையாளர்களும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளிலும் மேற்கொண்ட அயராத முயற்சிகளுக்காக அவர்களைப் பாராட்டுகின்றேன்.

மோதலுக்கு இராணுவ ரீதியில் தீர்வு இல்லை. தமிழ் மக்களின் துயரங்களுக்கு தீர்வு காணும் தமது கடப்பாட்டிற்கு தற்போது அரசாங்கம் புத்துயிரளிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

சர்வகட்சிப் பிரதிநிதிகளின் சிபாரிசுகளை விரைவில் முன்வைப்பதும் அவசியமானதாகும். இந்த சர்வகட்சிக் குழு முன்வைக்கும் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு நியாயமான அரசியல் தீர்வொன்றை கட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்கத்துடன் ஜனாதிபதி வழிநடத்திச் செல்வதும் முக்கியமானதாகும்.

அத்துடன், தமது குறுகிய நலன்களுக்கு அப்பால் இலங்கையின் அரசியல் கட்சிகள் சமாதானத்துக்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். ■

## நியாயபூர்வமான அரசியல்தீர்வு காணும் முயற்சியை நெருக்கடிக்குள்ளாக்கும்



மக்ஸிம் பேர்னியர்
வெளிவிவகார அமைச்சர், கனடா

2002 போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்தும் விலகிக்கொள்ளும் தீர்மானத்தை இலங்கையரசு எடுத்திருப்பதையிட்டு கனடா மிகவும் கவலையடைந்துள்ளது. முக்கியமான இந்த உடன்படிக்கையை வாபஸ் பெற்றமை நியாயபூர்வமான அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சியை அதிகளவு நெருக்கடிக்குள்ளாக்கும். அத்துடன், இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்படும் வன்முறைகளை மேலும் அதிகரிக்கச் செய்துவிடும்.

பொதுமக்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்பதால் ஏற்படும் பாதிப்புகளையிட்டு நாம் அதிகளவு கவலையடைந்திருக்கிறோம். மனிதாபிமானப் பணியாளர்கள், மனித உரிமைப் பணியாளர்கள் மீதான வன்முறைகளும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் வன்செயல்கள் தீர்வைத் தரப்போவதில்லை. அவை இலங்கை மக்களை மென்மேலும் துன்பத்திற்குள்ளேயே தள்ளிவிடும்.

சகல தரப்பினரும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இத்தகைய செயற்பாடுகளே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் புரிந்துகொள்ளவேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குற்றவியல் சட்டங்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படும்...




லூயிஸ் ஆர்பர்
உயர்ஸ்தானிகர், ஐ.நா.
மனித உரிமைகள் ஆணைக்குழு

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கை முடிவுக்கு வந்திருக்கின்ற நிலையில் இரு தரப்பினரும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்ள வேண்டும்.

சகல தரப்பினரும் வேறுபாடுகளை மறந்து, சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக பொதுமக்களைப் பாதுகாக்க முன்வருமாறும், அநியாயமான இழப்புக்கள், கடத்தல்கள், பலவந்த இடப்பெயர்வுகள், காணாமல்போதல்கள், துன்புறுத்தல்கள், மானபங்கப்படுத்தல் உள்ளிட்ட மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை தடுத்துநிறுத்த முன்வருமாறும் அழைப்பு விடுக்கிறேன். அதேநேரம், சிறுவர்களைப் படையில் சேர்ப்பதையும் அவர்களைப் போரில் ஈடுபடுத்துவதையும் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விதிமுறைகளை மீறும் எந்தவொரு தரப்பும், உரிய பொறுப்புக்களில் இருப்பவர்கள் உட்பட சர்வதேச குற்றவியல் சட்டங்களுக்கு அமைவாக அவற்றிற்குப் பொறுப்பேற்கவேண்டி வரும் என்பதையும் இங்கு ஞாபகமூட்டுகிறேன். ■

## ஐ.நா. கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் அவசியம்...



எலெய்ன் பியர்சன்
பிரதிப் பணிப்பாளர்,
மனித உரிமை கண்காணிப்பகம்
(ஆசியப் பிராந்தியம்)

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளமை ஐ.நா. கண்காணிப்பாளர்களின் தேவையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

போர்நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளதையடுத்து கடந்த 6 ஆண்டுகளாக இலங்கையின் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தயாராகிக்கொண்டிருக்கும் நிலையில் ஐ.நா.கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் இலங்கைக்கு அவசியமானது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது நடவடிக்கைகளை சரிவரச் செய்வதற்கு முடியாமல் பாதிக்கப்பட்டிருந்தபோதும் பொதுமக்கள் மீதான துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கு அவர்கள் உதவினர். இப்போது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஐ.நா.கண்காணிப்பாளரின் தேவை அதிகளவில் உள்ளது.

கண்காணிப்புக் குழுவினர் வெளியேறியிருக்கும் நிலையில் மோதல்களில் சிக்கும் பொதுமக்களின் பாதுகாப்பு என்பது மிகவும் கடினமான விடயமாகவே இருக்கும்.

தொடர்ந்து இடம்பெற்றுவரும் மோதல்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்குரிய யதார்த்தபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப் படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் வலியுறுத்துகிறோம். ■

## தமிழ்-முஸ்லிம் சிறுபான்மையினருக்கு ஆபத்து...

minority rights group international

மார்க் லற்றிமர்
பணிப்பாளர்
சிறுபான்மையினர் உரிமைகளுக்கான குழு

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொள்ளும் இலங்கையின் தீர்மானமானது மனித உரிமைகள் துஷ்பிரயோகம் குறித்த சர்வதேசத்தின் கண்காணிப்பை தடுத்து நிறுத்திவிடும் பிரதிகூலமான விளைவை ஏற்படுத்தும் என நாம் கருதுகிறோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகும் அரசின் தீர்மானமானது வன்முறைகள் அதிகரிக்க வழிவகுக்கும். அத்துடன், சிறுபான்மையினரான தமிழர், முஸ்லிம்களுக்கு எதிரான மனித உரிமை துஷ்பிரயோகங்கள் அதிகளவில் இடம்பெறுவதற்கும் வழிசமைத்துக் கொடுக்கும்.

மோதல் இடம்பெறும் பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கண்காணிப்பை மேற்கொள்ளவும் அறிக்கையிடவும் முடியாதவாறு வெற்றிடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, சர்வதேச மனித உரிமை கண்காணிப்பாளர்களின் தேவை இப்போது மிகவும் அவசியமாகவுள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட காலபகுதியில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் பாதுகாப்புச் செயலாளராகக் கடமை யாற்றிய ஒஸ்டின் பெர்னாண்டோவுடன் 'த பொட்டொம் லைன்' பத்திரிகையின் மரியானா டேவிட் மேற்கொண்ட நேர்காணலின் தமிழ் வடிவம்.

தமிழில்: எம்.பி.எம்.பைறூஸ்

# போர்நிறுத்த உடன்படிக்கை ஒரு பைபிள் அல்ல!

- ஒஸ்டின் பெர்னாண்டோ

**போர்நிறுத்த உடன்படிக்கை எவ்வாறு அமுல்படுத்தப்பட்டது?**

போர்நிறுத்த உடன்படிக்கை நான்கு பிரிவுகளைக் கொண்டது. முதலாவது - இராணுவ நடவடிக்கைகள் தொடர்பானது. இரண்டாவது - இயல்பு வாழ்க்கை தொடர்பானது. மூன்றாவது - இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சம்பந்தப்பட்டது. நான்காவது -போர்நிறுத்த உடன்படிக்கை இரத்துச் செய்தல் பற்றியது- போர்நிறுத்த உடன்படிக் கையை எவ்வாறு முறித்துக்கொள்ளலாம் என்பது பற்றிய இதுதான் அண்மையில் நடந்தேறியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட முதலாவது அத்தியாயம் தொடர்பிலேயே நான் அதிக அக்கறை கொண்டிருந்தேன். இராணுவ நடவடிக்கைகள் பற்றி பேசுவதானால் இதில் பல உப அத்தியாயங்கள் உள்ளன. என்ன நடைபெறுகிறது என்பதைப் பொறுத்து இந்த உப பிரிவுகள் அமுல்படுத்தப்படவேண்டும்.

நாம் இதனை எவ்வாறு செய்தோம் என்பது பற்றி பொருளியல் ஆய்வாளர் சமன் கெலேகம எவ்வாறு புரிந்துகொண்டார் என்பதை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள். நாம் முதலில் பொருளாதாரத் தடைகளை அகற்றினோம். பின்னர், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, அவர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான வெளியையும், கௌரவத்தையும் வழங்கினோம். அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தவிர, விடுதலைப் புலிகள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தோம்.

நடைபெறும் விடயங்களில் திருப்தியடைந்து விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும் என்று நாம் எதிர்பார்த்தோம். இதன்மூலம் விடுதலைப் புலிகள் சிறிதளவு பலத்தையும், கௌரவத்தையும் பெற்று பேசுவதற்கான வெளியை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். இதைத்தான் நாம் அவர்களிடம் எதிர்பார்த்தோம்.

மூன்றாம் தரப்பு கண்காணிப்பை நாம் நம்பியதால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தெரிவுசெய்யப்பட்ட கண்காணிப்புக்குழுவை நியமித்தோம். இவ்வாறு செய்வதன் மூலம் விடுதலைப் புலிகளை சரியான தடத்துக்குக் கொண்டுவர முடியும் என்று நாம் நம்பினோம். தமது பகுதிகளை அபிவிருத்தி செய்து, வறுமையையும் ஏனைய பிரச்சினைகளையும் நீக்கி இயல்பு நிலையை எட்ட அவர்கள் முயற்சிப்பார்கள் என்று நாம் நம்பினோம். போர்நிறுத்த உடன்படிக்கையின் இரண்டாவது அத்தியாயம் இயல்புநிலை பற்றியே பேசுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"வார்த்தைகளுக்குப் பதிலாகத் துப்பாக்கிக் குண்டுகள் பயன்படுத்தப்படும்போது போர்நிறுத்த உடன்படிக்கை விலக்கிக்கொள்ளப்பட்டமையை நாம் எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? இப்போது துப்பாக்கிக்குண்டுகளால்தான் பேசப்படுகின்றது. நாம் வார்த்தைகளால் செய்தவை தற்போது துப்பாக்கிக் குண்டுகளால் தொடர்புறுத்தப்படுகிறது"**

நிதி வழங்கும் நாடுகள் எமக்கு உதவவேண்டும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஒஸ்லோ பிரகடனம், வொஷிங்டன் பிரகடனம் மூலம் நாட்டின் சமாதானச் சூழலுக்கு உதவுவதற்கான உறுதிமொழிகள் கிடைத்தன. டோக்கியோ பிரகடனம் மூலம் சர்வதேச நாடுகள் எமக்கு 4.5 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கான உறுதிமொழியை அளித்தன.

பொதுமக்களுடைய நல்வாழ்வுக்கு அவசியமான ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் குறைந்த விடயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தி, அதன்மூலம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வழிவகைகளை ஏற்படுத்தி வடக்குக் கிழக்கில் ஒரு அரசியல் முகாமைத்துவத்தை ஏற்படுத்த எண்ணினோம். இதன்மூலம் ஆயுதக் கலாசாரத்தின் இடத்தில் ஜனநாயகக் கலாசாரத்தைக் ஏற்படுத்தலாம் என்று நம்பினோம்.

எமது இறுதி நோக்கம் சமாதானத்தைக் கொண்டுவருவதுதான். இது ஒரு நீண்ட காலம் பிடிக்கும் நடவடிக்கை. இரண்டு வருடங்களுக்குள் ரணில் விக்கிரமசிங்கா சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்தது அபத்தமானது. இந்தப் பின்னணியில்தான் நாம் பேச்சுவார்த்தைக்குச் சென்றோம். இந்த வழிமுறைதான் போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கான வழிமுறைமீது எமது சிந்தனையாக இருந்தது.

**சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான போர்நிறுத்த உடன்படிக்கையின் தலையீடு ஏன் தோல்வி கண்டது?**

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலில் போர்நிறுத்த உடன்படிக்கையை எடுத்துக்கொள்வோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சில சமயங்களில் இது தொடர்பில் சாதகமான கருத்துக்களை வெளியிட்டிருந்தாலும், அவர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. பாதுகாப்பு விவகாரங்களில் முழு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி உடன்படிக்கைக்கு எதிரான பிரதிபலிப்புக்களைக் காட்டுவதானது அதனை நடைமுறைப்படுத்துவதற்கு உதவாது.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக தெளிவற்ற தன்மை காணப்பட்டது. பொதுக் கட்டடங்களிலிருந்து வெளியேறுதல் மற்றும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுதல் போன்ற விடயங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். படையினரோடு ஒப்பிடும்போது போர்நிறுத்த உடன்படிக்கையை தம்மால் முடிந்தளவு அமுல்படுத்துவதற்கு புலிகள் முயற்சிக்கவில்லை. அவர்கள் ஆயுதங்களைக் கடத்த முயன்றனர். நாம் சில கப்பல்களை அழித்தோம். படைக்கு ஆட்சேர்ப்பதை அவர்கள் நிறுத்தவில்லை. தொடர் நடவடிக்கைகளுக்காக போர்நிறுத்த உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டிருந்த சில கால எல்லைகள் யதார்த்தமானவையல்ல. உதாரணமாக, பாடசாலைகளை விட்டு வெளியேறுதல் (160 நாட்கள்), கோயில்களை விட்டு வெளியேறுதல் (30நாட்கள்).

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரணைகளை நடாத்துவதற்கு அதிகாரம் கொண்டிருந்ததே தவிர அமுல்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. நாம் உண்மையான நம்பிக்கையுடன் செயற்பட்ட விடயங்களிலும் ஊடகங்கள்கூட எம்மை விரோதமாகவே பார்த்தன.

சமாதான முன்னெடுப்புகள் தோல்வியடைந்தமைக்கு மேலும் பல காரணங்கள் உள்ளன. நிறைவேற்று அதிகாரத்துக்கும் (பொதுஜன ஐக்கிய முன்னணி), சட்டவாக்க அதிகாரத்துக்கும் (ஐக்கிய தேசிய முன்னணி) இடையிலான 'சகவாழ்வு'ம், ஒத்துழைப்பின்மையும் ஒரு முக்கிய காரணம். சில வார்த்தைப் பிரயோகங்களும் சர்ச்சைக்குள்ளாகின. உதாரணமாக, சமஷ்டி எனும் வார்த்தை தெற்கிற்கும், ஒற்றை எனும் வார்த்தை வடக்கிற்கும் மோசமான வார்த்தைகளாகத் தெரிந்தன.

தமிழ் அரசியல் குழுக்களிடையே காணப்பட்ட பிளவும் எமக்குப் பாதகமாக இருந்ததுடன், சில கட்சிகள் மேலும் அழுத்தங்களையும் வழங்கின. சிங்கள அரசியல் குழுக்களிடையே காணப்பட்ட பிரிவினையால் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியாமல் போனது நிச்சயமாக ஒரு தடையாக இருந்தது. இன்றும் இந்த நிலைமையே காணப்படுகிறது. முஸ்லிம் தரப்பும் இங்கு முக்கியமான பிரச்சினையாகும். முஸ்லிம்கள் தாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உடன்படிக்கையின் போது கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும் நம்பினர். இது பெருமளவு உண்மைதான். விடுதலைப் புலிகளின் பதிற்குறிகள் மிகவும் பலவீனமாக இருந்தமையால், இவர்களின் சிரமங்களை எம்மால் தீர்க்க முடியவில்லை.

சமாதான சூழலுக்கேற்றவாறு அரச கட்டமைப்புக்களையும், பொலிஸ், மற்றும் பொதுச்சேவையினையும் மீளமைப்பதில் ஏற்பட்ட தாமதமும் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த முடியாமைக்கு மற்றுமொரு காரணம் எனலாம். சமஷ்டி, அதிகாரப்பரவலாக்கம் போன்ற முக்கிய விடயங்களில் குவிக்கப்பட்ட கவனம் பலவீனமாக இருந்ததும் சமாதானத்துக்கு எதிரான ஒரு நிலைமையாக இருந்தது. தெற்கில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மையால் உந்துதலைப் பெற்றிருக்கக்கூடிய விடுதலைப் புலிகளின் அதியுச்சக் கோரிக்கைகள் அரசாங்கத்தை தர்மசங்கடத்திற்குள்ளாக்கின. சமாதானத்தின் பங்குகள் மிக மெதுவாக வெளிப்பட்டுக்கொண்டிருந்த நிலையில், சமாதான முயற்சிகளை தேவையற்ற வகையில் அவசரப்படுத்தியதால் விரக்தி நிலை தோற்றுவிக்கப்பட்டது.

சில நாடுகள் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதிலும், நிதித்தடை செய்வதிலும் உதவி வழங்கியபோதிலும், சர்வதேச பங்களிப்புகள் வரையறுக்கப்பட்டதாக இருந்தமையும் சமாதான முயற்சிகளைப் பாதித்தன. புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள் தொடர்பில் அண்மையில் கடுமையான சில நடவடிக்கைகளை எடுத்தபோதும், சமாதான முயற்சிகள் அதியுச்ச துணிவுடன் முன்னெடுக்கப்பட்டபோது அவர்கள் நடந்துகொள்ளவில்லை. இதற்கு மேலாக சில அரசியல் குழுக்கள் சர்வதேச நாடுகள் குறித்து உரக்கக் குரல் எழுப்பின.

நோர்வேயை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், சரியோ பிழையோ சமாதானத்தைக் கொண்டுவருவதனூடாக, வடக்குக் கடலில் எண்ணெய் ஆராய்ச்சியை ஆரம்பிக்கவே அவர்கள் முயல்வதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டிருந்தன. சிலர் இலங்கையில் கிறிஸ்தவ ஆதிக்கத்தைக் கொண்டுவர அவர்கள் முயற்சிப்பதாக விமர்சித்தார்கள். அவர்கள் தமிழ் கெரில்லாக்களுக்கு பயிற்சி வழங்குவதாகவும் குற்றம் சாட்டினார்கள். சரியோ பிழையோ இவ்வாறான சிந்தனைகள் இருக்கும்போது 'நான் மீண்டும் சொல்கிறேன் அவை சரியோ,பிழையோ'



**“ ஒரு ஆவணத்தின் மூலம் எம்மால் 10,500 உயிர்களைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது என்பது ஒரு சாதனையே ”**

சாதகமான விடயங்கள் நடைபெறும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

அவர்களுடைய வாசலிலும் பிரச்சினைகள் இருந்தபடியால், ஆரம்பத்திலிருந்தே இந்தியா மிகக் கவனமாகவே செயற்பட்டு வந்தது. எந்தவொரு அரசாங்கமும் கைதூக்கிக்கொள்ள முடியாத தெற்குப் பிரிவு அவர்களுக்கு உண்டு. இன்றுங்கூட அவர்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கிறது. நாம் அவர்களைக் குற்றஞ்சுமத்த முடியாது.

அமெரிக்கா உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கிறது. அதே நிலைப்பாட்டை அமெரிக்கா ஏன் இங்கே எடுக்கவில்லை என்று ஜே.வி.பி. கேள்வியெழுப்புகிறது. இணைத்தலைமை நாடுகளின் ஒரு அங்கமாக இருப்பதற்கும் மேலாக, அமெரிக்கா எமது நாட்டுப் படையினருக்கு ஆயுதங்களையும் புலனாய்வுத் தகவல்களையும் பயிற்சிகளையும் வழங்குகிறது.

இவ்வாறான சூழ்நிலைகளில் போர்நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதும், அதற்கு ஆதரவைப் பெற்றுக் கொள்வதும் மிகவும் சிரமமானது. நாம் மிகவும் சிரமமான ஒரு விடயத்தையே செய்தபோதிலும், இயன்றளவு முயற்சியை எடுத்திருந்தோம்.

**◎ போர்நிறுத்த உடன்படிக்கையினால் அடையப்பட்டவைதான் என்ன?**

முதலில் போர்நிறுத்த உடன்படிக்கை மூலம் நாம் கொலைகளை நிறுத்தினோம். உதாரணமாக கடந்த 70 வருடகால முரண்பாட்டால் 70,000 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சராசரியாக வருடத்துக்கு 3,500 பேர். சில வருடங்களில் இது குறைவாகவே இருந்தது. எனினும், இரண்டு வருட காலத்தில் ஆகக் குறைந்தது 7000 உயிர்களையாவது போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலமாகக் காப்பாற்ற முடிந்திருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் 2004-2005 காலப்பகுதியையும் சேர்த்துக் கணக்கிட்டால் அதன் எண்ணிக்கை 10,500 ஆகும். ஆக, ஒரு ஆவணத்தின் மூலம்

எம்மால் 10,500 உயிர்களைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது என்பது. பௌத்த சிந்தனையின் வழியில் பார்த்தால் ஒரு சாதனையே.


வடக்கிற்கும் கிழக்கிற்கும் சென்று வருவதற்கான வழிவகைகளை நாம் ஏற்படுத்தினோம். போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தீர்களானால், அங்கே கடைகள், சந்தைகள் எல்லாம் மூடப்பட்டு, பாலைவனம் போலவே அது காட்சியளித்தது. ஆனால் போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் நிலைமை முற்றாகவே மாறி வியாபார நடவடிக்கைகள் அங்கு சூடுபிடித்தன.

இந்தப் பிரதேசங்கள் திறந்துவிடப்பட்டமையால் நடமாட்டங்கள் சாத்தியமானது. விடுதலைப்புலி உறுப்பினர்களும் இதன்மூலம் பல்வேறான இடங்களுக்குச் சென்றனர். இந்தியாவிலும் உள்ளூர் முகாம்களிலும் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பினர். வருடக்கணக்காக இந்த முகாம்களில் ஒரு நரக வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்துவந்தனர்.

பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால், வழமையாக 2 வீதத்திற்கும் குறைவாகவிருந்த வடக்குக் கிழக்கின் பொருளாதாரப் பங்களிப்பு போர்நிறுத்த உடன்படிக்கையின் இரண்டு வருட காலப்பகுதியில் 12% - 14% வரை அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது நாட்டு மக்களின் பொருளாதார எழுச்சியைக் காட்டியது. இதன் விளைவாக தெற்குச் சந்தைக்கு உற்பத்திப் பொருள்கள் வந்தமையால் இது எல்லை அதிகம் பாதித்தது.

போர்நிறுத்த உடன்படிக்கை மக்களின் மனப்பாங்கிலும் மாற்றங்களைக் கொண்டுவந்தது. வடக்கிலுள்ள சாதாரண மக்கள் சிங்களவர்களை முரட்டுப் படையினர் என்றும் காக்கி உடை தரித்தவர்கள் என்றுமே நினைத்திருந்த நிலை மாறி அவர்கள் அனைவரும் மனிதர்களே எனப் பார்க்கும் மனப்பக்குவம் ஏற்பட்டது.

நான் 1995 இல் ஒரு முறை அமைச்சர் தொடங்கொட அவர்களுடன் வடக்கிற்குச் சென்றிருந்தபோது, பாடசாலை மாணவர்கள் நாம் மனிதர்கள்தானா என்று தொட்டுப் பார்த்தனர். சில வருடங்களுக்கு முன்பிருந்த மனப்பாங்கு இதுதான். ஆனால், பின்னர் ரணில் விக்ரமசிங்க நல்லூர் கோவிலுக்குச் சென்றபோது ஆயிரக்கணக்கான மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு தமது அன்பை வெளிப்படுத்தினார்கள். நாம் சாவகச்சேரிக்குச் சென்றபோது அந்த மக்கள் எம்மை அன்புடன் வரவேற்றதை இன்றும் மறவாமல் நினைத்துப் பார்க்க முடிகிறது.



போர்நிறுத்த உடன்படிக்கையின் அனுகூலங்களாக, மக்களின் சுதந்திரமான நடமாட்டம், பொருளாதார நலன்கள், வியாபார வளர்ச்சி, அதிகரித்த புரிந்துணர்வு மற்றும் சமாதானத்தின் மீதான அதீத நம்பிக்கை எனப் பலவற்றைக் குறிப்பிடமுடியும். இது ஒன்றும் அதிகம் இல்லை என்று சிலர் வாதிக்கக்கூடும். ஆனால், நீங்கள் எங்காவது ஓரிடத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும். இந்த விளையாட்டில் விமர்சனங்களையும், நையாண்டிகளையும் நாம் எதிர்பார்க்கத்தான் வேண்டும். நாம் மிக அதிகளவில் இவற்றைச் சந்தித்தோம்.

**போர்நிறுத்த உடன்படிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டமை தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

உடன்படிக்கையின் 4ஆவது சரத்தின் பிரகாரம் இதற்கு இடமிருக்கிறது. இது என்றோ ஒருநாள் நடக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. போர்நிறுத்த உடன்படிக்கையின் ஒரு அனுகூலம் என்னவென்றால், அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மீறல்களை சுட்டிக்காட்டுவதற்கான ஒரு கருவியாக அது இருந்தது. முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கும் அதற்கான தீர்வினைக் காண்பதற்குமான வாய்ப்பு இருந்தது. சில சமயங்களில் முறைப்பாடுகள் உரிய முறையில் அணுகப்படவில்லை என்பது உண்மைதான் என்றாலும், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கும், மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய ஒரு பொறிமுறை இருந்தது.

**“போர்நிறுத்த உடன்படிக்கையின் அனுகூலங்களாக, மக்களின் சுதந்திரமான நடமாட்டம், பொருளாதார நலன்கள், வியாபார வளர்ச்சி, அதிகரித்த புரிந்துணர்வு மற்றும் சமாதானத்தின் மீதான அதீத நம்பிக்கை எனப் பலவற்றைக் குறிப்பிடமுடியும்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நடைபெறும் நிகழ்வுகள் குறித்து கண்காணிப்பாளர்கள் அறிக்கையிட்டதால் இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதை சர்வதேச சமூகமும் அனுசரணையாளர்களும் சரியாக அறிந்துகொள்ள முடிந்தது. சுதந்திரமான அறிக்கையிடல் சாத்தியமாக்கப்பட்டிருந்தது.

**“ போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்றும் பைபிள் அல்ல. அதற்கு மேலும் பெறுமானம் சேர்க்கும் வகையிலான பொறிமுறைகளை நாம் வளர்த்தெடுத்திருக்க வேண்டும் ”**

நாம் ஏதாவது பொதுவான விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் அதுகுறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கூடாக அறிந்து கொள்ள முடியுமாயிருந்தது. அது மிகவும் பிரயோசனமாகவுமிருந்தது. போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்றும் பைபிள் அல்ல. அதற்கு மேலும் பெறுமானம் சேர்க்கும் வகையில் அதுப் பொறி முறைகளை நாம் வளர்த்தெடுத்திருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, விடுதலைப் புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளூடாக ஆயுத தளபாடங்களை எடுத்துச்செல்ல முடியாது என உபசரத்து 1.7 கூறுகிறது. இரு தரப்புக்கும் இது பொருந்தும். ஆனால், விடுதலைப்புலிப் போராளிகள் முல்லைத் தீவிலிருந்து மட்டக்களப்பிற்கு தமது சொந்தப் [illegible] துப்பாக்கிகளுடனும், ஆர்.பீ.ஜிகளுடனும் செல்வதற்கான ஏற்பாடுகளை கண்காணிப்பாளர்களூடாக நாம் செய்து கொடுத்தோம். இதை கடுமையாகப் பார்ப்பீர்களானால் இது ஒரு மோசமான போர்நிறுத்த உடன்படிக்கை மீறல். ஆனால், பாதுகாப்புச் செயலாளர், கடற்படை, சமாதான செயலகம், மற்றும் கண்காணிப்புக் குழுவினரின் ஒத்துழைப்புடன் எம்மால் இதனைச்செய்ய முடிந்தது. புலிகளைப் பேருந்துகளில் பயணிக்கச் செய்வதில் இருக்கக்கூடிய ஆபத்துக்களை இது குறைத்தது.

அவர்கள் பேருந்தில் பயணிக்கும்போது யாராவது ஒரு சட்டத்துக்குக் கட்டுப்படாத நபர் அவர்கள் மீது கண்டுத் தாக்குதலை நடாத்தினால் அது சமாதான முன்னெடுப்புக்களை முடிவுக்குக் கொண்டுவரும் நிலைமையாக அமைந்திருக்கும். எனவேதான் நாம் அதற்கு ஒரு மாற்று வழிமுறைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சிந்தித்து அதனை வெற்றிகரமாகச் செய்து முடித்தோம். விடுதலைப் புலிப் போராளிகளை இவ்வாறு பல தடவைகள் நாம் போக்குவரத்தில் ஈடுபடுத்தியபோதும், இரு தரப்புக்களாலும் ஒரு துப்பாக்கிச் சூடுதானும் நடத்தப்படவில்லை. போர்நிறுத்த உடன்படிக்கையை ஒரு பைபிளைப் பார்க்கக்கூடாது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். இன்று இவ்வாறான புதிய சிந்தனைகளெல்லாம் தொலைந்துபோயின.

**போர்நிறுத்த உடன்படிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டதால் எவ்வாறான பாதக விளைவுகள் ஏற்படலாம்?**

குறைந்தபட்சம் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுயாதீன நபர்களிடம் முறைப்பாடுகளைச் செய்வதற்கோ, கண்காணிக்கவோ, நடுவராகக் கடமையாற்றவோ, சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தவோ யாரும் இல்லை. அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் இராணுவம் மற்றும் நிர்வாகத் தரப்பினரால் வழங்கப்படும் தகவல்களைத் தவிர, சுயாதீனமான தகவல்களைப் பெறும் மார்க்கம் இருக்காது. இறுதியில், பிரிகேடியர் உதய நாணயக்காரவோ அல்லது லக்ஷ்மன் ஹுலுகல்லவோ அல்லது கிளிநொச்சியிலிருந்து இராசையா இளந்திரையனோ சொல்பவற்றைத்தான் நீங்கள் நம்பவேண்டிவரும். ஒரு சுதந்திரமான பார்வைக்கோணம் எதுவும் கிடைக்காது.

கண்காணிப்பாளர்களின் சுதந்திரத்தன்மை குறித்தும் சந்தேகங்கள் எழுப்பப்படவே செய்தன. விடுதலைப் புலிகளின் கப்பல்கள் முல்லைத்தீவுப் பகுதிக்கு வந்திருக்கும் தகவல்களைத் தருவதற்கு யாரும் இருக்கவில்லை என்று ஒருவர் கடுமையாக வாதிடக்கூடும். இவ்வாறான குற்றச்சாட்டுக்களை ஊக்குவிக்கும் வகையிலான நிலைமைகளுக்கு - அது அவ்வாறு நடந்திருந்தால் - நாம் முகம் கொடுக்க நேர்ந்தது துரதிர்ஷ்டவசமானது.

ஆனால், ஒப்பீட்டு ரீதியாக சுதந்திர கண்காணிப்பாளர்களான ட்ரொண்ட் புருஹொவ்டே அல்லது ஹாக்ருப் ஹொக்லண்ட் ஆகியோரை மறந்துவிடக்கூடாது. இவர்களுக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவே செய்தன. இதனால்தான் ஒப்பீட்டு ரீதியாக என்று சொல்கிறேன். யார்தான் வாழ்க்கை முழுவதும் தவறிழைக்காமல் இருந்துள்ளனர்?

**போர்நிறுத்த உடன்படிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டதால் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிட்டோமா அல்லது விலக்கிக் கொள்ளப்படுவதற்கு முன்னரே அது ஒரு உயிரற்ற கடிதமாகிவிட்டதா?**

இருதரப்பும் விட்ட தவறுகளாலேயே அது ஒரு உயிரற்ற காகிதமாகிப்போனது. இதில் புலிகளின் பங்கு அதிகமானது. போர்நிறுத்த மீறல்கள் மீள மீள நிகழ்ந்தனதான். ஆரம்பத்தில் அவற்றின் எண்ணிக்கை உயர்வாக இருந்தாலும், இதில் பெரும்பாலானவை சிறிய மீறல்களாகவே இருந்தன. பாரிய மீறல்கள் நூற்றுக்கணக்கிலேயே இடம்பெற்றிருந்தன. ஆயிரக்கணக்கிலல்ல.

ஏன் சிலர் போர்நிறுத்த உடன்படிக்கையில்தான் நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்? நான் உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல உதாரணம் ஒன்றைச் சொல்கின்றேன். நான் சேவையிலிருந்தபோது, சில பிரச்சினைக்குரிய விடயங்களை அரசாங்க அதிபர் மூலமாகவோ அல்லது யாழ் ஆயர் மற்றும் கண்காணிப்புக்குழு மூலமாகவோ கலந்து வைத்தேயுரிய பாணியில் அவற்றைக் கையாண்டேன். விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மூலமாக வந்து திணிக்கப்பட்ட பிரச்சினைகளை இவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமாக நான் தீர்த்துக்கொண்டேன். இராணுவ ட்ரக் வண்டி ஒருவரை அடித்துக் கொன்ற சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு நடைபெற்றது.

2003 இல் இறுதியில் நான் விலகிக்கொண்டதன் பின்னர் என்ன நடந்தது? ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலப்பகுதியில் ஒரு சம்பவம் இடம்பெற்றபோது அவர்கள் யாருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாது நேரடியாக பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவை அனுப்பிவைத்தார்கள். அவர் உயிருடன் திரும்பி வரவேயில்லை. இப்பொழுது இவ்வாறான உத்தியோகப்பற்றற்ற வழிமுறைகள் குறித்து அதிகாரிகள் சிந்திக்கக்கூடும்.

ஆற்றைக் கடப்பதற்காக மட்டுமே நான் போர்நிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்தினேன். பின்னர் நான் அதனை எனது தோள்களில் சுமந்து திரியவில்லை. நான் ஏனைய வழிவகைகளான ஆயர், அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரையே பயன்படுத்திக் கொண்டேன். போர்நிறுத்த உடன்படிக்கையிலுள்ள சில முன்னெடுப்புக்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். போர்நிறுத்த உடன்படிக்கை இல்லாமல் மறுதரப்புகளால் ஏற்றுக்கொள்ளத்தக்க முன்னெடுப்புக்கள் எதனையும் நீங்கள் மேற்கொள்ள முடியாது. விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக நாம் செய்ததுபோல, ஒரு நல்ல நோக்கத்துக்காக போர்நிறுத்த உடன்படிக்கையை மீறுவதற்காகவேனும் அது இருக்கவேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பலவீனம் என்று குற்றஞ்சாட்டப்பட்டாலும் சில சிறுமட்டும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டபோது படையினர் கடைப்பிடித்த பொறுமைக்காக நான் அவர்களுக்குச் சிரம் தாழ்த்துகிறேன். உயர் பாதுகாப்பு வலயத்தை உடைத்துக்கொண்டு புலிகள் வந்தபோதும், கிருடை தொடர்பான வழிமுறைகளை அவர்கள் மீறியபோதும் படையினர் மிகவும் பொறுமையாக இருந்தனர். இது போர்நிறுத்த உடன்படிக்கையின் காரணமாக நடந்ததாக இருந்தாலும், நிச்சயமாக அவர்களது ஒழுக்கமும் இதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

பருத்தித்துறையிலுள்ள எமது முகாமுக்குள் பொதுமக்கள் உடைத்துக்கொண்டு நுழைந்தபோது ஒரு துப்பாக்கி வேட்டுக்கூடத் தீர்க்கப்படவில்லை. படையினரின் ஒழுக்கம் மெச்சத்தக்கது. இராணுவம் முழுவதுமாக ஒழுக்கமானதாக இருந்தது. படை முன்னரங்கிலுள்ள பதுங்கு குழிகளை உடைத்து எரிக்கும் நடவடிக்கையில் புலிகள் ஈடுபட்டபோது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என்றால், அது அவர்களுடைய பலத்தையே காட்டுகிறது. இதற்குப் பிரதான காரணம் பொதுமக்கள் ஆயுதங்களின்றி இருந்தமையே. யாழும் கஞ்சிக்குடிச்சாறில் அவர்கள் இதனை முயற்சித்தபோது ஏழு பேர் விசேட அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டது உண்மையே. ஆனால், அந்தத் தாக்குதலின்போது தாக்குதல் தாரிகள் ஆயுதங்களைத் தாங்கியிருந்தனர்.

**இந்தப் பின்னணியில், போர்நிறுத்த உடன்படிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டமை சரியானது என நீங்கள் உணர்கிறீர்களா?**

போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைப்படுத் தப்படாமல் இருந்திருந்தால், கதை வேறாக இருந்திருக்கும். ஆனால் அது பெரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கும் என்றே நான் நினைக்கிறேன். சிலவேளை இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கை விலக்கிக்கொள்ளப் பட்ட நிலைமையிலிருந்து வெளியே வருவதற்காக புதியதொரு போர்நிறுத்த உடன்படிக்கையைக் கைச்சாத்திடப்படவும் முயற்சிக்கப்படலாம்.

**“ நாம் வார்த்தைகள் மூலம் செய்ததை இப்போது துப்பாக்கி வேட்டுக்கள் மூலம் தொடர்புறுத்துகிறார்கள் ”**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும், அரசாங்கத்துக்கு இருந்த அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாக, போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவது என்ற முடிவை மாற்றுவதற்கு அதற்கு இடமளிக்கவில்லை. வார்த்தைகளுக்குப் பதிலாக துப்பாக்கி வேட்டுக்கள் இடம்பிடித்துக்கொள்ளும்போது உடன்படிக்கையை இல்லாதொழித்ததை எவ்வாறு நியாயப்படுத்துவது? இப்போது துப்பாக்கி வேட்டுக்கள் மூலமே விடயங்கள் சொல்லப்படுகின்றன. நாம் வார்த்தைகள் மூலம் செய்ததை இப்போது துப்பாக்கி வேட்டுக்கள் மூலம் தொடர்புகொள்கிறார்கள்.

**இன முரண்பாட்டிற்கான நிலையான தீர்வை எவ்வாறு காணலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

இதற்கு அரசியல் ரீதியாகவே தீர்வு காண முடியும். ஜனாதிபதியும் அதனைத் தான் சொல்கிறார். முன்னைய ஜனாதிபதிகளும் இதையே சொன்னார்கள். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டனர். ஜெனரல் கொப்பேகடுவ போன்ற மூத்த இராணுவ உயரதிகாரிகள் கூட இதனைத்தான் சொன்னார்கள். ஜெனரல் சரத் பொன்சேகா கூட அண்மையில் இதைத்தான் காரணங்கள் குறிப்பிட்டுச் சொன்னார்.


இது ஒரு அரசியல் பிரச்சினை. இராணுவப் பிரச்சினை அல்ல. முதலில் இது தமிழர்களின் மனிதாபிமானப் பிரச்சினை. அது இராணுவப் பிரச்சினையாக மாற்றப்பட்டிருக்கிறது. இது தற்போது இராணுவ அளவுகோல் கொண்டே கையாளப்படுகிறது. மனிதாபிமானப் பிரச்சினைகளை ஒரு போதும் இராணுவ வழிமுறைகளால் தீர்க்க முடியாது. அதற்கு மனிதாபிமான வழிகளிலேயே தீர்வு காண முடியும். மனிதாபிமான வழிமுறைகள் அரசியல்வாதிகளிடமிருந்தும், முழுச் சமுதாயத்திடமிருந்துமே வெளிப்பட முடியும்.

இராணுவ நடவடிக்கைகள் இராணுவரீதியான முடிவுகள் மாத்திரமல்ல, அது அரசியல் ரீதியாக எடுக்கப்படும் முடிவுகளும் கூட. அவர்கள் சொல்வதுபோல், ஜெனரல்களின் பொறுப்பில் மட்டும் விடப்பட்ட ஒரு விடயமாக போர் இருப்பதில்லை. இராணுவ வழிமுறைகூட இறுதியில் ஒரு அரசியல் தீர்விலேயே வந்து முடியவேண்டும். மோதல்கள் ஒருபோதும் தீர்வைக் கொண்டுவராது. அது ஒருவேளை தீர்வுக்கான பாதையை ஏற்படுத்தலாம். ஆனால், இறுதி அரசியல் தீர்வுதான் வழங்கப்படவேண்டும்.

**இதுதான் ஒவ்வொரு நாடுகளினதும் அனுபவமாகவும் இருக்கிறது. ஈற்றில் படையினரும் விடுதலைப் புலிகளும் தத்தமது உடன்பிறப்புக்களைத்தான் கொலை செய்கிறார்கள். அப்படியிருக்க, கொலைகள் எப்படி ஒரு தீர்வாக அமைய முடியும்?**

வடக்குக் கிழக்கில் வாழும் மக்களின் இதயங்களை சமாதானத்தின் மூலம் அரசு வெல்லவேண்டும். தமிழர்களை மாத்திரமன்றி, முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் சேர்த்துத்தான். எல்லா மக்களையும் நாம் ஒன்றிணைக்கவேண்டும். அரசியல் தீர்வு மிகவும் அவசியமான ஒன்று. ■

## வெற்றிகரமான உடன்படிக்கைகளின் அம்சங்களை போர்நிறுத்த உடன்படிக்கை கொண்டிருக்கவில்லை



கலாநிதி தயான் ஜயதிலக
இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதி
ஐக்கிய நாடுகள் சபை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இந்த உடன்படிக்கைக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் ஆதரவு இருந்திருக்கவில்லை. இதனால், ஆரம்பம் முதலே இது அரசியல் ரீதியான சட்ட வலுவைக் கொண்டிருக்கவில்லை.

இந்த உடன்படிக்கை இரண்டு தரப்புக்களின் கட்டுப்பாட்டு எல்லைகளை வரையறுத்திருப்பது இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கும் அச்சுறுத்தலானது என்று அப்போதைய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பாராளுமன்றத்தில் எச்சரித்திருந்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் முக்கியமான அம்சங்களாக மூன்று விடயங்களைக் குறிப்பிடமுடியும். மோதலில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களுக்கும் இடையிலான படைவலுச் சமநிலை, தன்னிச்சையான சலுகைகளற்ற பரிமாற்று நெறிமுறை, ஆயுதக் களைவும், அரசு அல்லாத பங்காளி ஜனநாயகமயப்படுத்தப்படலும் என்பனவே அவை. வெற்றிகரமான போர்நிறுத்த உடன்படிக்கைகளில் காணப்படும் இந்த விடயங்கள் ஒவ்வொன்றும் நேர்வே அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையில் இருக்கவில்லை. போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட விடுதலைப் புலிகளுக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததுபோல, ஜனநாயக வழிக்குத் திரும்பிய ஏனைய கட்சிகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அதனை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அயர்லாந்து விடுதலை இராணுவம் போலன்றி, விடுதலைப் புலிகள் தமது அரசியல் பிரிவு வளர்ச்சியடைவதற்கு இடமளிக்கவில்லை.


இலங்கை அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து திடீரென விலகிக்கொண்டுவிட்டதாக குற்றஞ்சாட்டப்படுவது தவறானது. உண்மையில் விடுதலைப் புலிகள்தான் 2003இல் தன்னிச்சையாக இந்த உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொண்டனர்.

(ஜெனீவாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஆற்றிய உரையிலிருந்து மூலம்: சண்டே ஒப்சேவர்) ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கை




அதிகாரப்பரவலாக்கலுக்கான அடிப்படையாக அரசியலமைப்புக்கு 13 வது திருத்தச்சட்டமூலம் முன்வைக்கப்பட்டு மாகாணசபை முறை உருவாக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாண ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட பல கட்சிகள் ஆரம்பம் முதலே இதனை எதிர்த்தன. பிரதான தரப்பான விடுதலைப் புலிகளும் இதனை ஏற்க மறுத்தனர். 2006 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில், ஜே.வி.பி.யின் முயற்சியால் உயர்நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டன.

## 2000 அரசியலமைப்புத் திருத்த யோசனை

தமிழ் மக்களுக்கு மேலதிக அதிகாரங்களைப் பொறுப்பளித்தல் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த இந்தச் சட்டமூலத்தை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் எரித்ததுடன் இந்த முயற்சி முடிவுக்கு வந்தது.

## 2002 போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை



இலங்கை அரசாங்கப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன், நோர்வேயின் மத்தியஸ்தத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 பெப்ரவரி 22இல் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. தொடர்ந்து 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இரண்டு தரப்பும் ஈடுபட்டன.

2003 ஏப்ரலில் புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து ஒதுங்குவதாக அறிவித்தனர். 2003 ஒக்டோபரில் ஐ.தே.மு. அரசாங்கத்தின் மூன்று பிரதான அமைச்சுக்கள் ஜனாதிபதி சந்திரிகாவினால் பொறுப்பேற்கப்பட்டதுடன் இந்த முயற்சிகள் செயலிழக்கத் தொடங்கின. 2008 ஜனவரி 16ஆம் திகதியுடன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிக்கொண்டது.

## 2006-2008 சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஒரு தென்பகுதி இணக்கப்பாட்டைக் காணும் நோக்குடன் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டது. 63 கூட்டங்கள் கூடிய இந்தக் குழு 2008 ஜனவரி 23 இல் 13வது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு பக்க யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

இது ஒரு காலங்கடந்த அர்த்தமற்ற யோசனை என்று பல தரப்புகளாலும் விமர்சிக்கப்பட்டுள்ள அதேவேளை, 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று ஜே.வி.பி. உள்ளிட்ட சில கட்சிகள் எதிர்ப்புக்காட்டி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களின் வாழ்க்கையைப் பேணிப் பாதுகாக்கவும்!

அண்மைக்காலங்களில் தொடர்ச்சியாகவும் அதற்கு முன் சிற்சில சந்தர்ப்பங்களிலும் குண்டுகளை வெடிக்க வைத்ததன் மூலமும், பல்வேறு தாக்குதல்களை நடத்தியதன் மூலமும் கைக்குழந்தைகள், மாணவர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். யுத்தம் புரியும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட எந்தவொரு தரப்பினருக்கும் போரின் மூலம் எதையும் வெற்றிகொள்ள முடியாது என்பதை நாம் தினசரி எதிர்நோக்கும் சம்பவங்களினூடாக மிக ஆணித்தரமாக எடுத்துக்கூறுகின்றோம்.

மன்னார் பெரியமடு பிரதேசத்திலும், தலைநகரிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் பாடசாலைச் சிறார்கள் பலர் கொல்லப்பட்டனர். தாம் எவ்வகையிலும் பங்களிப்புச் செய்யாத ஒரு யுத்தத்திற்காகத் தமது உயிர்களைத் தியாகம் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ள சிறார்களுக்கு, தாய்மார்களுக்கு மற்றும் தந்தையருக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமை மிகவும் கவலைக்குரியது.

இச்சிறார்கள் பிறப்பதற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தத்திற்கும் இவர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்ற காரணியே மிகவும் கொடூரமானது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும், ரீ.எம்.வீ.பீ. அமைப்பும் சிறுவர்களை யுத்தத்தில் இணைத்துக்கொள்வ தானது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

யுத்தத்தின் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழும் சாதாரண பொதுமக்களை இவ்வாறு கொன்றொழித்தல் உலக வரலாற்றில் இடம்பெற்ற எந்தவொரு மிலேச்சத்தனமான செயல்களுக்கும் இரண்டாம் பட்சமானது அல்ல. இத்தகைய அழிவுகளைத் தடுப்பதற்கான மாற்று வழிகளை எடுக்கும் உண்மையான அக்கறை ஆட்சியாளர்களுக்கு இருக்கவில்லை என நாம் நம்புகின்றோம். எவ்வாறாயினும், அவ்வாறு தடுப்பதற்கான எல்லைகளைத் தாண்டியுள்ளபோதிலும் இந்த யுத்தத்தினால், இரண்டு தரப்பினரும் பொது மக்களுக்கு இவ்வாறான கொடுமைகளைப் புரிவது எமது வேதனைகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

யுத்தம் இடம்பெறும்போது பொதுமக்களைப் பாதுகாக்கவேண்டியது யுத்தத் தரப்பினர் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒரு சம்பிரதாயமாகும். ஆனால், அண்மைக் காலங்களில் பழிக்குப் பழி வாங்குவதற்காக பொதுமக்கள் பாவிக்கப்படுவதையே எமது நாட்டில் காணக்கூடியதாக உள்ளது. மேலும், யுத்தத்தின் செலவீனங்களால் நாட்டு மக்கள் மாபெரும் பொருளாதாரச் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறானதோர் நிலைக்கு அவர்கள் தமது உயிர்களால் ஈடுசெய்யவேண்டியுள்ளமை மிகவும் வேதனைக்குரியது.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட சிறார்களினதும் மற்றும் பொதுமக்களினதும் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் ஏற்பட்ட துன்ப துயரங்களை எவ்வழியிலும் ஈடுசெய்ய முடியாது. அதேவேளை, அவ்வாறு படுகொலைசெய்யும் மனிதாபிமானமற்ற அரசியலில் ஈடுபடுபவர்கள் எந்தத் தரப்பினராக இருந்தாலும் நாம் அதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதுமட்டுமல்லாது, எவ்வித இனபேதமுமின்றி மக்கள் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில், பூரண சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கையை நல்வழிப்படுத்துவது ஆட்சியாளர்களின் கடமையாகும். அச்சமும், சந்தேகமும் இன்றி வாழக்கூடிய உரிமையை நிலைநாட்டுமாறு பொறுப்பு வாய்ந்தவர் களிடம் நாம் வலியுறுத்துவதோடு, பொதுமக்களுக்கு எதிரான அனைத்துக் கொடூரமான நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

CPA

Centre for Policy Alternatives

Design & Print
ECWays
Phone: 5673483

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org